இரண்டு புருஷ சிரேஷ்டர்கள்

No. 1785

மந்திரி திம்மரசு
ஷாப்ட்ஸ்பரி பிரபு



ஓர் உபாத்தியாயரால்
இயற்றப்பட்டது.

சென்னை
சாரதா பப்ளிஷிங் கம்பெனி,
1922

மந்திரி திம்மரசு.

ஷாப்ட்ஸ்பரி பிரபு—ஓர் தேசோபகாரி.

1804—1885.

மந்திரி திம்மரசு.

I இளமைப்பருவம்

இம்மகான் ஓர் ஆந்திர நியோகிப் பிராமணர். கௌண்டின்ய கோத்திரத்தவர். இவரது தந்தையும் மூதாதையும், கொண்டவீடுஸமஸ்தான அரசர்களுக்கு மந்திரிகளாயிருந்தனர். பதினைந்தாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் வடக்கே ஒரிஸ்ஸா தேசத்துள்ள கஜபதி மன்னன், இக்கொண்ட வீடு ஸமஸ்தானத்தின்மேல் படையெடுத்துச்சென்று அரசரை முறியடித்து ராஜ்யத்தைத் தன் வசமாக்கிக் கொண்டனன். ஆதலால், திம்மரசின் தந்தை ராசிராஜு, தம் மந்திரிபதவியை யிழக்கலாயிற்று. "பட்டகாலிலே படும்" என்பது போலவே தம் சொத்துக்கள் யாவற்றையு மிழந்து, கொண்டவீடுகளை விட்டுநீங்கி அவர் வெளியூருக்குப்போகவும் நேரிட்டது. ஆயினும் மனவலிமை குறையாமல் 'அவனன்றி யோரணுவு மசையா' தன்றோ என்ற உண்மையையுன்னி ராசிராஜு தம் பத்னியுடன் கூட ஊருக்கு வெளியேகி வெகுதூரம் பாதசாரியாய் நடந்து அக்காலத்தில் பிரஸித்தமா யிருந்த சந்திரகிரி ஸமஸ்தானத்துக்கு வந்து சேர்ந்தார்.

ஆ, என்ன ஆச்சரியம்! காலத்தின் விந்தையை அறியற்பாலர் எவரே! என்றும் விலையுயர்ந்த ஆடையுடுத்து அறு சுவையன்னமுண்டு, பலர் புடைசூழ தேவேந்திரன் கோயி லென்ன விளங்கும் மாளிகையி

வினிதமர்ந்து துதிபாடகர் ஏத்த, பிரஜைகள் பெரிது முவந்து 'இம்மகான் நீதி என்னே! என்னே இவர தன்பு! இவரன்றோ கருணைவள்ளல்!' என்றென்றியம் பிப்போற்ற, அரசனும் அகமகிழ்ந்து 'ராசிராஜுகாரு வன்றோ இவ்விராஜ்ய பாரந்தன்னைத் தாமேயேற்றுக் கொண்டு எனக்கும் பேருதவி புரிகின்றனர், இதன் மாண்பை எங்ஙனம் செப்புவேன்' எனப்புகழ இனிது காலங்கழித்த நம் ராசிராஜு, சந்திரகிரிப்பதிக் குட் புகுந்து, பரதேசிபோலோடியாடித் தாமும் ஒருகாலத் தில் கீர்த்தியும் சிறப்பும் பேரும் எய்தினம் என்ற எண்ணமும் அறவே ஒழியுமாறு வறுமையி லாழ்ந்து, என்றும் துக்கமே குடிகொண்ட மனத்தினராய்க் கஷ்ட ஜீவனம் செய்ய நேர்ந்ததே! அந்தோ!

இன்மையினின்னாத தியாதெனி னின்மையி
னின்மையே யின்னாதது.

காலக்கிரமத்தில் இவருக்கு ஒரு பெண் குழந்தையும் இரண்டு ஆண் குழந்தைகளும் பிறந்தார்கள். இவ்வாண்மக்களில் மூத்தவன் தான் நம்திம்மரசு. ஆயினும் வறுமை தசை மாறவேயில்லை. சிலவருஷம் இவ்வாறே கழித்துத் தந்தை காலமாயினர். குழந்தைகளும் அநாதர்களாயினர்.

II இளமைப் பருவம் (தொடர்ச்சி)

தந்தை இறந்த காலத்தில், திம்மரசுக்குப் பத்துப் பதினொரு வயதுக்கு மேலில்லை. தன் தமக்கையும் தம்பியும் இளம் பிராயத்தினர்களே. ஆகவே இவர்

களது கால க்ஷேபம் முன்னிலும் கஷ்டமாகவிருந்தது. தெய்வவசத்தால் இவனது தூரச்சுற்றத்தவர் ஒருவர் தன்தமக்கையை மணந்து ஊர் போய்ச்சேர, இவ்விரு சகோதரர் மாத்திரமே சந்திர கிரியில் வசித்துக் காலங்கழிக்கலாயிற்று. ஒரு நாள் திம்மரசு ஊருக்குப் பக்கத்திலுள்ள அடவிக்கு ஏதோ ஒரு வேலையின் நிமித்தம் போனான். அங்கே வெயிலில் வெகுநேரம் சஞ்சரிக்க நேர்ந்தது. அது காரணம் பற்றி ஊருக்குத்திரும்பி வருங்கால் மிகக்களைத்துத் தளர்ச்சியடைந்திருந்தான். வழியில் நிழலடர்ந்த ஓர் ஆலமரத்தடியில் வரவே இனிச் செல்ல வொண்ணாச் சோர்வுற்றவனாகிக் கீழே படுத்துச்சற்று நேரம் உறங்கினான்.

ஆகாயம் நிர்மலமாய்த் தோன்றியது. கதிரவன் மேற்றிசைசாய்ந்து தன் பொற் கிரணங்களை நாற்றிசையும் வீசி எப்பொருளும் பொன்மய மாகும்படி விளங்கினான். அச்சமயம் உயர்ந்த தோள்களும் நீண்டகைகளும் அகன்ற மார்பும் பரந்த கண்களும் விசால நெற்றியும் கம்பீரத் தோற்றமும் வாய்ந்த ஓர் சித்த புருஷர் அக்காட்டின் வழியே சென்றார். அவர் திம்மரசு படுத்துறங்கு மரத்தடியிலே வந்தார். சூரியபிரகாசத்தினால், தூரத்திலேயே விருட்சத்தடியில் யாரோ சிறுவன் ஒருவன் அயர்ந்து நித்திரைசெய்கிறா னெனத் தெரிந்து கொண்டார். சமீபத்தில் வரவே அச்சிறுவனது தலைப்பக்கத்தில் ஓர் கிருஷ்ண சர்ப்பம் தனதகன்ற படத்தை விரித்துச் சூரிய வெப்பத்தை முகத்தினின்று நீக்கு மாறு குடைபிடிப்பது என்ன நிறுத்தி மகிழ்வுற்றது போல் காணப்பட்டது. இவரைப்பார்த்ததும் அச்சர்ப்பம் சரசர வென்று விரைவினோடி ஒரு

புற்றில் மறைந்தது. சித்த புருஷர் ஆச்சரிய மெய்திச் சிறுவனிடத்தில் கருணை கூர்ந்து மெல்ல அவனை யெழுப்பி, 'குழந்தாய்! உனக்கு மங்களம் உண்டாகுக. நீ வெகுசீக்கிரத்தில் ராஜ்யாதிகாரப் பதவியைப் பெறுவாய். இனி ஒருபோதும் இம்மாதிரி தனியே உறங்கற்க. சீக்கிரம் வீடுபோய்ச்சேர்! எனவுரைத்தார். திம்மரசும் சந்தோஷ முற்றவனாய் அப்பெரியவரதடி வணங்கி அவரது திவ்வியவாக்கை நினைந்து நினைந்து ஆச்சரிய முற்றவனாய்த் திரும்பி ஊருக்குப் புறப்பட்டான்.

தெருவில் தோழர்களுடன் விளையாடிக்கொண்டிருந்த தன் தம்பியைத் தனியே யழைத்துக் காட்டில் நடந்த விருத்தாந்தத்தை அவனிடம் திம்மரசு சொன்னான். இதைக்கேட்ட தம்பி, பொங்கிய சிரிப்பை அடக்க முடியாமல் 'கொல்' லென நகைத்தான். மற்ற சிறுவர்களும் ஓடிவந்து என்ன? என்ன? என்று வினவத் தம்பி தன்தமையன் சொன்ன கதையை அவர்களுக்கு உரைத்தான். எல்லோரும் கைகொட்டிப் பெருநகைசெய்த பிறகு, அவர்களுள் ஒருவன் 'திம்மரசே! உனக்கு மந்திரிப்பதவிகிடைப்பின் எனக்கு ஒருதாசில் உத்தியோகம் தரவேணும்' என்றான். 'அடேபோடா, அந்தஸமயம் நம்மைத் திரும்பிக்கூடப் பார்க்கமாட்டானே' எனப்பரிகசித்தான் வேறொருவன். திம்மரசு நீதி செலுத்தும் ராஜ்யத்தில் வெகுபேர்கள் இருப்பார்கள்; யார் என்றால், நான்கு கழுதைகள், எட்டுக்குட்டிச்சுவர்கள் என்றான் மற்றுமொருவன். இவ்வாறு ஒவ்வொருவனும் ஏதேதோ பரிகாசமொழிகளைச் சொல்ல, திம்மரசு வெட்கித் தலைகுனிந்து மௌனமாய் வீடுசேர்ந்தான்.

இரவில் அன்னமுண்டு படுக்க, நித்திரை யற்றவனாய்த்திம்மரசு வெகுநேரம் காட்டில் நடந்த சம்பவங்களைப் பற்றி யோசித்தான். 'என்னே! அத்திவ்ய புருஷர் யாரோ! அவரை இதற்குமுன் பார்த்திலேன். திடீரெனவந்து 'நீ ராஜ்ய பரிபாலனம் செய்யும் பதவியை யடைவாய்' எனச்சொல்லுவானேன்? அவரை நோக்கின் பரிகசிப்பவராகவாவது தோஷபுத்தியுடையவராகவாவது தோற்றவில்லையே! அவரது மிருதுவான அருள் நோக்கும் இனிய குரலும் அமுதவாக்கும் என் இருதயத்தைக் குளிரச்செய்தனவே! அவர் என்னிடம் பொய்யுரைத்துப் போவதெவன்? அன்று, அன்று. அவர் ஓர் தீர்க்கதர்சியே யாவர். பின்வருவதை முன்னுரைக்கும் சக்தி அவரிடம் உண்மையாகவே யிருக்க வேண்டும். ஆதலின் அவர் வாக்கு பொய்யாகாது. நானும் பெருமுயற்சி செய்து கல்வி கற்று ஞானப்பெருக்கடைந்து 'இத்தகையானன்றோ ஓர் அரசுக்கு அமைச்சனாகவேண்டும் என்று பலரு முரைக்குமாறு திறமையை எய்துவேன்' என உறுதி செய்துகொண்டான்.

மறுநாட் காலையில் சூரியோதயத்திற்கு முன்பே, திம்மரசு சுவர்ண முகியாற்றுக்குச் சென்று கிரமப்படி நீராடிக் காலைக்கடன்களை முடித்து வீடுசேர்ந்தான். பிறகு பக்கத்துத் தெருவிலுள்ள ஓர் கலைவல்லவரில்லம் சென்று அவரை சாஷ்டாங்கமாக நமஸ்கரித்துக் கை கூப்பி நின்று, 'தேவரீர் எனக்கு வித்யாதானம் செய்தருளவேண்டும். நான் மிக எளியவன், எனக்குச் சுற்றத்தார் இங்கு யாருமிலர். தேவரீரே தந்தை, தேவரீரே தாய், தேவரீரே சுற்றம்; தஞ்சமெனத் தங்களை

யடைந்தேன். ஏழையைக்காத்தருள்க, எனக்கண்களில் நீர்ததும்ப இரங்கி வேண்டினன். அப்பெரியவரும் கருணை கூர்ந்து திம்மரசின் பூர்வவிருத்தாந்தங்களைக் கேட்டறிந்து, பிறகு 'அப்படியே ஆகுக; பிரதிதினமும் காலையிலே நீ இங்குவா, உனக்கு சாஸ்திரபாடம் சொல்லுகிறேன்' என வாக்களித்தார். இதைக்கேட்டுத் திம்மரசுக் குண்டான மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. குரு கட்டளையிட்டவிதமே ஒவ்வொரு நாளும் சாஸ்திரப் பயிற்சி செய்தான். பிற்பகல் நேரங்களில் எழுத்தாணி கொண்டு ஓலைகளில் எழுதிக் கையெழுத்தைத் திறப்படுத்திக்கொண்டான். அதுவுமன்றி ஓய்வுநேரங்களில் ஸமஸ்தான கார்யாலய கீழதிகாரிகளிடம் சென்று அவருடன் சிநேகம் செய்து அவர்கள் செய்யவேண்டிய வேலைகளிற் சிலவற்றைத் தானே செய்து, அதன் மூலமாய் அரசாங்க நிர்வாகம் எத்தன்மையது என வுணர்ந்தான். ஊரில் புராண படனங்களோ சாஸ்திர விசாரங்களோ எங்கு நடந்தாலும் அங்கே முன் வந்து வெகு சிரத்தையுடன் கேட்பான். 'சுவரை வைத்துக் கொண்டல்லவோ சித்திரம் எழுதவேணும்' என்ற உண்மையை மறவாது தினந்தோறும் காலையிலும் மாலையிலும் தேகப்பயிற்சி செய்து சரீரபலத்தை மிகுதியும் பெற்றான். 'உழைப்பின் வாராவுறுதிகளுளவோ'? வெகு சீக்கிரத்திலேயே அர்த்த சாஸ்திரம், கணித சாஸ்திரம், வான சாஸ்திரம் முதலிய கலைகளில் பூரண அறிவும் ஆந்திர சம்ஸ்கிருத பாஷைகளில் சிறந்த ஞானமும் அடைந்தான். 'கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாஞ் சிறப்பன்றோ! ஆகவே இத்திம்மரசின் பேர் சந்திரகிரி

ஸமஸ்தானத்தில் மாத்திரமே யன்றி கார்வேட்டுநகரம், குத்தி, நாராயணவரம், பெனுகொண்டா முதலிய பிராந்தங்களிலும் பரவியது.

III சிட்டிகங்கநாமாவும் திம்மரசும்.

அக்காலத்தில் சந்திரகிரி ஸமஸ்தானத்தின் பிரதான அமைச்சர் சிட்டிகங்கநாமா என்றோர் பிராமணர். இவரும் ஆந்திரநியோகிகுலத்தவர். விசேஷ மதிவாய்ந்தவர். சாஸ்திர ஆராய்ச்சியிற் சிறந்தவர். தம் ஸமஸ்தானத்தின் மகிமையை ஓங்கச்செய்து தம் அரசரது கீர்த்தியையும் பரவச்செய்யவேண்டுமென்ற பேரவாக்கொண்டவர். விசேஷ ஹிந்து மதாபிமானி. மகம்மதியர் தலையெடுக்காமல் தென்னிந்தியாவில் ஹிந்து அரசர்களே என்றும் ஆட்சி புரியவேண்டுமென ஊக்கங்கொண்டு அதற்காகப் பெரிதும் பாடுபட்டுவந்தார். ராஜ நீதி, தண்டநீதி, நீதிசாஸ்திரம், ராஜ தந்திரம் முதலிய முறைகளில் கரைகண்டவர். கௌடில்யர் எழுதிய அர்த்த சாஸ்திரத்தை சாங்கோபாங்கமாய் அப்பியாசம் செய்தவர். மேற்படி சாஸ்திரத்தை அனுபவ பூர்வமாகப் பிறருக்குப் பாடஞ் சொல்லக் கூடியவர், அக்காலத்தில் இவரொருவரே.

ஒரு சமயம் சிட்டிகங்கநாமா திம்மரசின் யோக்கியதையைக் கேட்டு அவனைப் பார்க்க ஆவலுற்றார். இது விஷயம் தெரிந்த திம்மரசும் பிரதான பட்டணமாகிய கார்வேட்டு நகரஞ் சென்று அமைச்சரை வணங்கினான். விசாரித்ததில் திம்மரசு அவ்வமைச்சருக்கு

ஒருவாறு சுற்றமென்றும் ஏற்பட்டது. சிட்டி கங்கநாமா திம்மரசினிடம் வெகு நேரம் பேசி அவனது விநயம், சாமர்த்தியம், லோக ஞானம் இவைகளுக்கு மெச்சித் தமது காரியாலயத்திலேயே அவனுக்கு ஓர் உத்தியோக மளித்தார். நாளடைவிலே சிட்டி கங்கநாமாவுக்கு இச்சிறுவனிடம் அன்பும் அருளும் மிகுந்து கொண்டேவந்தது. 'இவனன்றோ என் பதவிக்குரியவன்! என்னபொறை! என்ன நுட்பபுத்தி! என்ன திடசித்தம்! என்ன சமயோசிதயுக்தி! ஆகா! இவன் போலியர் வேறுமுளரோ' என நினைந்து அடிக்கடி ஆச்சரிய முறுவர்.

ஒரு நாள் சிட்டிகங்க நாமா திம்மரசை வரவழைத்துப் பின்வருமாறு சொன்னார்: 'அப்பா! உன்முன்னோர்கள் உயர்ந்த பதவியிலிருந்தவர்கள். நீயும் அத்தகைய பதவிக்கு வருவாயென எனக்குத் தோன்றுகிறது. உன்னைப் போன்ற சமர்த்தனை நான் எங்கும் பார்த்தறியேன். எனக்கு இப்போது எழுபது வயதாகிறது. தேகதிடமும் மனவலியும் குறையா திருந்தாலும் காலன் எப்போது வருவானோ என்றபயம் அதிகரிக்கிறது. ஆகையால், எனக்குத் தெரிந்த ராஜதந்திர விஷயங்களைப் பூர்த்தியாக உனக்குப் புகட்டவேண்டுமென அவா என்மனத்தில் எழுகிறது. ஆயினும் நான் அவ்வாறு செய்யப் புகுமுன் உன்னிடம் ஓர் விஷயம் சொல்லவேண்டியுளது. இக்கர்நாடக ராஜ்யம் சீர்குலைந்திருப்பதை எண்ணி எண்ணி என் நெஞ்சம் மிகப் புண்ணாயிருக்கிறது. என்ன சொல்வேன்! நம் ஹிந்து ராஜாக்கள் வெகு பராக்கிரமசாலிகளா யிருப்பினும் ஒருவர்க்கொருவர் ஒற்றுமை யில்லாதது பற்றி

நம் பகைவர்களுக்கு இலகுவாய் இடங்கொடுத்து விடுகிறார்களே! விஜயநகர ஸமஸ்தானத்தைப்பார். இப்போது அரசாண்டுவரும் மன்னரின் முன்னோர்கள் எவ்வளவு தீரர்கள்! ஆயினும் இவர், அதை யெல்லாம் மறந்து அசிரத்தை மிகுந்து ராஜ்ய முறையில் சற்றும் கவலையற்றிருக்கிறார். இதையறிந்து பீடர் மாகாண சுல்தானும் இந்த ராஜ்யத்தைக் கைப்பற்ற எப்பொழுது ஸமயம் வாய்க்குமெனப் பேரவாவுடன் காத்துக் கொண்டிருக்கிறான். இதுவுமன்றிக் கஜபதி மன்னனும் தென்னிந்தியா முழுவதையும் தன் குடைக்கீழ்க் கொணர நிச்சயித்துத் தகுந்த பிரயத்தனங்களும் செய்துகொண்டு வருகின்றனன். கண்டிக்கோட்டையைப் பிடிக்க முயன்ற பாமினி சுல்தானையும், காஞ்சீபுரத்தைக் கைப்பற்றவந்த கஜபதிராஜனையும் நானல்லவோ தோல்வி யடைவித்தேன். ஆயினும் எந்நாளும் அம்மாதிரி செய்ய எனக்கு இயலுமோ? மகம்மதியர்கள் கர்நாடகத்தில் முன்னேற்ற மடைந்தால் நமது மதம் அடியோடு வேரற்று நசித்து விடுமன்றோ? ஆரிய மதாசாரியர்கள் ஆத்மதத்துவத்தை யுணர்ந்து அதனை நம் போலியர்க்கு அருளிச்செய்த இந்நாடும் மிலேச்சர் வசப்படுதல் நன்றோ! சிறுவனே! உன்னைப்போன்ற புத்தி கூர்மைவாய்ந்தவனை நான் இதுகாறும் கண்டிலேன். உன்னை நோக்கின் நீயும் என்னுடைய பதவி போன்ற பதவியை அடைவாய் என்ற உணர்ச்சி என் மனத்தில் உதிக்கிறது. அத்தகைய நிலையை நீ அடைவாயாயின் நான் இதுகாறும் செய்து வந்துள்ள முயற்சிகளைத் தளரவிடாது கிருஷ்ணா நதிக்குத் தக்ஷிணத்துள்ள இப்பாகத்தில் மகம்மதியர்கள் என்றும்

தலைகாட்டாவண்ணம் செய்துவிடுவேனென்று நீ எனக்கு உறுதி கூறவேண்டும். அவ்வாறு வாக்களித்தால் நான் எனக்குத் தெரிந்த ராஜநீதி சாஸ்திரம் முழுவதையும் உனக்குப் புகட்டுவேன்'' என்றார். இதைக் கேட்ட திம்மரசு அடங்காத்துயருற்றுக் கண்களில் நீர்ததும்ப அமைச்சரது காலில் வணங்கி, 'தேவரீரது திருவுள்ளப்படியே ஆகுக. ஹிந்து ஸாம்ராஜ்யத்தைத் தென்னிந்தியாவில் நிலை நிறுத்த என்ன முயற்சிகள் செய்யவேண்டி யிருப்பினும் அவைகளைச் செய்வேன். அதற்கென்றே என் ஆவியையும் உடலையும் அர்ப்பணம் செய்வேன். இது சத்தியம்' என்று சொன்னான். அமைச்சரும் சந்தோஷம் மிகுந்து 'மகனே! உன் தீரத்தை மெச்சுகிறேன்; இனி எனக்கு மனக்குறையில்லை; விசாரமின்றி உறங்குவேன்' என்றுரைத்து, அன்று முதல் திம்மரசுக்கு ராஜதந்திர சாஸ்திரமுறையைப் போதிக்கத் தொடங்கினார். இரண்டு வருஷகாலத்தில் கிரந்தங்கள் மூலமாகவும் அனுபவ மூலமாகவும் தமக்குத்தெரிந்த யாவற்றையும் திம்மரசுக்கு உபதேசித்து முடித்தார்.

VI திம்மரசின் யோசனை.

அக்காலத்தில் விஜயநகர ராஜ்யம் சற்று க்ஷீண தசையிலிருந்ததென நாம் ஏற்கெனவே கூறியுள்ளோம். இந்த ராஜ்யம் முதன்முதலில் பதினான்காம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. ஹரிஹரனென்று பெயர்படைத்தவன், இதன் முதலரசன்.

இவனது பாக்யவசத்தால் இவனுக்கு இக்காலத்தில் சிருங்கேரி மடத்ததிபதியாய் விளங்கின வித்தியாரண்ய ஸ்வாமிகள் முதன் மந்திரியாக வாய்ந்தனர். விஜயநகரம் என்றது ஆதியில் வித்தியாரண்ய நகரமென்றேவழங்கியது. இவ்வரசனது வம்சத்தவர்கள் ஏறக்குறைய பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதி வரையில் இவ்விராஜ்யத்தை ஆண்டுவந்தனர். கடைசியாய்ப் பட்டத்துக்கு வந்த அரசன் ப்ரௌடதேவராயன் என்போன். இவன் திறமையற்றிருந்தமையால் விஜய நகராராஜ்யம் வெகுவாய்ச் சிதறுண்டது. சிற்றின்பத்தில் மூழ்கி,

முன்னுறக்காவாதிழுக்கியான் றன்பிழை
பின்னூறிரங்கிவிடும்,

என்ற உண்மையை ஓராது ஒழுகிய காரணம் பற்றிக் குடிகளும் சிற்றரசர்களும் இவனை மதியாது வெறுக்கத் தொடங்கினர். வேறுசிலர் மனமிரங்கி, 'என்னே! இவ்விந்து ஸாம்ராஜ்யமும் தொலைதல் நியாயமோ? நாற்புறங்களிலும் மகம்மதியர்கள் ஆக்கிரமித்துக் கொள்ள முயற்சித்து வருகின்றார்களே. வீரசௌரிய பராக்கிரமம் வாய்ந்ததீரன் ஒருவனல்லவோ இக்காலத்து இத்தேசத்து மன்னனாயிருத்தல் வேண்டும்! என்றெண்ணித் துயருற்றனர்.

இவ்விராஜ்யத்து சேனைத்தலைவராய் வெகு காலம் இருந்து இப்போது சந்திரகிரி சமஸ்தானத்தை ஆண்டுவந்த சாளுவ நரசிம்ம பூபாலர், மேற்சொன்னவாறு ப்ரௌட தேவராயனது மதியீனத்தைக் குறித்து மிகவும் மனம் நொந்தார். இவ்வரசனிடத்தில் முதற் சேனைத்தலைமைவகித்த துளுவ நரச நாயக்

கரும் விசேஷ வியாகுலம் எய்தினர். இவர் குத்தி என்ற பட்டணத்திலிருந்தார். இந்நரசநாயக்கர் திம்மரசின் சாமர்த்தியத்தைக் கேள்வியுற்று அவனைத் தம்மிடம் பிரதானியாய் அமர்த்திக்கொள்ள அவரைக் கொண்டு தம் எஜமானனை உத்தரவுதரவேண்டுமெனக் கேட்க அவரும் ஒப்புக்கொண்டார். திம்மரசும் சீக்கிரம் இவனிடம் வந்து சேர்ந்தான்.

அமைச்சர் சிட்டிகங்க நாமாவிடம் தான் செய்த பிரதிஜ்ஞையைத் திம்மரசு மறக்கவேயில்லை. தென்னிந்தியாவில் ஹிந்து ஸாம்ராஜ்யத்தை எவ்வாறு நிலைநிறுத்தலாம் என்ற எண்ணமே அவனது மனத்தில் என்றும் குடிகொண்டிருந்தது. ஆலோசித்துப் பார்க்குங்கால் இக்காரியத்தைச் செவ்வனே முடிக்கக் கூடியவர் நரசிம்ம பூபாலர் ஒருவரே யெனத்தோன்றியது. ஆதலின் நரச நாயக்கரிடம் ஒரு தினம் சென்று தன்னெண்ணத்தைத் தெரிவிக்க நரசநாயக்கரும் சிந்திக்கலயினர். 'ஆம் ஆம், திம்மரசு சொல்வது உண்மையே. விஜயநகரமன்னன் சீர்குலைந்திருக்கும் வரை தென்னிந்தியாவில் சமாதானமே இராது. ஹிந்து சிற்றரசர்கள் ஒருவரோடொருவர்போராடுவதற் கன்றி மகம்மதியர்கள் ஆக்கிரமிப்பதற்கும் இடந்தரும். தற்காலம் ஆட்சி புரிந்துவரும் மன்னர்களுக்குள் அத்தகைய ஆபத்தைத் தடுக்கவல்லவர் நம் நரசிம்மபூபாலரொருவரே. அவர் விசேஷபராக்கிரம சாலி. நிரம்பவும் நிதான புத்தியையும் உடையவர். குடிகளை ரஞ்சிக்கச்செய்யும் நடுவு நிலைமைபொருந்தியவர். பார்ப்பவர் மனத்தில் பக்தியும் விசுவாசமும் எழச்செய்யும் வசீகரண சக்திவாய்ந்தவர். ஆதலின் விஜயநகர ராஜ்

யத்தை எளிதிற்கைப்பற்றி சிம்மாஸனத்தில் நம்பூபாலரை அமரச்செய்வதே நன்று' எனத்தெளிந்தார். பிறகு, திம்மரசின் புத்தி கூர்மையையும் தீர்க்காலோசனைத்திறமையையும் மெச்சி மேற் கூறிய அபிப்பிராயங்களையும் கண்டு ஓர் கடிதமெழுதி அதை நரசிம்ம பூபாலருக்கு நாயக்கர் அனுப்பினர். அதைக் கண்ணுற்ற அரசரும் மிக்க ஆனந்தம் எய்தினர். தென்னிந்தியாவில் பிரஜைகளுடைய அனுகூலத்தை உத்தேசித்துத் தம் மந்திரி சொல்லியயோசனை சாலவும் நன்றெனக்கண்டு கொண்டு, 'நீர் சொல்லியவாறே ஆகுக; அதற்குத்தக்க முயற்சிகளையும் செய்பக்கடவீர்' என உத்தரம் அனுப்பினர்.

V தண்டயாத்திரை.

தம் அரசரின் ஆணையைச் சிரமேற்கொண்டு நரச நாயக்கர் படையெழுச்சிப் பிரயத்தனங்களை வெகு சீக்கிரத்தில் முடித்து ஓர் பெரியசேனையை சித்தப்படுத்தினர். பின்பு திம்மரசு சொன்ன யோசனைக்கிணங்கி ரகசியமாகவே விஜயநகரம் சென்று அந்நகரைக் கைப்பற்ற வேண்டுமெனத் தீர்மானித்தனர். குத்தி நகரிலிருந்து கிளம்பி வெகு விரைவில் விஜயநகரஞ் சென்று அந்நகரத்தை முற்றுகை போடும் வண்ணம் சேனையைக் கோட்டையைச் சுற்றி எல்லாப் பக்கங்களிலும் அமர்த்திப் பிறகு அரசனுக்கும் அவனுடைய சேனைத் தலைவர்களுக்கும் தாம்வந்த செய்

தியையும், கொண்டுள்ள அபிப்பிராயத்தையும் தெரிவித்தனர். மதுபானம் செய்து மதிமயங்கித் தனது கடமையை மறந்து மகளிர் காமத்தில் மூழ்கிச் சிற்றின்பமே பேரின்பமென மதித்து அந்தப்புரத்தினின்றும் வெளிவராது காலங்கழிக்கும் தேவராயன், இந்தச் சமாசாரத்தைக் கேட்டு என்ன செய்தானெனில், வந்த வேலைக்காரர்களை நையப்புடைத்து நிரம்பவும் வசைமொழிகளால் வைது தன் எதிரில் நில்லா வண்ணம் துரத்தினான். சேனா நாயகர்களும் போர் வீரர்களைத் திரட்டச் சக்தியற்றவர்களாகிச் சும்மா விருந்தனர். பொதுஜனங்களோ 'எவ்வாறாயினும் தேவராயன் தொலைந்தாற் போதும்; வேறு எவ்வரசர் வரினும் ராஜ்யம் சிறக்குமேயல்லாது இப்போதிருக்கும் நிலைமை யவ்வளவு கேடுறாது; ஆதலின் போர் முயற்சி யொன்றும் செய்யவேண்டாம்' என நினைந்து வழக்கம்போலத் தத்தம் வேலைகளைக் கவனித்து வந்தனர். அதனால் நரசநாயக்கர் யாதொரு சிரமமுமின்றித் தம் சேனையைக் கோட்டைக்குள் அழைத்துச் சென்றனர். இது தெரிந்த தேவராயன் அந்தப்புரத்தின் பிற்பக்கத்திலுள்ள ஓர் வாயில் வழியாய் வெளிக்கிளம்பி வந்து நகரினின்றும் ஓடிப்போனான். உடனே நரசநாயக்கர் தாம் நரசிம்ம பூபாலரது சேனைத்தலைவராய் வந்து அவருக்காக விஜய நகர ராஜ்யத்தைக் கைப்பற்றியதாக நகரமெங்கும் பறையறைவித்துத் தம் அரசருக்கும் இச்சந்தோஷ சமாசாரத்தைத் தெரிவித்து, சீக்கிரம் விஜய நகரம் வரவேண்டுமென வேண்டினார். அன்றியும் தேவராயனது உறவினர்களையும் அவனிடத்து விசுவாசம் வைத்துள்ள மற்றவர்

களையும் சிறைசெய்து, சிலரைப் பெனுகொண்டாவுக்கும், வேறு சிலரைக் குத்திக்கும், மிகுந்தவர்களைச் சந்திரகிரிக்கும் அனுப்பினர்.

VI நரசிம்ம பூபாலரது ஆளுகை.

இச்சந்தோஷ சமாசாரத்தைக் கேட்ட நரசிம்ம பூபாலர் மிகவும் மனம் பூரித்தார். தமது தளகர்த்தராகிய நரசநாயக்கரது தீரத்தையும் திம்மரசின் புத்தி கூர்மையையும் நினைத்து வெகு ஆச்சரியங்கொண்டார். இனிமேல் ஒருவாறு தென்னிந்தியாவில் ஹிந்து ஸாம்ராஜ்யத்தை நிலை நிறுத்தலாம் எனத்தைரியம் கொண்டார். தம் தளகர்த்தர் வேண்டிக்கொண்ட வண்ணம் நாராயணவரத்தினின்றும் கிளம்பி வெகு சீக்கிரம் விஜயநகரம் வந்து சேர்ந்தார். நரசநாயக்கரும் திம்மரசும் வேறுசில பிரமுகர்களும் புடைசூழ நகருக்கு வெளியே சென்று, அரசரை வெகு மரியாதையுடன் வரவேற்றனர். பட்டாபிஷேகத்துக்கு ஓர் நாள் குறிப்பிட்டுச் சிற்றரசர்களுக்கும், தளகர்த்தர்களுக்கும், கௌரவமிக்கவேறு பலர்க்கும் பத்திரிகை அனுப்பினர். அவர்களும் வர, வெகு விமரிசையாகப் பட்டாபிஷேக மகோற்சவம் நடந்தேறியது.

திம்மரசின்பேர் மேன்மேலும் பெருகியது. இவரது நற்குணங்களுக்கும் சாமர்த்தியத்துக்கும் இவரை மெச்சாதவர் ஒருவரும் இலர். அரசரும் இவருடன் ஆலோசியாது ஒரு காரியமும் செய்வதில்லை. ஒரு சமயம் தமக்குப் பிரதான மந்திரியாக கௌரவத்தை வகிக்கவேண்டுமென்று அரசர் திம்மரசிடம் சொல்ல அவர், 'ஐயா, பட்டப்பேரில் என்ன இருக்கிறது ; நான்

என்றும் தங்களுக்குரியனல்லனோ ? பிரதான மந்திரியாக ஏற்பட்டால் இப்பொழுது செய்யும் ஊழியத்தில் ஏதேனும் மாறுபாடு ஏற்படுமோ? என்னைக்காட்டிலும் வயதிலும் அனுபவத்திலும் முதிர்ந்த பெரியோர்கள் தங்கள் சபையை அலங்கரிக்கின்றனரே. அவர்களது மனங்கோணாதிருத்தல் முக்கியமன்றோ ? ஆதலின் தங்களெண்ணத்தைத் தயை கூர்ந்து ஒழிக்கவேண்டுகிறேன். திம்மரசு பிழைத்திருக்கும் வரையிலும் அவனது ஆவியும் உடலும் தங்களுடையனவாகும். இதில் ஐயம்ஒன்றும் வேண்டாம்' என்றார். இதைக்கேட்ட மன்னர் ஆச்சரியமடைந்து மேலே ஒன்றும் சொல்லத் தோன்றாது சும்மாவிருந்தனர். திம்மரசின் செல்வாக்கு ராஜ்யத்தில் மேன்மேலுயரவே அது காரணமாக ஆந்திரர்களுடைய செல்வாக்கும் அதிகரித்துக்கொண்டே வந்தது.

ஒருநாள் தாம் தனியாக இருக்கும் சமயத்தில் அரசர்திம்மரசைவரச்செய்து அவருடன் பின்வருமாறு ஆலோசிக்கலாயினர் : 'திம்மரசே, சிலகாலத்துக்கு முன்னிருந்ததைவிட இப்போது நம்ராஜ்யத்தில் செழுமையும் கலகமின்மையும் பொது ஜனசௌகர்யங்களும் மிகுந்துள்ளன என்பது உண்மையே. ஆயினும் பாமினிசுல்தானும் கலிங்கதேசத்துக் கஜபதிராஜாவும் பலமுள்ளவர்களா யிருக்கும்வரையில் நம் ராஜ்யத்துக்குப் பயம் இல்லை என்று எவ்வாறு சொல்லலாம் ? அவ்விருவர்களையும் முறியடித்தல், நம்ராஜ்யத்தின் முன்னேற்றத்துக்கு இன்றியமையாதகாரியம். அதை நாம் எவ்வாறு முடித்தல் சாத்தியம்?' எனக்கேட்டார். திம்மரசு 'ஐயே, தாங்கள் சொல்வது உண்மையே.

இடம் பொருள் வலி இவைகளை ஆராய்ந்து பாராது அவசரப்பட்டு நாம் ஒன்றும்செய்தல் கூடாது. பாமினி சுல்தானுக்கு அசுவபதி என்று ஓர்பேருண்டு. 'குதிரை நாயக்கன்' என்பது இதன் பொருளாகும். அவ்வாறு பெயர் வந்ததற்குக் காரணம் அவனது குதிரைப் படையின் வலிமையே. கலிங்கதேசத்து மன்னனுக்கு கஜபதி யென நாமம் வாய்ந்தது தன்யானைப் படைமிகுதியாலன்றோ; ஆதலின் தங்களது குதிரைப்படையும் யானைப்படையும் இவ்வரசர்களது படைவலிக்கு மேற்பட்டாலல்லவோ தங்கள் எண்ணம் நிறைவேறும். இன்று முதல் தேவரீர் தங்கள் படை வன்மையைத் திடப்படுத்த வேண்டும், எனச்சொன்னார். அரசரும் 'அவ்விதமே ஆகுக!' எனத் தீர்மானித்தனர்.

சீக்கிரத்தில் விஜய நகர ராஜ்யத்தில் குதிரை வியாபாரமும் யானை வியாபாரமும் வெகு மும்முரமாய் நடக்கத் தலைப்பட்டன. எவ்வளவு திரவியச் செலவானாலும் சரி, எவ்வளவு உயர்ந்தவிலை கொடுக்கநேரினும் சரி, கிடைக்கக்கூடிய அசுவங்கள் யாவற்றையும் வாங்க வேண்டுமென அரசர் கங்கணம் கட்டிக்கொண்டார். ஆயிரக்கணக்கான குதிரைகள் அரபிதேசத்தினின்றும் கொண்டுவரப்பட்டன. இவ்வாறு ஏற்பாடுசெய்வதில் அரசருக்கு அபிப்பிராயம் யாதெனில் தம் குதிரைப் படை வலிமையடைய வேண்டுமென்பது மாத்திரமல்ல; பாமினி சுல்தானுக்கு எங்கும் குதிரைகள் கிடைக்காமற் செய்யவேண்டுமென்றும் உறுதிகொண்டார். ஒருவாறு இவ்வெண்ணம் நிறைவேறிய தென்றே சொல்லவேண்டும். 'குதிரையின் வால் நுனியைக் கொணர்ந்தாலும் அதை நம்மரசர் வாங்காதுவிடார்'

என்று பொது ஜனங்கள் சொல்லலாயினர். இதனாலேயே அரசர் குதிரைப்படை திரட்டிய பான்மையை ஊகித்துக் கொள்ளலாமன்றோ? ஆயினும் "ஒன்றை நினைக்கினதுவொழிந்திட் டொன்றாகும்; அன்றியது வரினும் வந்தெய்தும்" என்னு மூதுரை சத்தியமல்லவா? அவ்வாறே மேன்மேலும் தம் ராஜ்யத்தைப் பெரிதாக்குவோமென எண்ணங் கொண்டிருந்த நரசிம்ம பூபாலர் திடீரென வியாதிகண்டு காலகதியாயினர். அவரது இரு குமாரர்களும் இளம்பிராயத்தின ராதலின், அவர்களில் மூத்தவனைச் சிம்மாஸனமேற்றி நரசநாயக்கர் தாம் ராஜப் பிரதிநிதியாய் நின்று அரசாங்கத்தை நடத்திவந்தார்.

VII நரசநாயக்கர்.

நடுவு நிலைதவறாது நரசநாயக்கர்,

வேலன்று வென்றி தருவது மன்னவன்
கோலதூஉங் கோடா தெனின்

என்ற உண்மையைக் கடைப்பிடித்து ஒழுகிவந்தனர். பிரஜைகளும் மனமுவந்து நரசிம்ம பூபாலரது பிரிவை ஒருவாறு மறந்து இனிது வாழ்ந்துவந்தனர். ஆயினும், தீயார்க்கு நல்லோர் வேம்பாவரன்றோ? அவ்வாறே நாயக்கரிடம் பொறாமைகொண்ட ஓர் தளகர்த்தன், எவ்வாறாயினும் அவரது பேரையும் புகழையும் கெடுக்க எண்ணங்கொண்டு சதியாலோசனை செய்யலானான். முடிவில், மைனரான அரசரைக் கொன்று அப்பழியை நாயக்கர்மீது சுமத்தலே தகுந்தவழியெனத் தெரிந்து, ஒருநாள் அரசர் தனியாயிருக்குந் தருணம்

பார்த்து அவரைக் கத்திக் கிரையாக்கினன். அந்தோ! அரசர் இறந்த செய்தியைக்கேட்டு ஜனங்களெல்லோரும் வெகுவாய்த் துக்கமடைந்தனர். தீங்கிழைத்த தளகர்த்தன், அங்கங்கே தன் சிநேகிதர்களைக் கொண்டு நரசநாயக்கரே இவ்விபரீதச் செயலுக்குக் காரணமென்றும், தாமே சிம்மாசனமேற வேண்டுமென்ற கெட்ட எண்ணத்துடன் அவ்வாறு செய்வித்தனரென்றும், ரகசியமாகவும் வெளிப்படையாகவும் சொல்லுமாறு ஏற்பாடுசெய்தனன். இதுகேட்ட நாயக்கர் மனம் பதை பதைத்து மிகத் துயருற்றார். 'ஐயோ, அரசிளங்குமரன் அநியாயமாய்க் கொலையுண்டானே, என ஏங்கி நிற்கும் எனக்கு இந்த அபவாதமும் வரவேண்டுமோ! ஜகதீச, இதுவும்நினது திருவுளமாமோ! நிரபராதியான எனக்கு இத்தண்டனையேன்!' என நினைந்து விம்மி விம்மிக் கதறினார். பிறகு ஒருவாறுமனதைத்தைறியப் படுத்திக்கொண்டு, தம் பிரதான மந்திரியான திம்மரசை வரச்செய்து, இனி நடக்கவேண்டிய விஷயம் யாதெனவினவினார். திம்மரசும் விசாரமுற்றவராய், 'ஐய, பயப்படவேண்டாம்; தங்கள் மீது பழிசுமத்துபவர்கள் இவ்விராஜ்யத்தில் மிகச் சிலரேயாவர்; பெரும்பான்மையோர் தங்களது குணங்களையும் சாமர்த்தியத்தையும் அறிந்து கொண்டவர்களே; அவர்கள் தங்களுக்கு சுயமாகவே அரசராக வேண்டுமென்ற கெட்ட எண்ணம் உண்டென்று ஒரு நாளும் நம்பவேமாட்டார்கள்; ஆயினும் தாங்கள் உடனே செய்யவேண்டிய காரியம் ஒன்றுளது; அதாவது இறந்த அரசரது தம்பியை உடனே சிம்மாசனத்தில் ஏற்றிப் பட்டாபிஷேகத்தை முடிப்பதே. இவ்வாறு செய்யின் இப்போது

தப்பபிப்பிராயம் கொண்டுள்ள சிலரும் தங்கள் எண்ணத்தை மாற்றிக்கொண்டு விடுவார்கள்; இதுநிச்சயம்'. என்று சொன்னார். நாயக்கரும் வெகு சீக்கிரத்தில் அவ்வாறே அரசரின் இளைய சகோதரரான இம்மடி நரசிம்மனைச் சிம்மாசனம் ஏற்றுவித்தார்.

VIII இம்மடி நரசிம்மன்.

தீங்கிழைப்பதிலேயே கண்ணாயிருந்த தளகர்த்தன், மறுபடியும் நரசநாயகருக்கு எவ்விதம் இடையூறு செய்விப்பது எனக் கருதலாயினன். இதற்கு முதற்படியாய்ச் சிற்சில உபாயங்கள் செய்து அரசரின் தயவைச் சம்பாதித்தனன். 'வெளுத்ததெல்லாம் பால்' என்று எண்ணும் தன்மையும், அனுபவமின்மையால் பசப்புவார்த்தை யுரைப்பவர் யாவரும் தம்மித்திரர் எனக் கொள்ளும் இயல்புமுடையவரான அரசர் அத்தளகர்த்தனுடைய சூழ்ச்சிகளுக்கு ஈடுபட்டார். ஆகவே, நரசநாயக்கரிடத்தும் திம்மரசு மந்திரியிடத்தும் இவருக்குச்சற்று அவமதிப்புஏற்பட்டது. இதையுணர்ந்த திம்மரசு, நாயக்கரிடம் சென்று அரசரின் மதியீனத்தைக் குறித்துத் துக்கித்து, எவ்வாறாயினும் இத்தளகர்த்தனது மாயவலையில் சிக்காது அரசரை விடுவிக்க வேண்டிய தவசிய மெனக் கூறி, தாமே நேரில் அரசரிடம் சென்று அவரது மனநிலையை மாற்ற முயற்சிப்பதாக உரைக்க, நாயக்கரும் அதற்கிணங்கினார்.

ஒருநாள் அரசர் ஏகாந்தமாயிருக்கும் போது திம்மரசு அவரிடம் சென்று பின்வருமாறு சொன்னார்: 'அரசே! தாங்கள் இளம்பிராயத்தினர்; இவ்வுலகின்

இயல்பைச் செவ்வையாய் இன்னும் அறிந்திலீர் ; உண்மை நட்பும், பிறர் சுகமாய் வாழக்கண்டு உவக்கும் தன்மையும், தக்கோரை மதித்தலும் இவ்வுலகின்கண் அரியனவாகும். உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று கூறுதலும், பொறாமையும், பெரியோரை இகழ்தலும் ஆகிய இக்குணங்களே பெரும்பாலும் மானிடர்களிடம் காணப்படும். தாங்கள் உயர்ந்த பதவியில் உள்ளவர். சீக்கிரத்தில் இந்த ஸாம்ராஜ்யத்தைத் தனியே ஆளும் திறமையை அடையவேண்டியவர். அதற்குத் தக்கவாறு உண்மையும் நெறியும் தவறாத, 'மூத்தவறிவுடையார் கேண்மை,' யைப் பெறல்வேண்டும்.

தக்கா ரினத்தனாய்த் தானொழுக வல்லானைச்
செற்றார் செயக்கிடந்த தில்,

என்ற ஆன்றோர் வாக்குமுண்டு. இவ்வாறு செய்யாது வீணர்களுடன் உறவுசெய்து 'அகத்தினாவஞ்ச'ருடன் கூடிக் காலம் கழிப்பின் சீரும்பேரும் குன்றி நன்மக்களால் இகழப்பட்டு மாண்பின்றி மடியநேரிடும். இது உலகில் அனுபவசித்தமாய் ஏற்பட்ட உண்மை.

தாங்கள் இப்பொழுது வெகுவாய் சிநேகித்து வரும் தளகர்த்தன் எத்தன்மையவன் என அறிவீரோ? அவனே தமது தமயனைக் கொன்றவன் ; இது விஷயம் நரசநாயகருக்குத் தெரிந்திருந்தபோதிலும் நேரில்ஒருவரும் அவன் செய்த கொடிய கருமத்தைப் பாராதது பற்றி அவனைச் சும்மா விட்டுவிட நேர்ந்தது; தாங்கள் அவனுடன் சகவாசம் செய்தல் நியாய மன்று; இவ்வார்த்தையை அசட்டைசெய்தால் அதனால் தீமையேவிளையும். தாங்கள் நன்றாய் இதைக்கவனிக்க வேண்டுமென்பது எனது வேண்டுகோள்.'

இதைக்கேட்ட அரசர் பதிலொன்றும் சொல்லாது மௌனம் சாதித்தனர். சொன்னவார்த்தைகள் மனத்தில் பதிந்ததற்கு அடையாளங்கள் வேறொன்றும் காணப்படவும் இல்லை. இதைப்பார்த்த திம்மரசு, நாயக்கரிடம் சென்று நடந்த விருத்தாந்தங்களை யுரைத்து இனிச் சும்மாவிருப்பது நியாயமன்று. அரசரின் மனம் திருந்துமென்று எண்ண நியாயமேயில்லை; இப்போதுள்ள நிலையிலேயே அவரிருப்பின் நம் ராஜ்யத்துக்கு வெகு சீக்கிரத்தில் கேடுவிளையும்; இதுகாறும் நாம் கொண்டுள்ள ஆசையும் வீணாகும். ஆதலின் தகுந்த உபாயங்கள் செய்து இம்மாயத் தளகர்த்தனது சூழ்ச்சிகளை நீக்கவேண்டும், என்று சொல்ல, நாயக்கரும் அதற்கு உடன்பட்டனர்.

இது நடந்த சில தினங்களுக்கெல்லாம் நரசநாயக்கர், ஏதோ அவசர காரிய நிமித்தம் போல் பெனுகொண்டாவுக்குச் சென்றார். சீக்கிரத்தில் ஒரு பெரிய சேனையுடன் திரும்பிவந்து விஜய நகரத்தை முற்றுகை செய்து, அரசரிடம்சென்று 'நீர் உமது சிநேகித தளகர்த்தனைக் கொல்லுகிறீரா அல்லது இராஜ்யத்தை இழக்க இஷ்டமா?, எனக்கடிந்து கேட்க, அரசர் பயந்து தளகர்த்தனைக்கொல்வித்து அவன் தலையை நாயக்கரிடம் அனுப்பினார். நாயக்கரும் முற்றுகையை நீக்கி, அரசரை அருகிலுள்ள கோட்டையில் இருக்கச் செய்து, தாம் முன் போலவே ராஜ்ய அதிகாரத்தை நடத்திவந்தார். ராஜ்யத்தில் திம்மரசு வைத்ததே சட்டம். அவரது யோசனையின்றி நாயக்கர் ஒன்றும் செய்யார். பிரஜைகளும் மிகவும் சுகமாக வாழ்ந்து வந்தனர்.

IX. மகம்மதியரின் மீது வெற்றி.

இக் காலத்தில் பீஜப்பூர் ராஜ்யத்தை ஆண்டு வந்த சுல்தான், அடில்ஷா என்பவன். இந்த சுல்தான், விஜய நகர சமஸ்தானத்தைக் கைப்பற்றச் சூழ்ச்சிகள் செய்து வந்தனன் என்று நாம் முன்னமேயே சொல்லி யுள்ளோம். ஆதலின், அவனுக்கும் விஜயநகர அரசர் களுக்கும் தீராப்பகை யென்றே சொல்லவேண்டும். அடில்ஷாவை யெதிர்த்துப்போர்செய்ய எத்தனங்கள் செய்து வந்த காசிம் பரீத் என்று பெயர் கொண்ட பீடர் மாகாணத்துச் சிற்றரசன், நரச நாயக்கரிடம் வந்து அவரது உதவியை வேண்ட, நாயக்கர் திம்மா சிடம் ஆலோசித்தார். அரசு நீதிதெரிந்த திம்மரசும்,

> பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப்
> பொருத்தலும் வல்ல தமைச்சு,

என்ற ஆன்றோர் வாக்கை யொட்டி, இவ்விரு பகைவரது பகைமையை விருத்திசெய்வித்தலே முறை யெனக்கொண்டு, நாயக்கரை அச்சிற்றரசனுக்கு உதவி புரிவதாக ஒப்புக்கொள்ளச் சொன்னார். அவ்வாறே ஒரு சேனையையும் திரட்டி காசீம்பரீத் அரசனிடம் அனுப்ப, அச்சேனை துங்கபத்திரைக்கும் கிருஷ்ணா வுக்கும் நடுவி லுள்ள முதிகல்லு ரெயிச்சூர் என்ற இரு கோட்டைகளையும் ஆக்கிரமித்துக் கொண்டது. இத னல் பாமினி சுல்தானுக்கு வெகு நஷ்டம் ஏற்பட்ட தென்றே சொல்லவேண்டும். ஏனெனில் இக்கோட்டை கள் விஜயநகர ராஜ்ய எல்லைக்கருகில் உள்ளவைகள். அவை அவ்விராஜ்ய மன்னர் கைவச மிருப்பின் பாமினி ராஜ்யத்தின் மீது எந்தச் சமயத்திலும் படை யெடுத்தல் சாத்தியமாகும். ஆயினும் தன் படைவலி

சொற்பமாயிருந்தமையால் அடில்ஷா ஒன்றும்செய்யாது சும்மாவிருந்தனன்.

X. திரிசிரபுர அரசர் மீது வெற்றி.

திரிசிரபுரராஜ்யத்தை இக்காலம் ஆண்டுவந்த மன்னன் கோனேரிநாதர் என்பவர். இவர் சைவசமயத்தைத் தழுவியவர். எச்சமயமு நற்சமயமெனத்தெளிந்த தாயுமானவர் உறைவிடமான இத்திரிசிரபுரத்திலிருந்தும் கோனேரி நாதருக்கு வைணவமதத்தில் மிகத் துவேஷ புத்தியுண்டு. ஆதலின் ஸ்ரீரங்கத்துக் கோவில் தர்மகர்த்தாக்களையும் மற்றுமுள்ள வைணவ பக்தர்களையும் மிகக்கொடுமையாய் நடத்திவந்தனர். கொடுமையைத் தாங்கமாட்டாத சிலவைணவர்கள் கோவிற்கோபுரத்தின்மீதேறி அங்கிருந்து கீழேவிழுந்து உயிரை மாய்த்துக்கொண்டனர். மதத்துவேஷமற்ற திம்மரசு இதைக் கேட்டு மனம் பொறுதவராய் நாயக்கரிடம் சென்று, எவ்வாறாயினும் இவ்வைணவரது குறையைத் தீர்க்க வேண்டுமெனக் கூற, நரசநாயக்கர் ஒரு சேனையைத் திரட்டி அதனோடு திரிசிரபுரத்தை நோக்கிச் சென்றனர். இதையறிந்த கோனேரி நாதரும் சேனையுடன் எதிர்த்துவர, இருதிறத்தார்க்கும் போர் நேர்ந்தது. கடைசியாய்க் கோனேரிநாதர் போர்க்களத்தில் மாண்டார். நரசநாயக்கரும் அவருடன் கூடவந்த அவரது குமாரரும் நாகமநாயா என்ற வேறொருவரும் ஸ்ரீரங்கத் திருப்பதிக்குச் சென்று பெருமாளைச் சேவித்து அவரது திருக்கோவிலுக்கு மானியங்கள் விட்டு வைணவரது குறைகளைத் தீர்த்து விஜயநகரத்துக்குத் திரும்பினர்.

XI. பாமினிராஜ்யம்

இவ்விராஜ்யத்தைக் குறித்து ஏற்கெனவே சிறிது கூறியுள்ளோம். இது ஐந்துமாகாணங்கள் கொண்டது. ஒவ்வொரு மாகாணமும் சுபேதார் என்ற பெயர் கொண்ட அதிகாரியின் கீழிருந்து சுல்தானுடைய ஆளுகைக்கு அடங்கி நின்றது. அம்மாகாணங்களாவன :—

(1) பேரீத்ஷாஹி-இதன் பிரதானநகரம் பீடர். காசிம்பரீத் என்பவன் கீழுள்ளது.

(2) இமாம்ஷாஹி-இதன்பிரதானநகரம் காவிலிகடா.

(3) நிஜாம்ஷாஹி-இதுமகமத்ஷா என்பவனுல் ஏற்படுத்தப்பட்டது. முக்கியபட்டணம் ஆமத்நகரம்.

(4) அடில்ஷாஹி-அடில்ஷா என்பவனுல் ஏற்படுத்தப்பட்டது. பிரதான நகரம் பீஜப்பூர்.

(5) குதுப்ஷாஹி-குதுப்ஷா என்பவனுல் ஏற்படுத்தப்பட்டு, கோல்கொண்டாவை முக்கிய பட்டணமாகவுடையது.

காலக்கிரமத்தில் பாமினிசுல்தான் வம்சத்தவர்கள் வலிமைகுறைந்துகொண்டே வந்தார்கள். ஆகவே இம்மாகாண சுபேதார்களும் தங்களது அதிகாரத்தைப் பெருக்கிக்கொண்டே வந்தார்கள். கடைசியாய் பாமினிசுல்தானுடைய சம்பந்தம் அடியோடே இவர்களுக்கு அற்றுப்போயிற்று. ஆகவே இக்காலத்தில் இவ்வைந்து மாகாண சுபேதார்களும் தாங்களே தனிச்சிற்றரசர்களாக ஆண்டுவந்தனர்.

இவர்கள் தனித்தனியே இருக்கும் வரையில், விஜயநகராஜ்யத்துக்கு நன்றேயெனத்திம்மரசு தெரிந்து கொண்டு அவர்களுக்குள் ஒருவருக்கொருவர்

நட்பு ஏற்படாவண்ணம் மித்திரபேதம் செய்துவந்தார். ஆயினும் அம்மட்டோடு நின்று விடாமல் தம்ராஜ்யத்தில் உட்கலகம் யாதொன்றும் நேராமலும் ஜனங்களுக்குள் அந்யோந்ய சினேகபாவம் குறையாமலும் இருக்கும்படி பார்த்துக் கொண்டார்.

பாமினி சுல்தானுக்கு விரோதமாய்ப் போர்புரிய எண்ணங்கொண்ட பீடர் சிற்றரசனான காசிம்பரீதுக்கு உதவி புரிந்து ரேய்ச்சூர்க் கோட்டையை நரசநாயக்கர் தம் சேனையைக் கொண்டு ஆக்கிரமித்துக் கொண்டமை முன்னமேயே சொல்லப்பட்டது. அதைச் சுற்றிலுமுள்ள சிற்றரசர் யாவருக்கும் இக்கோட்டை மீது கண்ணுண்டு. நரசநாயக்கர் கோனேரி நாதரை எதிர்த்துத் திரிசிரபுரம் போயிருந்த காலத்து, அடில்ஷா ஒரு சேனையுடன் வந்து ரேய்ச்சூர் கோட்டையைப் பிடிக்க முயன்றனன். இதை யறிந்த திம்மரசு தீவிரமாக ஒருசேனையைத் திரட்டி அதை நரச நாயக்கரது தம்பியான திம்ம நாயக்கரது வசம் ஒப்பித்து அதனுடன் சென்று அடில்ஷாவை எதிர்த்துப் போர் செய்ய ஏற்பாடு செய்தார். திம்ம நாயக்கரும் அவ்வாறே ரேய்ச்சூருக்குச் செல்ல அங்கே ஓர் பெரிய யுத்தம் நடைபெற்றது. முதலில் திம்ம நாயக்கருக்கு வெற்றி வரும்போலத் தோன்றினும் இறுதியில் அவர் தோல்வியுற்றார். ரேய்ச்சூர்க் கோட்டையையும் அடில்ஷா கைப்பற்றினன். ஆயினும் அவன் தனது வலியின்மையை உத்தேசித்து விஜய நகரத்தின்மீது படையெடுத்துச் செல்லாது நின்று விட்டனன். திம்மரசும் எதிரியுடன் திரும்பிப்போர் புரியக்காலம் சரியல்ல என உணர்ந்து அடில்ஷாவுடன் சமாதான உடன் படிக்கை

செய்துகொண்டார். ஆயினும் தமது சதுர்வித சைன்ய பலத்தையும் விஜய நகரத்துக்கோட்டை பலத்தையும் விருத்திசெய்து கொண்டே வந்தார்.

ஒல்லும் வாயெல்லாம் வினை நன்றே யொல்லாக்கால்
செல்லும் வாய் நோக்கிச் செயல்.
காலங் கருதி யிருப்பர் கலங்காது
ஞாலங் கருது பவர்.

XII. நரச நாயக்கரது குடும்பம்.

நரசநாயக்கருக்கு மனைவியர் மூவர். மூத்தவளான திப்பாம்பா என்பவளிடம் வீரநரசிம்மன் என்ற குமாரனும், இரண்டாம் பாரியையாகிய நாகாம்பாளிடம் கிருஷ்ண தேவராயன் என்ற புதல்வனும், மூன்றாம் பத்னியான ஓபாம்பாளிடம் அச்சுத தேவராயன், ரங்கராயன் என்றிரு புத்திரர்களும் தோன்றினர். நரசநாயக்கர் இல்லறத்துக்குரிய தர்மங்களெல்லாம் மிகவும் வாய்ந்தவர். 'அன்பும் அறனும் உடைத்தா'னவரென்றும், 'இயல்பினா னில்வாழ்க்கை, வாழ்பவ'ரென்றும் அவரைப் பற்றிக்கூறுதல் நியாயமேயாகும். இவரது இல்லக்கிழத்தியரும் இவரிடம் அன்பு பூண்டொழுகினரென்றே சொல்லல் வேண்டும். ஆயினும் புத்திரர்கள் தோன்றிய பிறகு ஒருவாறு இல்லற மாண்பு மாறியது. ஒவ்வொரு பாரியையும் அரசருக்குப் பின் தன் தன் புதல்வனுக்கு ராஜ்யம் கிடைக்கவேண்டும் என்ற எண்ணங்கொண்டு ஒழுகலாயினள். அது காரணம் பற்றி அந்தப்புரத்தில் கொஞ்சம் சமாதானக் குறைவு ஏற்பட்டது. ஒவ்வொருத்திக்கும் தாதியர்

மந்தரை போன்ற மந்திராலோசனைக்காரிகளாக ஏற்பட, அடிக்கடி அந்தப்புரத்தில் உட்கலகங்கள் நேர்ந்தன. இதையறிந்த நரசநாயக்கர் துயருற்று, பிரதான மந்திரியான திம்மரசை வரவழைத்துக் குடும்ப விருத்தாந்தங்களை அவருக்குத் தெரிவித்து 'இனி ராஜ்யபரணமேயன்றி, இக்குடும்பபரணத்தையும் நீரே ஒப்புக்கொள்ளும்' என்றார். திம்மரசும் அரசர் தம்மிடம் வைத்துள்ள நம்பிக்கையை நினைத்து ஆச்சரியமுற்று; எவ்வாறு இச்சந்தர்ப்பத்தில் தீதின்றி நடந்து கொள்ளலாகும் என அதைரிய மனத்தராயினும் ஒருவாறு துணிந்து 'ஐய ! அஞ்சற்க, நான் ஜாக்கிரதையாக இருந்து தீங்குறுவகைகாப்பேன்' எனக்கூற, நரசநாயக்கரும் விசாரம் நீங்கினர்.

அன்று முதல் அந்தப்புரத்தில் நடக்கும் விருத்தாந்தங்கள் அனைத்தும் தம் காதுக்கெட்டுமாறு திம்மரசு ஏற்பாடு செய்து கொண்டனர். இது விஷயம் அரசரது ஸ்திரீகளுக்குத் தெரியவே அவர்கள் நடுக்கங்கொண்டார்கள். 'இனி சும்மாவிருத்தலே நலம்; இம்மந்திரியின் 'ஆள்வினையு மான்றவறி'வையு நோக்கிப் பகை மன்னரும் வாளாவிருக்கின்றனரன்றோ? நம் சூழ்ச்சிகள் இவரது அபார அறிவுக்கெதிரில் எவ்வாறு பயனுறும்?' என்று எண்ணினர்.

இவ்வாறு திம்மரசிடம் பயங்கொண்டு தம் அபிப்பிராயத்தை வார்த்தைகள் மூலமாயாவது செய்கைகள் மூலமாயாவது வெளிப்படுத்தாதவர்கள் அரண்மனையிலும் இராஜ்யத்திலும் பலருண்டு. ஓடிப்போன ப்ரௌட தேவராயனது சந்ததியாஸ்ரயே அரசாக்கவேண்டுமென எண்ணங்கொண்டவர்சிலர். வேறுசிலர் 'இதென்ன

அநியாயம். இம்மடி நரசிம்மன், பேருக்கு மாத்திரம் அரசரே யொழிய அரசகௌரவமெல்லாம் நரச நாயக்கரிடத்தன்றோ வுள்ளன. இது எவ்வாறு பொருந்தும்? இம்மடி நரசிம்மனிடமே எல்லா அதிகாரங்களையும் விட்டுவிடும் வண்ணம் ஏற்பாடு செய்தல் வேண்டும்' என்று அபிப்பிராயங்கொண்டனர். இதையும் அறிந்த திம்மரசு, அவர்களை அங்கங்கே உத்தியோகங்களில் அமர்த்தி, அவர்களால் தீங்கொன்றும் விளையாதவாறு நன் ஜாக்கிரதையுடன் இருந்தார். இவ்வாறு 'வகையறிந்து, தற்செய்து தற்காப் பச்'செய்தலினால் பகைவர் கொண்ட செருக்குக் குன்றியது.

XIII. திப்பாம்பாளின் சூழ்ச்சி.

தமது இரண்டாம்பத்தினியாகிய நாகாம்பாளிடம் நாயக்கருக்கு விசேஷப்பற்றுண்டு. அவ்வளவு பிரியம் மற்ற இருபாரியைகளிடத்தும் இல்லை என்று சொல்லலாம். அதுபோலவே நாகாம்பாளிடம் தோன்றிய கிருஷ்ணதேவராயனிடத்தும் மற்ற புதல்வரிடத்துள்ள வாஞ்சையை விட அதிக வாஞ்சையை நாயக்கர் வைத்தார். இதுவுமன்றி இப்புதல்வருக்குக் குருவான திம்மரசு, அரசிளங்குமாருள் புத்தி, சாமர்த்தியம், விநயம் இவைகளில் கிருஷ்ணதேவராயனே சிரேஷ்டன் என்றும் அடிக்கடி சொல்லிவந்தார். இவையெல்லாம் திப்பாம்பாளுக்கு விசேஷ வியாகுலத்தை உண்டு பண்ணின. 'ஆ! அரசர் என்னிடம் மாத்திரம் அசட்டையாயிருக்கிறார் என்றில்லையே! என் அருமைப் புதல்வனிடங் கூடவன்றோ பட்சமில்லாமலிருக்கிறார். அதுவேயுமன்றித் திம்மரசும் தேவராயன் கட்சியில் இருக்கின்

றனரோ! இதையெல்லாம் ஆலோசிப்பின் 'மூத்தவர்க் குரித்தரசெனு முறை' தவறிவிடுமென்றே காணப்படு கின்றது. ஐயோ! என் செல்வச்சேய் அங்கஹீனனு யாவது புத்தியில்லாதவனுகவாவது சாமர்த்தியம் குன் றினவனுகவாவது இருப்பின் இக்கஷ்டத்தை ஒருவாறு சகித்துக்கொள்ள முடியும். இப்போது அவன் இருக் கும் நிலையைப் பார்த்தவர் யார் தான் காலக்கிரமத்தில் அவன் 'கல்வியு மிளமையுங் கணக்கிலாற்றலும், வில்வி னையுரிமையும் வீரமும்' எய்தான் எனச்சொல்லுவார்கள். அத்தகைய மைந்தன் 'அவந்தனுய் வெறு நிலத் திருப்ப', என் சக்களத்திமகன் 'நிவந்த வாசனத்தினி திருப்ப' நானும் பார்ப்பேனே! 'அரசிற் பிறந்து பின் னரசில் வளர்ந்த', என் அருமைப்புதல்வன் அரசரின் பதவியை அடையாமற் போவானே'! என்று எண்ணி, எண்ணி ஏங்கினுள்.

மேற்கூறியவாறு பலநாள்யோசித்து மனம்நொந்த திப்பாம்பாள் யாதேனும் சூழ்ச்சிசெய்து சிம்மாசனம் தன் குமாரன் பெறுமாறு செய்ய வேண்டுமெனத் தீர் மானித்தாள். இவ்வெண்ணம் நிறைவேற வேண்டில் தேவராயன், திம்மரசு ஆகிய இவர்களிருவருள் எவரே னும் ஒருவர் இறத்தல்வேண்டுமெனக்கண்டாள். பிறகு இவருள் எவரைக் கொன்ருல், விளையும் தீங்கு சொற்ப மாகுமென ஆராய்ந்தாள். திம்மரசை மாய்த்தல் சாத் தியமு மன்று. சாத்தியமாயினும் யுக்தமுமன்று. அவர் இறப்பின் இந்த ராஜ்யத்தில் குழப்பங்கள் மிகுதியும் ஏற்படும். அப்பொழுது என்னதீங்குதான் நடக்கலா காது? என் குமாரனுக்கு ராஜ்யம் சித்திக்கும் என்று எவ்வாறு சொல்ல முடியும்? ஆதலின் திம்மரசை விட்டு

விடவேண்டியதே. தேவராயனையோ வென்றால் அவனைக் கொல்லுதலும் சுலபம்; அவன் இறந்த மாத்திரத்தாலேயே என்னெண்ணம் நிறைவேறு மென்றும் சொல்லலாம். ஏனெனில் அவனுக்குப்பின் என் வீரநரசிம்மனுக்கன்றிவேறு யாருக்கும் அரசர் ராஜ்யத்தைக் கொடுக்கமாட்டார் எனத்தெளிந்தாள்.

உடனே தனக்கு நம்பிக்கை மிகவாய்ந்த ஒரு தாசியிடம் சென்று அவளைக்கொண்டு தேவராயனது உணவில் விஷத்தைக் கலக்குமாறு பிரயத்தனம் செய்தாள். ஆயினும் திம்மரசின் முன் ஜாக்கிரதையால் அவள் தந்திரம் பலிக்கவில்லை. பலமுறை முயன்றும் இச்சூழ்ச்சி தவறியது. திம்மரசும் இனிக் கிருஷ்ண தேவராயனை அரண்மனையில் வைத்திருத்தல் பிசகெனக்கண்டு கொண்டு அவனைத்தன்னில்லத்திற்கே அழைத்துச் சென்று அங்கேயே அவனை வளர்த்துவந்தனர். ஆகவே பெற்ற தகப்பன் நரசநாய்க்கரெனினும் இச்சிறுவனை வளர்த்தெடுத்து ஞானப்பாலூட்டிய தந்தை திம்மரசே யாவார். இது காரணம் பற்றியே கிருஷ்ண தேவராயர் தம் ஆயுள் நாள் முழுமையும் திம்மரசை 'அப்பாஜி' என்று அழைப்பது வழக்கம்; அப்பாஜி, என்ற பதம் 'போற்றத்தகும் தந்தை' எனப்பொருள்படும்.

இவ்வாறு கிருஷ்ணதேவராயனிடம் மட்டிலாப் பிரியம் வைத்திருந்தபோதிலும் திம்மரசுக்கு வீரநரசிம்மனிடம் அன்பு குறையவேயில்லை; அவனையும் தம் புத்திரன்போலவே பாவித்து அவனுக்கும் தக்கபுத்திமதிகளைச் சொல்லி வந்தார்; வீரநரசிம்மனும் விநயம் குறையாதவனாய்த் திம்மரசிடத்து பயபக்தியுடனேயே ஒழுகிவந்தான்.

XIV கிருஷ்ண தேவராயனது படிப்பு.

'இளமையிற்கல்,' 'கேடில்விழுச்செல்வங்கல்வி,' கல்வியினூங்கில்லை சிற்றுயிர்க் குற்றதுணை' என்ற உண்மைகளைத் திம்மரசு சுவானுபவத்தில் அறிந்து கொண்டவரன்றோ! ஆதலின் அவர், அரசிளங்குமரனது சிறு பிராயமுதற்கொண்டே அவனுக்குக் கல்வி புகட்டத் தொடங்கினர். ஆயினும் வரவர ராஜீய வியவகாரங்களில் தமக்கு நிரம்பவும் காலம் செலவானது பற்றித் திம்மரசுக்குச் சிறுவனது படிப்பைக் கவனிக்க அவகாசமில்லாமற்போயிற்று. ஆதலின் அவர்தேவராயனது கல்வி விஷயங்களில்மனது செலுத்தி தக்க ஏற்பாடுகள் செய்யவென்றே தமது சகோதரரான கோவிந்தராஜுவைப்பிரத்யேகமாய் நியமித்தார்;கோவிந்தராஜுவும் தமது கடமைகளைச் சிரத்தையாய் நடத்திவந்தார். தேவராயன் நன் மாணுக்கனது குணங்களாம்—குருவினிடத்துச்

சென்று வழிபடுதலு
மறத்துறைவழாமையுங் குறிப்பறிந்தொழுகலுங்
கேட்டவை நினைத்தலும்பாடம்போற்றலும்
மீட்டவை வினவலும் விடுத்தலு முரைத்தலும்

உடையவனுய் வெகு உற்சாகத்துடன் கல்விகற்று வந்தான். ஆதலின் அவன் பதினெண் பிராயமாகு முன்னரே ஆந்திர கீர்வாண பாஷைகளில் சிறந்த தேர்ச்சியடைந்தான்; அப்பாஷைகளிலுள்ள உயர்ந்த கிரந்தங்களைப்படித்து அவைகளின் சாரங்களை உணர்ந்ததுமன்றித் தானே கிரந்தங்கள் இயற்றும் சக்தியையும் பெற்றனன்; "கல்வியிற் கடலேயானுன், கவினுறு கவியேறுனுன்." இதுவுமன்றிச் சாம்ராஜயத்தில் கண்

ணடம் பேசும் ஜனங்களும் ஹிந்துஸ்தானியைத் தாய்மொழியாகப்பெற்ற மகம்மதியர்களும் இருந்தகாரணம் பற்றி அவ்விருபாஷைகளையும் தெரிந்துகொள்ளல் அவசியமெனக்கண்டு அவைகளையும் அப்பியசித்தான். பிறகு திம்மரசு தாமே தேவராயனுக்கு ராஜ நீதி, தண்ட நீதி முதலிய சாஸ்திரங்களை உபதேசித்தார்.

இவ்வாறு அறிவு, ஞானம் இவைகளைச் சம்பாதிப்பதிலேயே எல்லாக் காலத்தையும் தேவராயன் செலவு செய்தான் என்று எண்ணுதல் கூடாது. தான் ஓர் அரச குமாரனென்றும் ஒரு சமயம் தான் ராஜ்யத்தையே ஆளவேண்டிவருமென்றும், அப்படி யில்லாமற் போனாலும் சைனியத்தைப் போர்க்களத்தில் வைத்துத் தான் தலைவனாய் நின்று தனது புஜபல பராக்கிரமத்தினாலும், அஸ்திர சஸ்திரத் தேர்ச்சியினாலும் தன் வீரர்களது மனத்தில் தைரியத்தையும் உற்சாகத்தையும் விளைவித்துப் போர்புரிந்து எதிரியை முறியடிக்க வேண்டிவரும் என்றும் அவன் தெரிந்துகொள்ளாமலிருக்கவில்லை. அவனது குருவும் அது விஷயத்தை நன்குயறிந்தவரே; ஆதலின் ஆரம்பமுதற்கொண்டே தேவராயனுக்குத் தக்க மனிதர்களைக்கொண்டு தேகப் பயிற்சியும் செய்வித்தார். ஆகவே வித்யாப்பியாசம் முடிவுற்ற காலத்து அவனைப்போன்ற தோள்வலியுடையவன் இராஜ்யத்தில் எவனு மிலன். வேட்டையாடுவதில் அவனைப்போலக் கைதேர்ந்த குதிரை வீரனும் இல்லை. அரண்மனையின் பெரிய முற்றங்களில் நடக்கும் போலிச் சண்டைகளில் இவன்மாதிரி போர்புரிபவன் எவனும் இல்லை. ரதசாரத்தியம் செய்வதிலும் இவனை யொப்பாரரியர்.

இவ்வாறு உளத்தின் நலமும் உடலின் நலமும் ஒருங்கே பெற்ற நம் தேவராயன், அதற்கேற்ற ஒழுக்கத்தையும் அடைந்து 'பரதார சகோதர'னாய்த் தூய மனத்துடனிருந்து அத்தூய்மையால்வரும் முகவொளியுற்றுப் பார்ப்போர் மனத்தைக்கவரும் தன்மைவாய்ந்து விளங்கினன். முகத்தில் அம்மை வடுக்கள் செறிந்திருப்பினும் அவனது கம்பீரத்தோற்றம் அவைகளை மறைத்து,

"நெஞ்சத்து
நல்லம் யா மென்னும் நடுவு நிலைமையால்
கல்வி யழகே யழகு"

என்ற ஆன்றோர் வாக்கை உண்மைப்படுத்தியது.

XV நரச நாயக்கரது மரணம்.

1503-ஆம் வருஷத்தில் நாயக்கருக்கு வியாதிகண்டு இனி தாம் உய்தல் சாத்தியமன்று எனத் தெரிந்து கொண்டார். உடனே திம்மரசை வரச்செய்து அவரிடம் இவ்வாறு உரைத்தனர். 'நண்பரே! என் காலம் குறுகியதென எனக்குத் தோற்றுகிறது. ஆயினும் இறத்தலில் எனக்குப்பயமொன்றும் இல்லை. பிறந்தவன் இறந்தே தீரவேண்டுமன்றோ? எனக்குப் பின் நம்ராஜ்ய நிலை எவ்வாறிருக்குமோ என நினைந்தே ஒருவாறு விசாரமுறுகிறேன். ஆயினும் தாங்கள் உள்ளவரையிலும் அந்த விசாரமும் வேண்டாம் என்ற தைரியமும் என் மனத்தில் இல்லாமலிருக்கவில்லை. வீரநரசிம்மனும் கிருஷ்ண தேவராயனும் மிக்க சிறுவர்கள். இது தங்களுக்குத் தெரிந்ததே. இதுகாறும் செய்துவந்தது போலவே இனிமேலும் அவர்களைப் போஷித்துத்

தக்க காலத்தில் மூத்தவனை அரசனாக்கி, அவனுக்கு மந்திரியாய்த் தாங்கள் துணை நின்று இவ்விராஜ்யம் என்ஞான்றும் நன்கு செழித்தோங்கி வளரும் வண்ணம் தாங்கள் முயற்சி செய்யவேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகிறேன். மகம்மதிய சுல்தானையும் கஜபதிமன்னனையும் தென்னிந்தியாவினின்றும் துரத்தியடிக்க நாம் இருவரும் சங்கல்பம் செய்துகொண்டோமாயினும் அது இன்னும் நிறைவேறாமலே யிருக்கிறது. எனக்குப்பிற்காலத்தும் இவ்வெண்ணத்தைத் தாங்கள் மனத்தைவிட்டு அகலாது வைத்திருந்து யாதொரு தளர்ச்சியுமின்றிப் போர் முறைகளைக் கைப்பற்ற வேண்டுமென்பது என் கோரிக்கை. அதை நிறைவேற்றுவதாகத் தாங்கள் தைரியம் கூறின், நான் ஏதும் விசாரமற்றவனாய் சமாதானசித்தனாய் உயிர் நீங்கப் பெறுவேன்.' இதைக்கேட்ட திம்மரசு, தம்மையும் மீறிக்கொண்டெழுந்த துக்கத்தை ஒருவாறு அடக்கிக் கொண்டு 'ஐய! மனக்கவலையை ஒழியுங்கள். தங்கள் மனோபீஷ்டத்தை என்னால் இயன்றவளவு நிறைவேற்றுவேன்' எனச் சொல்ல, நாயக்கர் சாந்தமனத்தினராய் உயிர் துறந்தனர்.

XVI வீரநரசிம்மன்.

நாயக்கரது மரணங் காரணமாகத் திம்மரசுக்கு அதிக விசாரம் நேர்ந்தது. வீரநரசிம்மனுக்குப் பட்டங் கட்டுவது இலகுவான காரியமாகத் தோற்றவில்லை. நரசிம்ம பூபாலரது குமாரனான இம்மடி நரசிம்மன் பெனுகொண்டாவிலிருக்க, நரசநாயக்கர் குமாரனை எவ்வாறு அரசனாக்கலாம் என எண்ணங்கொண்டவர் ஒரு சாரார். அன்றியும் ப்ரௌடதேவராயனது சந்ததியார்

களே பட்டத்துக்கு உரித்தானவர்; அவர்களுள் ஒருவனையே சிம்மாசனம் ஏற்றுவிக்கவேண்டு மெனக் கூறியவர் மற்றோர்சாரார். இவர்களது எண்ணங்களை யெல்லாம் புறக்கணித்து அவர்களது மனஸ்தாபத்தையும் பொருட்படுத்தாது வீரநரசிம்மனுக்கேபட்டாபிஷேகம் செய்வித்தாலும் அவனுக்குத் தம்மிடத்தில் உண்மையானபக்தியும் நன்றியறிதலும் இராது என்று திம்மரசுக்கு நன்றாய்த்தெரியும். ஆகவே இச்சமயம் இவரது மனம் மிகக் குழப்பமுற்றிருந்தது. ஆயினும் வீரநரசிம்மன். தம்மிடத்து வந்து அன்புள்ளவன் போல நடித்துத் தமது உதவியை வேண்டத் திம்மரசும் தாம் நாயக்கருக்குக் கூறியுள்ள வார்த்தையையுன்னித் தகுந்த பிரயத்தனங்கள்செய்து வீரநரசிம்மனைச் சிம்மாசனம் ஏற்றுவித்தார். திம்மரசிடம் இருந்த பயம்காரணமாக விஜயநகரத்து ஜனங்கள் இதற்கு விரோதமாய் ஒன்றும் சொல்லாது சும்மா இருந்தனர்.

இது விஷயம் தெரிந்த திராவிட ஆந்திர கர்னாடக தேசத்துச் சிற்றரசர்கள் பெரும்பான்மையோரும் வீரநரசிம்மனை ராஜ்யத்துக்கு அதிபதியாய் அங்கீகரித்து வழக்கம்போல் கப்பம்கட்டி வந்தனர். ஆயினும் மைசூர் பிராந்தத்திலுள்ள சிலசிற்றரசர்கள், வீரநரசிம்மனைத் தங்கள் மண்டலமன்னனாய் ஒப்புக்கொள்வதில்லை எனச் சொல்லிக் கப்பம் கட்டவும் மறுத்தனர். வேறு சிலர் இம்மடி நரசிம்மனை அரசனாக்க எண்ணிச் சூழ்ச்சிகள் செய்து வந்தனர்.

இவற்றை யெல்லாம் அறிந்த திம்மரசு சும்மா இருக்கவில்லை. சிற்றரசரைக் கீழ்ப்படுத்த முயற்சிக்குமுன் இராஜ்யத்திலேயே உட்கலகங்கள் உண்டாகாமலும்,

இதரமன்னர்கள் படையெடுத்து வாராமலும் பார்த்துக் கொள்ளுவது அவசியமாதலின், அதற்கேற்ற முறைகளை முதல்முதலில் அனுஷ்டித்துவந்தார். மகம்மதியர் உட்புகா வண்ணம் துங்கபத்திரை நதிக்கரையில் ஓர் சேனையையும், கஜபதிமன்னன் சேஷ்டை செய்யாதிருக்குமாறு உதயகிரியில் மற்றோர் சேனையையும் வைத்தார். இம்மடி நரசிம்மன் தலையெடுக்காம லிருப்பதை உத்தேசித்து அவனைப் பெனுகொண்டா பிராந்தத்துக்கு அரசனாகப் பட்டாபிஷேகம் செய்வித்து, மற்றுஞ் சில சௌகரியங்களையும் அளித்து அவனைச்சும்மா இருக்கச் செய்தனர். அன்றியும் பிரதான நகரமான விஜய நகரத்துள்ள சேனையைப் பலப்படுத்தி அதைத் தம் சகோதரனான கோவிந்த ராஜுவின் தலைமைக்குக் கீழ்வைத்தார். மேற்கூறிய சாதனங்களால் ஒருவாறு தேசத்தில் சமாதானம் ஏற்பட்டது. பிறகு, வேறொரு சேனையைச்சேர்த்து அதை அரசரது தம்பிகளான அச்சுதராயன், ஸ்ரீரங்கராயன் என்பவர்கள் வசம் ஒப்பித்து மைசூர் பிரதேசத்துக்குச் சென்று அங்குக் கப்பம் கட்டமறுத்த தலைக்காடு, உம்மத்தூர்ச் சிற்றரசர்களை வென்று அவர்களைக் கப்பம் கட்டச்செய்து வருமாறு அனுப்பினர். அவ்வாறே அவர்களும்சென்று கொங்கணதேசத்தில் சிலசிற்றரசர்களைவென்று அவர்களிடம் கப்பம் பெற்றுத் தலைக்காடு போய்ச்சேர்ந்தனர். இதை அறிந்த அத்தேசத்துச் சிற்றரசன் இவர்களை எதிர்த்துவர, ஒரு பெரும் போர் நேர்ந்தது. கடைசியில் அரச சகோதரர்கள் தோல்வியுற்றனர். ஆகவே கொண்ட எண்ணம் நிறைவேறாது அவர்கள் விஜய நகரத்துக்குத் திரும்பினர்.

இது நடந்த சிலநாட்களான பிறகு ஒருசமயம் திம்மரசு அரசரிடம்சென்று 'ஐய! தம்சகோதரர்கள் தலைக்காட்டுச் சிற்றரசனால் முறியடிக்கப் பட்டுத் திரும்பிவந்தது ஓர் துக்க சம்பவமே. ஆயினும் நாம் இனிச்சும்மா இருத்தல் கூடாது. கப்பம் கொடாச் சிற்றரசர்களைக் கீழ்ப்படுத்தல் வெகுமுக்கியம். அன்றேல் இப்போது நகத்தால் கிள்ளி எறியக்கூடியது சீக்கிரத்தில் கோடரி கொண்டு வெட்ட வேண்டியதாய் வளரும்.

இளைதாக முண்மரங் கொல்க களையுநர்
கைகொல்லுங் காழ்த்த விடத்து.

அதாவது, கப்பம் கட்டாச் சிற்றரசர் சிலர் உளர் என்ற சங்கதி பலருக்குந் தெரியுமாயின் வேறு சிற்றரசர்களும் கப்பம் கட்ட மறுப்பார்கள். ஆதலின் உடனே செய்யத்தக்க காரியம் ஒன்று உளது. அது யாதெனின், நீங்கள் தீர்த்த யாத்திரை என்ற வியாஜத்தை வைத்துக்கொண்டு அங்கங்கே சென்று, சிற்றரசர்கள் உங்களது தோள்வலியையும் பராக்கிரமத்தையும் காணச்செய்து அவர்களிடமிருந்து வரவேண்டிய கப்பத்தைப் பெற்றுவருவதே. எப்பொழுதேனும்சேனை பலம் குறையின் எனக்குத் தெரிவித்தால் நான் மனிதர்களை அவ்வப்போதே அனுப்புவேன்' என்று சொன்னார். வீரநரசிம்மன் சந்தோஷித்து, 'அமைச்சரே! அப்படியே செய்வேன். என் தந்தை இறக்குங்காலை தாங்கள் சொல்லும் யோசனைகளைக் கைப்பற்றி நடக்க வேண்டுமென உரைத்தாரன்றோ? அதை நான் மறப்பேனோ?' என்றான். திம்மரசு உடனே ஒரு பெருஞ்சேனையை ஆயத்தப்படுத்த, வீரநரசிம்மனும் தீர்த்த யாத்திரையை உத்தேசித்துத் தென் தேசத்துக்குப் பயணம் புறப்பட்டான்.

XVII. கிருஷ்ண தேவராயன் திக்விஜயம்.

அரசர் சென்று சில தினங்கள் ஆனதும், திம்மரசு கிருஷ்ண தேவராயனை வரவழைத்து, 'அப்பா! அரசர் தீர்த்தயாத்திரைக்குப்போவதாய் உரைப்பினும் திக்விஜயத்தை உத்தேசித்தே தக்ஷிண தேசம் சென்றிருக்கிறார். நீயும் ஒரு சேனையுடன் மைசூர் பிராந்தம் சென்று கப்பம் கொடுக்க மறுத்த உம்மத்தூர்ச் சிற்றரசனையும் மற்றவர்களையும் கீழ்ப்படுத்தி வருதல் யுக்தமெனத் தோன்றுகிறது. அவ்வாறு செய்யின் உனது வீரம் எங்கும் பிரசித்தமாவது மன்றி நம் ஸாம்ராயத்துக்கும் பலம் ஏற்படும். ஆதலின் உடனே புறப்பட்டுப்போய் அரசர் வருமுன் திரும்பவேண்டும்' எனவே கிருஷ்ண தேவராயனும் ஒப்புக்கொண்டான். சீக்கிரத்தில் ஒரு சேனையும் சித்தமாயிற்று.

தேவராயன் சேனையுடன் உம்மத்தூர் சென்று அக்கோட்டையை முற்றுகை செய்தான். இடைவிடாது மூன்று மாதகாலம் போர் செய்து கடைசியில் அதைக் கைப்பற்றினன். பிறகு சிவ சமுத்திரம் சென்று அதையும் முற்றுகை போட்டான். அக்காலத்தில் அக்கோட்டையை ஆண்டுவந்த சிற்றரசன் கங்கராஜு என்பான். தேவராயன் அச்சிற்றரசனது சத்துருவான சிக்கராஜு என்பவனுடன் சிநேகம் செய்து அவனது துணையையும் பெற்றனன். ஆகவே கங்கராஜு வெகு தீரமாய் எதிர்த்து ஒரு வருஷகாலம் போர்புரிந்தும் கடைசியில் தேவராயன் வெற்றியடைந்தான். கோட்டையும் அவன் கைவசம் ஆயிற்று. கங்கராஜுவோ 'மானமழிந்தபின் வாழாமை முன்னினிதே' என நினைந்து காவிரியாற்றில் விழுந்து உயிர் துறந்தனன். பிறகு

வேறு சில சிற்றரசர்களையும் தேவராயன் முறியடித்தான். இவ்வாறு கைக்கொண்ட கருமம் இனிதே முடிவுபெறத் தேவராயன் சந்தோஷம் மிகுந்து ஜயபேரிகையுடன் ஸ்ரீரங்கப்பட்டணம் சென்று அதை அப்பிராந்தத்தில் விஜயநகர ஸாம்ராஜ்யத்தின் கீழுள்ள ஊர்களுக்குப் பிரதான நகரமாகச் செய்து, அப்பதியிலுள்ளபெருமானைச்சேவித்து 'எல்லாம்வல்ல இறைவ! நினது அருட்பிரபாவத்தாலன்றோ எனக்கு வெற்றி கிடைத்தது. நீ யன்றியோரணுவும் இவ்வுலகில் அசையுமோ' என விநயத்துடன் தொழுது அவரை வழிபட்டு, தனது வெற்றிக்கு அடையாளமாய் அந்நகரில் ஒரு ஸ்தம்பத்தை நாட்டி அதன் இருபக்கங்களிலும் சங்கு சக்கரங்களின் உருவங்களை அமைப்பித்து விஜயநகரம் திரும்பி வந்தனன். கப்பமாகக் கிடைத்த ஒரு கோடி வராகனையும் ராஜ்ய பொக்கிஷத்தில் சேர்த்தனன்.

XVIII வீரநரசிம்மன் திக்விஜயம்.

தக்ஷிண தேசம் சென்ற வீரநரசிம்மனும், தனது புஜபலத்தாலும் கலங்கா நெஞ்சத்தாலும் எதிரியை நடுங்கச்செய்யும் தன்மையாலும் சென்ற விடமெல்லாம் சிறப்பெய்தினன். சேர, சோழ, பாண்டிய மன்னர்களும் இவனுடன் சிநேகம் செய்து கப்பம் கட்டவும் உடன் பட்டனர். இவனை எதிர்த்துப்போர் புரிந்தவர் வெகு சிலரே யாவர்; அவர்களுள் ஒவ்வொருவனும் அடியோடு முறியடிக்கப்பட்டான். ஆகவே வீரநரசிம்மனது கீர்த்தி எங்கும் ப்ரவியது. ஜனங்கள் அவனை ராஜபரமேசுவரனென்றும், மகாராஜாதிராஜனென்றும்,

"மூருராயகண்டா" என்றும் பேரிட்டுக் கொண்டாடினார்கள். தான் சென்ற மார்க்கத்திலிருந்த திவ்ய க்ஷேத்திரங்களுக்கெல்லாம் சென்று, அங்குள்ள கோவில்களுக்கு மானியங்கள் விட்டுத் தக்கோர்களுக்கு பூதானம் சுவர்ணதானம் முதலியன புரிந்து, சுமார் இரண்டு வருஷம் இவ்வாறு திக்விஜயம் செய்து பிறகு விஜய நகரம் திரும்பி வந்தனன். மேற்கூறியவாறு இவன்தரிசித்த க்ஷேத்திரங்கள் திருப்பதி, காஞ்சீபுரம், பக்ஷிதீர்த்தம், சிதம்பரம், கும்பகோணம், ஸ்ரீரங்கம், ஜம்புகேசுவரம், மதுரை, ராமேசுவரம், காளாஸ்தி, அகோபிலம், ஸ்ரீசைலம் முதலியனவாம். இவ்வூர்க் கோயில்களிலுள்ள சிலாசாஸனங்களினால் மேற்கூறிய விஷயங்கள் விசதமாகின்றன.

XIX வீரநரசிம்மனது உண்மை மனநிலை.

இவ்வாறு தென்னிந்தியாமுழுதும் தனது பெரும் கீர்த்தியும் விளங்கப்பெற்ற வீரநரசிம்மனைப் பெரியோன் எனக்கூறுதல் நியாயமாயினும், சில விஷயங்களில் அவனுக்குப் பெருந்தன்மையென்பதேயில்லாமல் போயிற்று.

வினைக்குரிமை நாடிய பின்றை யவனை
யதற்குரிய னாகச் செயல்

இதன்றோ அரசநீதி; இதையுணராது அவன் திம்மரசிடம் சதா சந்தேகங்கொண்டே ஒழுகினன். கிருஷ்ணதேவராயனிடம் உள்ள அன்புகாரணம் பற்றித் தனக்குப்பின் தன் குமாரனுக்கில்லாது அவனுக்கே திம்மரசு, பட்டம் கட்டுவிப்பர் என்ற ஐயுறவு இவன் மனத்தை விட்டு அகலவேயில்லை. ஆதலின், எவ்வாறு

யினும் கிருஷ்ணதேவராயனைக் கொல்ல வேண்டுமென நினைந்து பற்பல சூழ்ச்சிகள் செய்தான். இதைத் தெரிந்து தகுந்த உபாயங்களை அப்போதப்போது திம்மரசு செய்து வந்தமையால் தேவராயன் உயிர்தப்பினன். ஆயினும்,

உறன்முறையா னுட்பகை தோன்றி னிறன்முறையா
னேதம் பலவுந் தரும்

அன்றோ! எப்பொழுது என்ன தீங்கு நேரிடுமோ என்று அஞ்சித் துஞ்சாது விழித்திருத்தல் கலங்கா நெஞ்சத்தார்க்கும் கடின மன்றோ! ஆதலின், திம்மரசும் தேவராயனுக்கு யாதொரு தீதும் வாராத படி காக்கும் விஷயத்தில் மிக்க துன்பம் எய்தினர்.

XX வீரநரசிம்மனது மரணம்.

இவ்வாறு வீரநரசிம்மன் ஆறுவருஷகாலம் அரசாண்டுவந்தான். புதிதாகத் தான் தேசங்களை ஜயித்து அவைகளைத் தம் ராஜ்யத்தோடு சேர்க்கவில்லையாயினும், ஏற்கெனவேயுள்ள ராஜ்யம் சிதறுண்ணுது பார்த்துக்கொண்டான். அதுவே கஷ்ட சாத்தியமானது என்று நாம் மேற்கூறிய விஷயங்களினின்றும் விளங்கும்.

தனது மரணகாலம் கிட்டவே, வீரநரசிம்மனுக்குப் புதியதொரு சூழ்ச்சி மனத்துள் எழுந்தது. படுக்கையிலிருந்தபடியே திம்மரசை வருவித்து அவரிடம் பின்வருமாறு கூறினன். 'அமைச்சரே! எனக்கு நிர்யாண காலம் வெகு சமீபத்தில் உளது. இதுகாறும் தங்களுடைய மதிநுட்பத்தாலும் ஆன்றமைந்த சொல்லாலும்

ஆள் வினையாலுமன்றோ என்னரசை நிலைநிறுத்தினீர்கள். தங்களது தயவின்றேல் இப்பதம் எய்தியிருப்பேனோ? இனியும் தங்களது துணையின்றி இவ்விராஜ்யம் என் சந்ததியார்க்கு நிலைக்குமோ? கத்திக்குக் கவசம்போல என் தந்தையுடன் இடைவிடாது கூடிநின்று அவரது சுகதுக்கங்களை யெல்லாம் தங்களுடையனவாகப் பாவித்தொழுகிய தாங்கள், அவர் இறக்குந் தறுவாயில் தனித்துரைத்த மொழியை மேற்கொண்டு கிருஷ்ண தேவராயனிடம் கொண்டுள்ள வாஞ்சையையும் மறந்து, என்னைச் சிங்காதனம் ஏற்றுவித்தனிர் அன்றோ? அவ்வாறே அவரது புதல்வனும் என்னிடத்தும் அன்பு பாராட்ட வேண்டுமென்றது எனது இறுதிவேண்டுகோள்; என்மகன் திருமலை வெகு இளம் பிராயத்தினன். இப்பொழுது அவனுக்கு ஐந்தே வயசு. தங்களது போஷிப்பிலிருந்து வளர்ந்தால் சீக்கிரத்தில் அரசாளும் யோக்கியதையைப் பெறுவான் என்பதில் ஐயமில்லை. அவனிடம் தாங்கள் புத்திர வாஞ்சை வைத்தல்வேண்டும். துணைநின்று அவனைக் காலத்தில் அரசனாக்கவும் வேண்டும். இவ்வெண்ணம்நிறைவேறாது செய்யக்கூடிய தடைகளையும் நீக்கவேண்டும்.

ஐய! இன்னும் ஒரு வேண்டுகோள் உளது; அதுவும் இவ்விஷயத்தை யொட்டியதே. எனக்குப் பின், என் குமாரனுக்கு இடையூறு விளைக்கக் கூடியவன் இவ்விராஜ்யத்தில் ஒருவனேயாவன். அவனும் தம்முடைய வசத்திலே இப்போதுள்ளான். அவனுக்கு ராஜ்யம் சித்திப்பது சாத்தியமன்று என்ற தைரியம் ஏற்படின் என்மனம் அமைதியடையும். விசாரமின்றி நான் உயிர் நீங்குவேன்.

அவ்வொருவன் கிருஷ்ண தேவராயனே யாவன். அவன் அரசாளும் திறமை யுடன் இருக்கும்வரை என் மகனுக்கு ஆபத்துண்டு. யானைக்கும் அடிசறுக்கு மன்றே! எனக்குப்பின் இந்த ராஜ்யத்தில் தங்களுக்குச் செலுகை குறையலாம். அப்போது என்ன தான் நேரிடலாகாது? ஆதலின் நான் உயிருடனிருந்து, தங்கள் செல்வாக்கிருக்கும் போதே அவ்வபாயத்தை நீக்கிக்கொளல் வேண்டும். தாங்கள் தகுந்த யுக்தி செய்து கிருஷ்ண தேவராயனது இருகண்களையும் அவித்துவிடல் வேண்டும். பிடுங்கிய கண்களைப் பார்த்தாலல்லாது என் ஆவி இவ்வுடலை விட்டு நீங்காது. இப்பேருதவியைத் தாங்கள் எனக்குச் செய்யத்தான் வேண்டும்,

கனவிலும்கூட எதிர்பாராத இம் மொழிகளைக் கேட்டுத் திம்மரசு திடுக்கிட்டு உள்ளங்கலங்கினார். ஆறாத்துயருற்ற விடத்து மதிவிளக்கம் மாயமாய்ப் பறக்கு மன்றே? ஆதலின் அரசருடைய வேண்டுகோளுக்குப்பதில் ஒன்றும் சொல்லத் தோன்றாது சற்றுத் திகைத்தார். சில நிமிஷங்களுக்குள் மனவமைதி அடைந்து பிரகாசம் பொருந்திய முகத்துடன் அரசரை நோக்கி, 'ஐயா! அஞ்சற்க. நிர்யாணகாலத்துத் தாங்கள் அளிக்கும் ஆக்கினைக்கு வேறு கூறுதலும் உண்டோ! தங்கள் உள்ளப்படியே ஆகுக. சீக்கிரத்தில் கிருஷ்ண தேவராயனது இருகண்களையும் கொணர்வித்து இங்கே போடுவேன், எனச்சொல்லி வெளியே சென்றார்.

உடனே ரகஸியமாய் ஒரு நம்பிக்கை வாய்ந்த வேலைக்காரனை யழைத்துச் சீக்கிரமாய் ஒரு வெள்ளாட்

டைக்கொன்று அதன் கண்களைத் தனியே பிடுங்கி அவைகளை இங்கே கொண்டுவா என உத்திரவிட்டார். அவனும் அவ்வாறே செய்ய, கண்களைக் கொண்டுபோய் வீரநரசிம்மனிடம் காண்பிக்க அவன் சந்தோஷமுற்றவனாய் உயிர்நீங்கினன்.

பிறகு திம்மரசு கிருஷ்ணதேவராயனை வரச் செய்து நடந்த விருத்தாந்தங்களை யெல்லாம் அவனுக்குரைத்து 'இனி கொஞ்ச நாளைக்கு நீ என் கிருகத்திலேயே மறைவில் இரு' என வேண்ட, தேவராயனும் அப்பாஜியின் அடிவணங்கி அவர் தனக்குச்செய்த பரோபகாரத்துக்கு வியந்து யாதொன்றும் சொல்லத் தோன்றாதவனாய் அவர் செப்பிய வண்ணமே அவர் கிருகத்தில் இருந்தான்.

1509-ஆம் வருஷத்தின் ஆரம்பத்தில் வீரநரசிம்மன் தென்னுலகம் அடைந்தான்.

XXI கிருஷ்ணதேவராயரது பட்டாபிஷேகம்.

தாம் ஏற்கெனவே யெண்ணி யிருந்தவிதமே கிருஷ்ணதேவனை அரசராக்கத் திம்மரசு தீர்மானித்தனர். விஜய நகரத்துள்ள பிரமுகர்களும் இதை ஆமோதித்தார்கள். ஸாம்ராஜ்ய சிற்றரசர்களும் கேட்டு மனம் உவந்தார்கள். இதைப்பொறாத சிலமதியீனர்கள் உண்டெனினும் அவர்கள் திம்மரசுக்குப்பயந்து சும்மாவிருந்தனர். 1509-ஆம்வருஷம்பிப்ரவரிமாதம்4-ஆம்தேதிக்குச் சரியான சுக்லநாமஸம்வத்ஸரம் மாகமாஸம் சுத்தம் சதுர்த்தசி சுப தினத்தன்று பட்டாபிஷேக மஹோற்சவம் நடைபெறுமென்றும், யாவரும் வந்து வைபவத்தைக்

கண்டு களிக்கவேண்டுமென்றும் பிரதான நகரத்தில் பறையறைவித்து அயலூர்மன்னர்களுக்கும் சிற்றரசர்களுக்கும் இதர சிரேஷ்டர்களுக்கும் பத்திரிகைகள் அனுப்பப்பட்டன.

பட்டாபிஷேக மகோற்சவத்தன்று விஜயநகரம் இருந்த கோலத்தை வர்ணித்தல் சுலபமன்று. நான்கு பக்கங்களிலும் செவ்வனே அலங்கரிக்கப்பெற்று விஜயநகரம் வாசவனது நகரமெனவிளங்கிற்று. விசாலமான ராஜவீதிகளெல்லாம் தண்ணீர்தெளிக்கப் பெற்று எங்கும் மலர்கள் இறைக்கப்பட்டிருந்தன. மாடமாளிகைகளின் மீதும், கூடகோபுரங்கள் மீதும், ஆலயங்களிலும் மண்டபங்களிலும் கோட்டையின்மீதும் கடைத்தெருக்களிலும் பற்பலவர்ணங்களமைந்த விசித்திரமான கொடிகளும் பதாகைகளும் பறந்தன. ஒவ்வொரு வீட்டு வாசலிலும் திண்ணையிலும் கோலமிட்டு வாசற்படியில் தோரணங்கட்டி, மஞ்சட்பொட்டும் குங்குமப்பொட்டும் இட்டு, ஸ்திரீகள் அலங்காரம் செய்திருந்தனர். வீதிகளில் ஆங்காங்கு, குறுக்கே மலர்த்தோரணங்களும் இலைத்தோரணங்களும் உயர்ந்து தொங்கின. ஆடவர், பெண்டிர், குழந்தைகள் யாவரும் சிறந்த அணிகள் அணிந்து உயர்ந்த ஆடைகளுடுத்து அங்கங்கே தெருக்களிலும் திண்ணைகளிலும் உபரிகைகள் மீதும் கூட்டமாய்நின்று கிருஷ்ண தேவராயனது அதிருஷ்டத்தையும் திம்மரசின் சாமர்த்தியத்தையும் குறித்துப்பேசிக் கொண்டிருந்தனர்.

அரண்மனையின் வைபவத்தை விவரித்துக் கூற முடியுமோ! எங்கு நோக்கினும் தங்கமயமான காட்சியேயன்றி வேறில்லை. ஆயுதசாலைகளும், அரங்கமேடைக

ளும்,நாடக மண்டபங்களும், பகற்போது போக்கிடங்களும், சிலம்பக் கூடங்களும், சித்திரசாலைகளும் கொடித் தம்பங்கள் மிகுந்து, அநேக அருங்கலனிருக்கை செறிந்து சிற்பியர்கள் செய்த தொழில்களின் அழகு வாய்ந்து விளங்கின. பூப்பந்தர்கள், மலர்த்தோரணங்களும் மணித்தோரணங்களும் குலைவாழைகளும் கமுகுக் குலைகளும் தென்னங் கூந்தல்களும் மாவிலைக் கொத்துக்களும் செறிந்து அங்கங்கே கமழ்ந்தன.

அரசனது கொலுமண்டபம் மிகவும் அழகாய் அலங்கரிக்கப் பட்டிருந்தது. கொடித் தம்பங்களெல்லாம் இரத்தினங்கள் நிறைந்து விளங்கின. சுவர்களோ அகன்று நீண்டெழுந்த கண்ணாடிகளால் செறிக்கப் பட்டுத் திகழ்ந்தன. தரையும் நானா வர்ணங்களமைந்த பளிங்குக்கற்களால் அமைக்கப்பட்டுப் பற்பல சித்திர உருவங்கள் பொதிந்து இலங்கியது. மண்டபத்தின் நடுவில்,

"மாணிக்கப் பலகை தைத்து வயிரத் திண்கால்கள் சேர்த்தி
ஆணிப்பொன் சுற்று முச்சி யழகுறச் சமைத்த பீடம்"

என்று வர்ணிக்கத்தகும் உயர்ந்த சிம்மாசனம் ஜிலுஜிலு வென்று பிரகாசித்தது. அதற்குப் பின்னும் இருபக்கங்களிலும், தங்கத்தாலும் வெள்ளியாலும் இயற்றப்பெற்ற நாற்காலிகள் வரிசையாகப் போடப்பட்டிருந்தன. அந்தப் புரத்தினின்றும் மண்டபத்துக்குச் செல்லும் மார்க்கம், வரிசை வரிசையாக வகுக்கப்பட்டுத் தகுந்த கலனணிந்து ஆயுதமேந்தியிலங்கும் படைகளால் மிகுதியும் நிறைந்திருந்தது. வாத்தியம் வாசிப்பவர் ஒரு புறமும், அரசனைத் துதித்துப்பாடுவோர்

ஒரு புறமும், நடனஸ்திரீகள் ஒருபுறமும், வேதப்பிராமணர்களும் பௌராணிகர்களும் மற்றோர் புறமும் நின்று, முறையே வாத்திய கோஷங்களும் துதிபாடல்களும் கேளிக்கைகளும் வேதபுராண படனங்களும் செய்துவந்தனர். பட்டாபிஷேகசமயம் கிட்டவே கிருஷ்ணதேவராயனைக் கௌரவப்படுத்துவதற்கென்றே விஜயம் செய்துள்ள கண்டிகோட்டா, ஸ்ரீரங்கப்பட்டணம், நந்தியால், ஆகுவீடு, கோசர்லகோட்டா முதலிய தேசத்து மன்னர்களும், ஸாம்ராஜ்யத்துள்ள சிற்றரசர்களும், மந்திரி பிரதானி தளகர்த்தரும் இதர பிரபுசிரேஷ்டர்களும் ஒருங்கே வந்து தங்கள்தங்கள் ஆசனங்களில் அமர்ந்தனர்.

கிருஷ்ணதேவராயனும், அன்று காலையில் வெகு சீக்கிரமே எழுந்து ஸ்நானம் செய்து வெண் பட்டு உடுத்திக் கோயில் சென்று தேவபெருமானை வணங்கிக் கிரமப்படி பூஜைசெய்வித்து, ‘இறைவ! இன்று நான் பெறவிருக்கும் ராஜ்யத்தைச் செவ்வனே ஆண்டு தீதிலாது ஒழுகி மட்டிலாமாட்சியை நானும் பெற்று, நோயிலாவாழ்க்கையும் தட்டிலாச்சுகமும் பிரஜைகளும் பெறுமாறு அருள் புரிக’ என மீண்டும் மீண்டும் பிரார்த்தித்தனன். பிறகு தன்மாளிகைக்கு வந்து அறுசுவையன்னம் உண்டு அருங்கலனணிந்து கதிரவன் ஒளிபோல் இலங்கும் திவ்ய ஆடையுடுத்து ஆஸ்தான மண்டபத்துக்கு ஏகச் சித்தமாயினன்.

புறப்படுந்தறுவாயில் திம்மரசு கிருஷ்ணதேவராயனிடம் வந்தார். வந்ததும், ‘ஐய! சற்று ஏகாந்தமாய் இவ்வறையில் இருப்போம், வாரீர்’ எனவே இருவரும் அங்கேசென்றனர். போனதும், திம்மரசு தேவராயனது

கன்னத்தில் 'பளீர்' என ஓர் அறை கொடுத்தார். பிறகு, கொஞ்சம் பின்வாங்கித் தலைகுனிந்து சும்மா நின்றனர். தேவராயனும் ஒன்றுந் தெரியாதவனாய்த் தானும் தலைகுனிந்து நின்றனன். சிலநிமிஷங்களாயினபின் திம்மரசு, 'ஐய! என்மீது கோபமோ?' என வினவ, கிருஷ்ண தேவராயன்

ஐயநீரென்னிடங் கொண்டருளன்பினை
எங்ஙனஞ்செப்புவேன் எங்ஙனம் போற்றுவேன்
திங்களிற் குளிர்ந்து திகழ்ந்தருள் நோக்கும்
அருளும் பொறையும் அளவிலா நுட்பமும்
ஆன்ற வறிவும் அரும்பெறற் றிட்பமும்
எய்திய நின்றுணை யின்றேல் நானும்
எவ்வா றுய்வேன் எவ்வா றுய்வேன்
பாருக் கொருவனாய்ப் பகருயென் றந்தை
ஓர்ந்தே யன்றோ வென்னையும்மிடம்
தஞ்சமென் றிருத்தித் தானும் போந்தனன்
தாயும் நீரே தந்தையும் நீரென்
றென்றே நும்பா லினிதா யொழுகின்
சிறப்பே யன்றிச் சிறிதோர் குறையும்
வாரா தெனவே வன்மைகொள் மனத்தேன்
ஓரா தப்பா ஜியைப்பழி யுரைப்பனே
ஏதோ வென்மதிக் கெட்டிலா மர்மம்
இக்கா ரியத்தினி லியைந்தே யுளதால்
இதிலே யையம் எனக்குச் சிறிதுமில்
அதையுமெனக்கினி யறிவிப் பீரோ
என்னுயிர்க் குயிரே எந்தையப் பாஜியே.

என்றான்.

திம்மரசு சந்தோஷ முற்றவராய்ப் புன்முறுவலுடன், ஆம், இதில் ஓர் ரகஸியமுளது என்பது உண்மையே. அதை விவரிப்பேன் கேளும். தாங்கள் செல்வத்தில் வளர்ந்தசேய்; என்றும் சுகமே அனுபவித்தவர்;

வறுமை என்பதே தெரியாதவர். கஷ்டத்தின் கொடுமையும் தேக தண்டனையின் குரூரமும் அறியாதவர். ஆயினும் இன்று ராஜ்யாதிகாரம் எய்தியபின், நீதி செலுத்து முறையில் ஆயிரக்கணக்கான பேர்கள் குற்றவாளிகளாய் உங்களிடம் வருவர். அப்போது அக்குற்றவாளிகளிடம் நீங்கள் தண்டோபாயம் செலுத்த நேரிடும். தண்டனை எத்தன்மையது என்றே அறியீராயின் குற்றத்துக்கு மிகுந்த தண்டனை விதிக்கநேரிடலாம். ஆதலின் தண்டனையால் வரும் தேககஷ்டமும் மனத்துயரும் எது போலிருக்கும் என சுய அனுபவத்தில் உங்களுக்குத் தெரியவேண்டுமென்றே இக்காரியம் செய்தேன்.

"கடுமொழியுங் கையிகந்த தண்டமும் வேந்த
னடு முரண் டேய்க்கு மரம்."

அன்றோ?' என்று உரைத்தார். இதைக்கேட்டுத் தேவராயனும் சந்தோஷம் மிகுந்து அமைச்சரை வணங்கி 'ஐய! இவ்வாறே என்னை எப்போதும் காத்தருள்க' என வேண்டினன்.

பிறகு இருவரும் வெளியேவந்தார்கள். வெகு அழகாய்ச் சித்திரித்த அம்பாரியுடன் விளங்கிய பெரியதோர் கஜத்தின்மீது தேவராயன் அமர்ந்தான். அதற்குப்பின் நின்ற மற்றொரு யானையின்மீது திம்மரசு ஏறிக்கொண்டார். சங்கு, தாரை, தம்பட்டம் முதலிய போர் இசைக் கருவிகளும், வீணை, மிருதங்கம் முதலிய இன்னிசைக் கருவிகளும், மற்றுமுள்ள வாத்தியங்களும் கோஷிக்க, 'ஜய, விஜயீபவ' என்று எங்கும் குழுமிய ஜனங்கள் ஆரவாரிக்க, கடல் போல் ஒலிக்கும் ராஜவீதிமார்க்கமாய் இனிதே பவனிவந்து அரண்மனை புகுந்து சபா மண்டபம் சேர்ந்தனர். பிறகுகுறித்த சுபமுகூர்த்தத்தில்

'மங்கல கீதம் பாடமறையொலி முழங்க வல்வாய்ச்
சங்கினங் குமுறப் பாண்டி றண்ணுமை யொலிப்பத் தாவில்
பொங்குபல் லியங்களார்ப்பப் பூமழை பொழிய,'

தேவராயன் மகுடம் தரித்தான்.

XXII திம்மரசின் காருண்யம்.

வீரநரசிம்மன் இறந்ததும் திம்மரசு, கிருஷ்ணதேவராயன் பட்டத்துக்குவர வேண்டியதை முன்னிட்டு வீரநரசிம்மனது புதல்வனையும், கிருஷ்ணதேவராயனது தம்பிகள் இருவர்களையும் சிறைசெய்வித்தனர். பிறகு தேவராயன், சிம்மாசனமேறிச் சில காலம் ஆனதும் ஒருநாள் திம்மரசு அரசனிடம் சென்று, 'ஐய! நம் ராஜ்யத்தில் இப்போது சமாதானமே அமைந்துள்ளது. உட்கலகங்கள் ஏதேனும் விளையுமோ என்று அஞ்ச இடமில்லை. தாங்கள் பட்டத்துக்கு வரக்கூடாது என்றெண்ணங் கொண்டவர்களும் இப்போது தங்களது பராக்கிரமத்தையும் உதாரகுணத்தையும் அறிந்து கொண்டு பூர்வம் உள்ள மதியீனத்தைப் போக்கிக் கொண்டனர். ஆதலின் சிறையிலிருக்கும் தங்கள் தமையன் குமாரனையும் தங்கள் தம்பிகளையும் சிறையினின்றும் விடுவிக்கலாம் எனத்தோன்றுகிறது. 'கருமஞ்சிதையாமற் கண்ணோடல்' அரசரின் முக்கிய தருமமன்றோ! அவர்களைச் சிறையினின்றும் நீக்கிச் சந்திரகிரிக்கு அனுப்பி, அங்கே அவர்கள் ஒவ்வொருவருக்குஞ் சில கிராமங்களைத்தந்து, சொல்பசேனையையும் அவர்கள் வசம் வைத்துச் சுகமே காலம் கழிக்கச்செய்வதே நலம்' என்றார். கிருஷ்ண தேவராயன் இவ்வபிப்பிராயத்தை உடனே அங்கீகரித்தனன். அவ்வாறே திம்மரசு அவர்களை விடுவித்து, சந்திரகிரிக்கு அனுப்பி அவர்கள் அங்கே விசாரமின்றிக் காலக்ஷேபம் செய்வதற்குத் தகுந்த ஏற்பாடுகள் செய்தார்.

XXIII திம்மரசின் நிபுணத்துவம்.

தம் தந்தையின் வழியைக் கடைப்பிடித்துத் தென்னிந்தியா முழுவதையுமே ஒரு குடையின்கீழ்க் கொணர்தல் வேண்டும் என்பதே கிருஷ்ணதேவராயரது முக்கிய நோக்கம். இதுவிஷயமாய் ஆலோசித்த காலத்து, திம்மரசு, 'ஐய! அவசரப்படற்க. தம் வலியுணராது போர்செய்து எதிரிவசப்பட்டு மடிந்தவர் பலர் உளர்.

"உடைத்தம் வலியறியா ரூக்கத்தி னூக்கி
யிடைக்கண் முரிந்தார் பலர்."

நாம் அத்தகைய குற்றம் செய்தல் கூடாது. மேலும் நம்மிடம் அதற்கு வேண்டிய படை வலிமையில்லை. திரவியமும் இல்லை. இவ்விரண்டுசாதனங்களைத் தேடிச் சேகரித்த பிறகே போர் முயற்சி இயற்றல் தகும். அவ்வாறு செய்யச் சுமார் இரண்டுவருஷங்களேனும் ஆகும் என்பது என் எண்ணம். அதுவரையில் சும்மாவிருத்தலே நலம். படை சேர்ப்பதிலேயே நம் கவனம் முழுவதையும் செலுத்துவோம்' என்று சொல்ல, தேவராயரும் ஒப்புக் கொண்டார்.

இக்காலத்தில் ஸாம்ராஜ்ய சிற்றரசர்களில் பெரும்பாலார் தேவராயரிடம் அன்பும் விசுவாசமும் பூண்டொழுகினராயினும், அவர்களுள் பிரமுகர்கள் சிலர், எதிரி மன்னர்களுடன் உறவாடி ஸாம்ராஜ்யத்தைச் சிதறச் செய்யச் சூழ்ச்சி செய்துவந்தனர். இதற்கென்றே சிற்சில பிரயத்தனங்களும் நடந்துவந்தன. தேவராயர் இதை ஒருசமயம் கேள்வியுற்றார். அச்சமயத்தில் திம்மரசு அவருக்கு அருகில் இல்லை. ஆதலின் சிலசேவகர்களை அனுப்பி அவரை உடனே தம்மிடம்

அழைத்துவர ஏவினார். சேவகர்கள் சென்றகாலத்துத் திம்மரசு தேவபூஜையில் இருந்தனர்; அரசர் வரச் சொன்னார் என்றுகேட்டவுடன் பதில் ஒன்றும் கூறாது சரேலென்று எழுந்து கொல்லைப்பக்கம் சென்றார். சேவகர்களும் பின்தொடர்ந்தனர். அங்கே கீரைப்பாத்தி ஒன்றிருந்தது; அமைச்சர் அப்பாத்தியில் உயரமாய்ப் பருத்துக் கிளம்பியிருந்த தண்டுகளை யெல்லாம் பிடுங்கி எறிந்து விட்டு மிகுதியாயிருந்தவற்றுக்குச் செவ்வனே நீர்பாய்ச்சினார். அரசர், தமது வரவை எதிர்பார்த்துள்ளார் என்ற எண்ணம் இல்லாதது போலவே அவ்வேலையைச் செய்துவந்தனர். வெகு நேரமாயும் அவர் புறப்படுவதாகத் தோன்றவில்லை. இதைப்பார்த்த சேவகர்கள் ஒன்றும் சொல்லத் தோன்றாதவராய் இனிக்காலதாமதம் செய்யின் அரசர் கோபங்கொள்வார் என்று பயந்து அவரிடம் ஓடித் திம்மரசு கிருகத்தில் நடந்த விருத்தாந்தங்களைச் சொன்னார்கள். புத்தி நுட்பம் வாய்ந்த மன்னரும் தம் அமைச்சரின் உட்கருத்தைத் தெரிந்துகொண்டனர். பிறகு திம்மரசு குறிப்பித்தவண்ணமே தம்மிடம் விசுவாசமின்றி ஒழுகிய சிற்றரசப் பிரமுகர்களை உடனே அதிகாரத்தினின்று நீக்கி அவர்களுக்குப் பதிலாகத் தமக்கு நம்பிக்கைவாய்ந்த வேறு சிலரை நியமித்தார்.

இக்காலத்தில் ஸாம்ராஜ்ய மன்னருக்கு இருந்த படைவலி இருதன்மையது. விஜயநகரத்திலேயே அரசரது முக்கிய தளகர்த்தரது மேற்பார்வையில் உள்ளது ஒருசேனை. அஃதன்றி, அவசரம் நேர்ந்தகாலத்துச் சிற்றரசர்களால் அனுப்பப்பட்டது மற்றொருசேனை. சிற்றரசர்களுக்கு இக்காலத்தில் நாயக்கர்கள் என்று பேர்.

இவர்கள் இருவகைப்பட்டவர்கள்; தமக்குட்பட்டமாகாணத்தில்கிரமப்படி வரியைவசூல்செய்து அதில் ஒருபாகத்தைத் தமக்குச் சம்பளமாகவைத்துக்கொண்டு, பாக்கியை 'ஹொசூ' ருக்கு அனுப்பியவர் ஒருசாரார். மற்றொருசாரார், அவ்விதம் செய்யாது தம்மாகாணத்தில் தாமே எல்லா அதிகாரங்களும் செலுத்தி ஸாம்ராஜ்ய மன்னருக்கு அவசியமான காலத்துக்குவேண்டிய் சேனாபலத்தைத்தந்து அச்சேனையைப் போஷிக்க வேண்டிய திரவியத்தையும் கொடுத்துவந்தனர். பிற்கூறிய நாயக்கர்களுக்கு 'அமர நாயக்கர்கள்' என்று பெயர், இவர்கள் வம்சபரம்பரையாய்த் தம்மாகாணங்களை ஆண்டுவந்தனர். சூட்சும தரிசியான திம்மரசு, ஸாம்ராஜ்யமன்னர் தமக்கு வேண்டிய சேனாபலத்துக்கு அமரநாயக்கர்களது கைபார்த்து நிற்க வேண்டியிருக்குங் காலம் வரையில் ஸாம்ராஜ்யத்துக்கு பலக்குறைவு நிச்சயமே எனத்தெளிந்தார். இதை அரசரிடம் தெரிவித்து அம்முறையை மாற்றினர். 'இனி அமரநாயக்கர்கள் நமக்கெனச் சேனையைத் தத்தம் மாகாணங்களில் வைத்திருக்க வேண்டாம். ஸாம்ராஜ்யத்துக்கு வேண்டிய சேனையை நாமே சேகரித்துக் கொள்ளுவோம். அதிகப்படிச் சேனையைப் போஷிப்பதற்கு வேண்டிய திரவியத்தை அமரநாயக்கர்கள் தத்தம் விகிதாசாரப்படி கொடுக்கவேண்டும்' எனத் தேவராயர் அமரநாயக்கர்களுக்கு ஸ்ரீமுகம் அனுப்பினர். அவ்வாறே அமரநாயக்கர்களும் ஒப்புக்கொள்ள, அவர்களிடம் இருந்தசேனைகளை யெல்லாம் விஜயநகரத்துக்குத் தருவித்து அவைகளை ராயர் தம் மேற்பார்வையிலேயே வைத்துக் கொண்டார். பிறகு திம்மரசு வெகு விரைவில் சேனையின் பலத்தைப்பெருக்கினர். அதுகார

ணமாகப் பத்துலட்சம் காலாட்படையும், முப்பதினாயிரம் குதிரைப்படையும், எண்ணூறு யானைப்படையும் சித்தமாயின. இவைகளுக் கெல்லாம் தலைவர் கிருஷ்ணதேவராயரே. படை, வலிமை குன்று திருக்குமாறு அடிக்கடி பழக்கப்பட்டது. அதுவு மன்றிப் பிரதிவருஷமும் விஜயதசமி காலத்தில் பந்தயங்கள் பல ஏற்படுத்தி ஜயித்த போர்வீரர்களுக்கு வெகு உயர்ந்த பல பரிசுகளும் கொடுத்துவந்தார்.

XXIV கிருஷ்ணதேவராயரது வித்யாபிமானம்.

பாலபருவத்திலேயே ராயர் வெகு சிரத்தையுடன் வித்தியாப்பியாசம் செய்துவந்தார் என முன்னரே கூறியுள்ளோம். ஆனதனால் இவருக்கு ஆந்திர ஸம்ஸ்கிருத பாஷைகளில் மிகுந்த பிரியம் உண்டு. அப்பாஷைகளில் தேர்ச்சி பெற்ற கவிகளையும் மற்றுமுள்ள வித்வான்களையும் மிகவும் ஆதரித்தனர். அவ்வாறு போஷிக்கப்பட்டவர்களுள் முக்கியமானவர்கள் அல்லசானி பெத்தன்ன, நந்திதிம்மன்ன என்ற இருவர்கள். அவர்கள் கவித்திறமை வாய்ந்தவர்களா யிருந்தது மன்றி ராஜ்ய வியவகாரங்களிலும் விசேஷ ஞானம் பொருந்தியவர்கள். ஆகையால் அவர்களை ராயர் சிறு மாகாணங்களை ஆண்டுவரும்படி நியமித்து மண்டலாதிகாரிகள் எனப்பெயரும் சூட்டினர். அன்றியும், கவி பெத்தன்னவுக்கு 'ஆந்திரகவிதா பிதாமகர்' என்ற பிருதையும் அளித்தனர். தாமே கவி இயற்றும் சாமர்த்தியம் வாய்ந்தவராதலின் தம்மை நாடி ஆஸ்தானத்துக்கு வரும் வித்வான்களது கவித்திறத்தை வெகு எளிதில் ராயர் தெரிந்துகொண்டார். அவரவர்களுக்குத் தகுந்த

வாறு ஸர்வமானியங்களும் இதரபரிசுகளும் அளித்தனர். சுருங்கச்சொல்லின், இவரது ஆஸ்தான மண்டபம் பூர்வம் காளிதாஸர் முதலிய க்விசிரேஷ்டர்களால் அலங்கரிக்கப்பெற்ற போஜராஜரது சபைபோல் விளங்கிற்று. ராயர், தாமே 'ஆமுக்தமால்யதா' என்ற கிரந்தத்தை இயற்றியதுமன்றிப் பாலபாரதம் என்ற கிரந்தத்துக்கு வியாக்கியானமும் எழுதியுள்ளார்.

ராயருக்குச் சொக்கட்டான் ஆடுவதில் மிக ஆசையுண்டு. பொழுது போக்கு நேரங்களில் இவ்விளையாட்டையே அவர் கைக்கொள்வர். இதில் நிபுணரான பொட்டுச்சொலதிம்ம என்றவரைத் தம் பக்கத்தில் எப்போதும் இருக்கச்செய்தார். அந்தத் திம்மர் சொக்கட்டான் ஆடுவதில் அஸஹாயசூரர். எத்தனைபேர் தமக்கு எதிர்கட்சியில் நின்று ஆடினாலும் அவர்கள் யாவரையும் வெகு சுலபமாய்த் தோல்வியடையச் செய்வர். அவரது சாமர்த்தியத்தை மெச்சி அவருக்கு ராயர் ஓர் கிராமத்தை மானியமாக அளித்து அக்கிராமத்துக்குக் கிருஷ்ணதேவராயபுரம் எனப் பெயரும் இட்டனர்.

ஒருசமயம் ராயரது பேட்டி காண, பட்டுமூர்த்தி என்ற க்ஷத்திரியகவி வந்தனர். எக்காரணம் பற்றியோ அவருக்குச்சரியாய் அரசரது தரிசனம் கிடைக்கவில்லை. இதனால் பட்டுமூர்த்தி மிகக் கோபங்கொண்டவராகி அரண்மனை அதிகாரிகள் பலரையும், அவர்களுள் முக்கியமாய் மந்திரி திம்மரசையும் வெகுவாய் நிந்தித்தனர். மற்றோர் சமயத்தில் ராயரையே நேரில் கண்டு தம்குறைகளை அவரிடம் சொல்ல, அவர் நான்

வேண்டுமென்று உம்மை அவமதிக்கவேயில்லை, வீணே கோபம் வேண்டாம் என்று உரைத்தனர். ஆதலின் திம்மரசே தம் அவமானத்துக்குக் காரணமாயிருத்தல் வேண்டுமென்று நினைத்து அவருக்கு எதிரிலேயே,

தந்தையை யிழந்து தாயு மிழந்து
சந்திர கிரியிற் சந்தியி னின்றும்
குத்திக் கப்பா லேகியு மாங்கே
தத்தளிப் புடனே தாங்கியு மதுகரம்
பெனுகொண் டாவிற் பிச்சை யெடுத்தும்
அரசர் பலர்பல ரடிகளில் வீழ்ந்து
தாம்பூல வட்டிலுந் தாங்கி யவர்க்கே
ஏதேதோ பலதொழிலு மியற்றிய
திம்மா சும்....................

என்று பொருள்படும்படி ஆந்திரத்தில் ஒரு கவியைப் பாட, திம்மரசு அப்பாட்டு முடியுமுன்னரே தமது கழுத்திலிருந்த முத்துமாலையை யெடுத்துப் பட்டு மூர்த்திகழுத்தில்போட, அக்கவி அகமகிழ்ந்து, முக மலர்ந்து, கைகூப்பி,

...................வெகு மாண்பினிற் றேறித்
தஞ்ச மடைந்தவர் தவிப்பற வுதவிப்
பூமியை யாளும் பாக்கியம் பூண்டு
பாருக் கொருவனைப் படைத்தனன் புகழே.

என்று பாடி அச்செய்யுளை முடித்தனர்.

XXV ராயரது வெற்றிகள்.

வீரநரசிம்மன் காலத்திலேயே ராயர் ஒரு சேனையுடன் மைசூர் பிராந்தத்துக்குச் சென்று பல சிற்றரசர்களை முறியடித்து அவர்களைக் கப்பம் கட்டுமாறு செய்வித்தனர் என்று முன்னரே கூறியுள்ளோம்; தாம்

பட்டத்துக்கு வந்து சிலகாலமானதும் திம்மரசு விஜயப்பநாய்க்கர், வேங்கடப்பநாயக்கர், கிருஷ்ணப்பநாயக்கர் என்ற மூன்று தளகர்த்தர்களையும் தகுந்த சேனைபலத்துடன் தென்தேசத்துக்கு அனுப்பி, அங்குள்ள அரசர்களை ஸாம்ராஜ்யத்துக்கு உட்பட்டுக் கப்பம் கட்டுவிக்குமாறு செய்ய அனுப்பினர். ஒரு லட்சம் போர்வீரர்கொண்ட சேனையுடன் விஜயப்ப நாயக்கர்சென்று, வேலூர் பிராந்தத்திலுள்ள ஊர்களைப் பிடித்து, அவ்வாறு ஏற்பட்ட மாகாணத்துக்கு வேலூரையே பிரதான பட்டணமாகச் செய்து தாமே அங்குச் சிற்றரசராய் ஆட்சிசெய்து வந்தனர்; அவ்விதமே சிற்றூர், தொண்டைமண்டலம், தஞ்சாவூர், திரிசிராப்பள்ளி, மதுரை, திருநகரி, குடகு, மலையாளம் இவ்விடங்களிலுள்ள சிற்றரசர்கள் தாங்கள் ஸாம்ராஜ்யத்துக்கு உட்பட்டுக் கப்பம் கட்டுவதாக ஒப்புக்கொண்டனர். தென்னிந்தியா முழுதும் இவ்வாறு தம்குடையின்கீழ் வரவே, ராயர், திம்மரசு தமக்குச்சொல்லிய வண்ணம் தென்னிந்தியாவை மூன்று பாகங்களாகப் பிரித்து ஒவ்வொரு பாகத்திலும் தமது பிரதிநிதிகளை நியமித்தார். நெல்லூர்முதல் கொள்ளிடம்வரையிலுள்ள பிரதேசத்தில் செஞ்ஜியைமுக்கிய பட்டணமாகக்கொண்டு கிருஷ்ணப்பநாயக்கரும், வளம் மிகு காவிரி பாயும் நாட்டில் விஜயராகவ நாயக்கரும், குடகு மலையாளம் சேர்ந்ததேசத்தில் வேங்கடப்பநாயக்கரும் ராஜப்பிரதிநிதிகளாய் ஆண்டு வந்தனர். ஆகவே கர்நாடக திராவிடதேசங்கள் முழுதும் கிருஷ்ணதேவராயரது செங்கோல் முறைக்குட்பட்டவையாயின.

XXVI போர் முயற்சிகள்.

ஆயினும் கிருஷ்ண தேவராயரும் திம்மரசும் ஆதி முதல் கொண்டுள்ள முக்கியநோக்கம் இன்னும் நிறைவேறவில்லை. ஏனெனில் ஸாம்ராஜ்யத்து எல்லையிலுள்ள ரேய்ச்சூர், முதிகல்லு கோட்டைகள் இன்னும் பீஜப்பூர் சுல்தான் வசத்திலேயே இருந்தன. அன்றியும் கிழக்கில் உதய கிரிபிராந்தத்தில் கஜபதிராஜனுன பிரதாப்ருத்திரனும் அட்டஹாஸம் செய்து கொண்டிருந்தனன். இவர்களை முறியடித்து, கிருஷ்ணுநதிக்குத் தெற்கில் வேற்றரசர் இராதபடி செய்தநாளில் அன்றோஇவர்களது சங்கல்பம் நிறைவேறியதெனக் கூறலாம்.

அக்காலமும்விரைவில்வந்தது. முன்புதாம் கூறிய வண்ணமே ராயர் சிம்ஹாசனம் ஏறி இரண்டு வருஷங்களுக்குள் தகுந்த சேனையைத் திம்மரசு சேகரித்தனர். பத்துலட்சம் காலாட்படையும்முப்பதினுயிரம் குதிரைப்படையும் அதற்கேற்ற யானைப்படையும்சித்தமாயின. அவசியம் நேர்ந்தகாலத்து மற்றொரு பத்து லட்சம் சேனையைச் சேர்க்க இடமும் இருந்தது. இனிக் காலதாமதம் வேண்டாம் எனத்தெளிந்து, திம்மாசு, ராயரிடஞ்சென்று, 'அரச! தாங்கள் இனிப்போர் முயற்சியை மேற்கொள்ளலாம்; தேர்ந்தெடுத்தபோர்வீரரும் தளகர்த்தரும் வாய்ந்த நம்சேனை எவராலும் முறியடிக்கக் கூடியதன்று. ஆகவே தாங்கள் தலைமை பூண்டு இச்சேனையைப் போர்க்களத்தில்நிறுத்தி, மாற்றலர் மன்னரை மீளாவண்ணம் முறியடித்துத் தங்கள் தந்தையும் தமையனும்தேடியும் அடையாக் கீர்த்தியையும் பேரையும் பெறுமின்' எனமொழிந்தனர். ராயரும் அடங்கா மகிழ்வடைந்து 'அப்பாஜி! தாங்கள் செய்த இப்பேரு

தவிக்கு நான் என்ன கைம்மாறு இயற்றுவேன்! தாம் ஒருவர் இலீராயின் என்னிலை யென்னாகும்! இந்த ஸாம்ராஜ்யந்தான் சிதைவு படாது நிற்குமா! தங்களுக்கு நிகரானவர் இப்புவியிலும் உளரோ!' என்று அமைச்சரைப் புகழ்ந்து 'ஐயா! அப்படியே ஆகுக! இப்போது முதலில் யாரைவெல்வோம்? மகம்மதிய சுல்தானையா? கஜபதி மன்னனையா?' எனக்கேட்டனர். அதற்குத் திம்மரசு கூறியதாவது: 'அரச! பிரதாப ருத்திரனையே முதலில் முறியடித்தல் வேண்டும். பீஜப்பூர் சுல்தானைவிட அவன் அதிக பலம் வாய்ந்தவன். அவனது தேசமும் பெரியது. பிரஜைகளுடைய அன்பையும் மிகுதியாக அடைந்தவன்; ஆதலின் நம்சேனை வீராவேசம் குன்றாது குதூஹல மாயிருக்குஞ் சமயத்திலேயே பிரதாபருத்திரனைப் போர்முனையில் முறியடித்தல் வேண்டும். பிறகு பீஜப்பூர் சுல்தானையோ எளிதில் வெல்லலாம். அவ்வாறன்றி முதலில் சுல்தானையே எதிர்க்கப்போய் நாம் ராஜ்யத்துக்கு வெளியே யிருக்கும் சமயத்தில் பிரதாபருத்திரன் நம்தேசத்தின்மீது படையெடுத்துவரின் பிரதானநகரத்திலுள்ள சேனை அவனை எதிர்க்க முடியாது பின்வாங்கும். மேலும் பீஜப்பூர் சுல்தானுடன் நாம்ஏற்கெனவேஓர்வித உடன்படிக்கை செய்துள்ளோம். வெகுவாய் அவன் அதைமீறி நம்தேசத்தின்மீது படையெடுக்கமாட்டான். எதிர்த்து வரினும் விஜய நகரத்திலுள்ள சேனை அவனைத் தோல்வியுறச் செய்யும்; அதுவிஷயத்தில் பயமேதும் எனக்கில்லை.

ஆயினும் தற்சமயம் மனக்கவலையொன்று எனக்கு உளது. அது யாதெனில் நாம்வெளியே பிரதாபருத்திரனுடன் போர்புரியுங்கால் விஜயநகரத்தில் யார்இருந்து

ராஜ்ய முறைகளைக் கவனிப்பார் என்பதே; நம்பிக்கை வாய்ந்தவர் எனத்தகும் வீரர் அநேகர் இருப்பினும்,

“எனைவகையாற் றேறியக் கண்ணும் வினைவகையான்
வேறாகு மாந்தர் பலர்”

உளர் அன்றோ? ஆதலின் அவர்களையே முழுதும் நம்பிப்போதல் யுக்தமென எனக்குத்தோன்றவில்லை. இன்னுங் கொஞ்சம் நிதானித்து யோசிப்பேன். கடைசியில் தகுதியானவர் ஒருவரும் இலர் எனத்தோன்றின் நானே ராஜதானியில் தங்கிவிடுவேன். தாங்கள் மாத்திரம் சென்று கஜபதி மன்னனோடு போர் செய்ய வேண்டிவரும்.'

இதைக்கேட்ட ராயர் பதில்கூறியதாவது:—‘அப்பாஜி! நான்தனியேசெல்வதுநடவாதகாரியம். என்பக்கம் தாங்கள் இல்லையேல் வலக்கை யிழந்த முடவன்போல் ஆவேன். அன்றியுந் தங்களுக்கு இவ்வளவு விசாரம் உண்டாவதற்குக் காரணமில்லை. புஜபலமும், படைநடாத்தும் வன்மையும், கூரிய அறிவும், நிதானகுணமும் நிறைந்த தங்கள் தம்பி கோவிந்தராஜுலுகாரு இலரோ? கைத்தலத்தில் வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கு அழுவாரும் உளரோ. தங்கள் தம்பியாயினும் அவரது சாமர்த்தியம் தங்களுக்குத் தெரியாதிருக்குமோ! என்னையும்தாங்கள் இவ்வாறு சோதிக்கலாமா! அது நியாயமன்று. கோவிந்தராஜுலுகாருவையே விஜயநகரத்தில் நம் பிரதிநிதியாய் நியமித்து நாம் வெளிச்செல்வோம். படைக்குத் தாங்களே தலைமைவகிக்கவேண்டும். நான் தங்கள் பக்கம் நின்று தங்கள் கட்டளைகளை யெல்லாந் தவறாது நிறைவேற்றுவேன். இது என்முடிவான

தீர்மானம். தாங்கள் என்னசொல்லினும் நான் அதை மாற்றமாட்டேன்.'

திம்மரசு புன்னகைசெய்து 'ஐயா! நான் பிராமணனேயன்றோ! போர்க்குரிய குணங்கள் என்னிடத்து இலவே!' என, ராயர் 'ஆம்! ஆம்! பாரதப்போரில் பெரும்புகழ் எய்திய துரோணாசாரியர் அந்தணரன்றோ! கிருபாசாரியரும், அசுவத்தாமாவும் எவ்வர்ணத்தைச் சேர்ந்தவர்? பூர்வகாலத்தில் நியோகிப் பிராமணர் பலர் போர் முனையில் வெற்றிபொருந்தினர் என நாம் கேட்டதில்லையோ! தங்களிடத்தில் க்ஷத்திரியதருமம் குறைவாயுமுளதோ! இல்லை, இல்லை, நான் தீர்மானித்தவண்ணமே தான் தாங்கள் செய்யவேண்டும்' என மறுமொழி கூறினார். திம்மரசும் அதை அங்கீகரித்தனர்.

பிறகு ஒரு சுபதினத்தில் ராயர் திம்மரசைப் படைக்கு முக்கிய அதிகாரியாக அபிஷேகம் செய்வித்தனர். அந்நற்சமயம் திம்மரசு அங்குக்குழுமியுள்ள தளகர்த்தர்களையும் மற்றைய போர்வீரர்களையும் பார்த்துப் பின்வருமாறு பேசினார்: 'நண்பர்களே! ராஜவிசுவாசமும் போர்த்திறனும் நிறைந்த உங்களுக்குச் சிலவிஷயங்கள் சொல்ல விரும்புகிறேன். பீஜப்பூர்சுல்தானான அடில்ஷா நம் ஸாம்ராஜ்ய எல்லையிலுள்ள சிலகோட்டைகளைத்தன் கைவசம் வைத்திருக்கிறான். கோல்கொண்டா சுல்தான் குடுப்ஷா, பூர்வம் நமக்குக் கீழ்ப்பட்டு நம்மரசர் நியமித்த பத்மநாயக்கர்களால் ஆளப்பட்டு வந்த தேவரகொண்டா, பானகல்லு முதலிய கோட்டைகளைப் பிடித்துக்கொண்டு மேற்சொன்ன பத்மநாயக்கர்களைத் துரத்திவிட்டான். பிரதாபருத்திரனே கிழக்கில் உதயகிரி வரையில் தன் ராஜ்யத்தை விஸ்தரித்துக்கொண்டு

நம் நாட்டுக்கு இடையூறு செய்துகொண்டு வருகிறான். இவர்கள் யாவரையும் போரில் முறியடித்துக் கிருஷ்ணாவுக்கு வடக்கே அவர்களை ஓட்டி, அந்நதிக்குத் தக்ஷிண பாகத்தில் இதர மன்னர்களுக்கு ஒரு அடி நிலங்கூட இல்லாமற் செய்து, ஹிந்து ஸாம்ராஜ்யத்தை நிலை நிறுத்த வேண்டுமென்றே நம் அரசர் கங்கணம் கட்டிக் கொண்டுள்ளார். நானும் அதற்கு இணங்கித் தகுந்த பிரயத்தனங்களைச் செய்வதாக வாக்களித்து விட்டேன். ஆயினும் சிங்கத்தை யொத்த பராக்கிரமம் பொருந்திய போர்வீரர்களான உங்களுடைய உதவி யின்றி எதுதான் முடியும்? ஆதலின் நீங்கள் எல்லீரும் ஒருமனப்பட்டு ஸாம்ராஜ்ய செழிப்புக்காகவும், நம் ஹிந்துமத அபிவிருத்திக்காகவும் பாடுபட வேண்டுமென்பது எனது கோரிக்கை. அதற்கு அனுகூலமான உற்சாகத்தையும் பலத்தையும் வெற்றியையும் நமக்கு ஜகதீசன் அருள்புரிவாராக'! இதைக்கேட்ட போர்வீரர்களெல்லாம் சந்தோஷித்துக் கடல்போல் ஆரவாரஞ்செய்து திம்மரசு சொல்லிய வண்ணம் செய்யச் சித்தமாயிருப்பதற்கு அறிகுறியாக உரத்துக் கரகோஷம் செய்தனர்.

பிறகு திம்மரசு, சேனையை ஏழு பாகங்களாகப் பிரித்து, ஒவ்வொருபாகத்திலும் முப்பதினாயிரம் காலாட்படை, நாலாயிரம் குதிரைப்படை, முந்நூறு கஜப் படையையுஞ் சேர்த்து, ஒவ்வொரு பாகத்துக்கும் தனித்தனியேஒவ்வொரு தளகர்த்தனையும் நியமித்தார்.

ஒருலட்சம் போர்வீரர்சேர்ந்த படையை விஜய நகரத்தில்வைத்து, கோவிந்தராஜுலுவை அதற்குத் தலை

வாரகச்செய்து, தாமும் அரசரும் வெளியில் இருக்குங் காலத்தில் வெகு ஜாக்கிரதையா யிருந்து ராஜ்யத்தில் கலகங்கள் நேரிடாமலும், எதிரிகள் படையெடுத்து வாராமலு மிருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டுமெனத் திம்மரசு தம் தம்பியைப் பலவாறு வேண்டிக்கொண்டனர். கோவிந்தராஜுவும் அவ்வாறே செய்வதாக வாக்களித்தனர்.

XXVII தண்ட யாத்திரை.

மறுநாள் சூரியோதயம் ஆகுமுன்னரே திம்மரசு பறை அறைவித்தனர். போருக்கு எழ விருந்த வீரர்கள் யாவரும் தத்தம் சாமான்களுடன் சடிதியில் குறித்த இடத்தில் வந்து சேர்ந்தனர். அவர்களின் தொகை மூன்று லட்சம். அவர்களன்றி அரசரது புடைக்குழாத்தவரும் திம்மரசின் பரிவாரமும் அனேகம் ஆயிரவர். யுத்த தளவாடங்களையும் உணவுப் பொருள்களையும் மற்றும் தட்டுமுட்டுச் சாமான்களையும் ஒட்டகங்களின்மீதும் வண்டிகளின்மேலும்ஏற்றிச்செல்ல விருந்தவர் வெகுபலர். ஆயிரக்கணக்கான துரகங்களும், நூற்றுக் கணக்கான கஜங்களும் யாத்திரைக்கு ஆயத்தமாயின.

குறித்த சமயத்தில் கிருஷ்ணதேவராயர், போர் ஆடையுடுத்துத் தம் மனைவியர்களிடம் விடைபெற்று வெகு உற்சாகத்துடன் அரண்மனைக்கு வெளியே வந்தனர். திம்மரசும் கவிசிரேட்டரான அல்லசானி பெத்தன்னாவும், நந்தி திம்மன்னாவும், ரங்கநாத தீக்ஷிதர்

குலகுருவாகிய ரங்கநாத தீக்ஷிதரும். மற்றுமுள்ள பிராமணர்களும் அவருடன் கூடப் புறப்பட்டனர். பேரிகை, சங்கம், கொம்பு, முதலிய போர்வாத்தியங்கள் முழங்கிக் கடல்போல் ஒலிசெய்ய, வந்தியர்கள் 'ஜயவிஜயீபவ, ஜயவிஜயீபவ' என்று அறைய, வீதிகளில் ஆயிரக்கணக்காய் குழுமிய நகரத்தவர்கள் 'ஜேய், ஜேய்' என்றுகூவிக் கரகோஷம் செய்யப் பலர் பூமாரி பொழிய, வேறுபலர் சோபனாக்ஷதைகளை யிறைத்துத் திருஷ்டிதோஷ பரிகாரஞ் செய்ய,கிருஷ்ணதேவராயர், இனிதே பவனிவந்து படைநின்றவிடம் சேர்ந்தனர். உடனே ஆகாயத்தையு மூடுருவுமாறு 'ஜேய், ஜேய்' என்ற பேரொலி எழும்ப, அக்குழாத்தவர் யாவரும் தத்தம் சாமான்களைத் தூக்கிக்கொண்டு புறப்பட்டனர். நெடிது தூரம் ஒரே வரிசையாய் நின்ற அச்சேனை நடந்து செல்வதைப் பார்த்தால் ஒருபெரு நகரமே இடம் பெயர்ந்து சென்றது எனுமாறு தோன்றியது.

அச்சேனை வெகுவிரைவில் உதயகிரிநகரை நெருங்கியது. அக்காலத்தில் அந்நகரில் கஜபதி ராஜனுக்குப் பிரதிநிதியாயிருந்தவன் அவ்வரசனுக்குச் சிற்றப்பனான திருமலை காந்தராயன் என்போன். அவன் கிருஷ்ணதேவராயர் படையெழுச்சிக் கோலத்தில் வருவதைத் தன் வேவுகாரர்களிடமிருந்து தெரிந்து கொண்டு களிங்கதேசத்திலிருந்த பிரதாபருத்திர மன்னனுக்குச் செய்தி அனுப்பிப் பிறகு கோட்டையைப் பாதுகாப்பதற்குரிய முயற்சிகளைச் செய்தனன். கோட்டைச் சுவர்களைச் செவ்வனே பழுது பார்ப்பித்தனன். பதினாயிரம் காலாட்களும், நானூறு குதிரை வீரர்களும் கொண்ட ஓர் சேனையைத் திரட்டினன். கோட்டையி

னுள்ளவர்களுக்கு ஆகாரநிமித்தம் எவ்வளவு உணவுப் பொருள்களைச் சேகரிக்க முடியுமோ அவ்வளவையும் விரைவில் சேர்த்தனன். கோட்டையைச் சுற்றி உட்பக்கத்தில் போர்வீரர்கள் யுத்தசன்னத்தராய் எதிரியின்வரவை எதிர்பார்த்து நின்றனர். உள்ளே செல்லுவதற்கு ஒரு குறுகிய பாதையே இருந்தது. வேறெங்கும் இடைவெளி என்பதேயில்லை. கிருஷ்ணதேவரது சேனையும் சீக்கிரத்தில் வந்து கோட்டையை முற்றுகை போட்டது. உள்ளிருந்த படை, அளவில் குறைந்ததெனினும் வீரத்திலாவது பலத்திலாவது குன்றியதன்று. ஆகவே கிருஷ்ணதேவர் அக்கோட்டையை எளிதிற் கைக்கொள்ள முடியவில்லை.

இந்தச் சந்தர்ப்பத்தில் பிரதாபருத்திரனால் அனுப்பப்பட்ட லட்சம்போர்வீரர் அடங்கிய சேனை உதயகிரியை நோக்கி வருவதாகத் திம்மரசுக்குச் சமாசாரம் கிடைத்தது. உடனே அவர் ராயரிடம் சென்று விஷயத்தைத் தெரிவித்துத் தம் சேனையை இருபாகமாகப் பிரித்து ஒரு பாகத்தைக்கொண்டு ராயர் முற்றுகையை நடத்தவேண்டுமென்றும் தாம் மற்றொரு பாகத்துடன் வடக்கேசென்று எதிரிசேனையுடன் போர் புரியவேண்டுமெனவும் சொன்னார். ராயரும் அதை அங்கீகரிக்க, திம்மரசு பிரதாபருத்திரனது படையை நோக்கி வடக்குத்திக்கில் பிரயாணமானார்.

உதயகிரியை முற்றுகைசெய்து பதினெட்டு மாதங்கள் ஆகியும் அது ராயரது கைவசமாகவில்லை. உள்ளிருந்த போர்வீரர்கள் வெகு சாமார்த்தியமாகவும் தைரியமாகவும் போர்புரிந்து வந்தனர். ஆயினும் சேகரித்து வைத்த உணவுப் பொருள்கள் குறையவே

வேண்டிய ஆகாரமின்மையால் அவர்களது பலம் வர வரக் குன்றியது. கடைசியாய் ராயர் வெகு பாடுபட்டுக் கோட்டைச்சுவரின் ஒருபாகத்தை உடைத்தெறிந்தனர்; உள்ளிருந்த திருமலை காந்தராயனும் கைசலித்து நின்றனன். ராயர் கோட்டையைப் பிடித்துத் தம் வசமாக்கிக்கொண்டு திருமலைநாயக்கனையும் இதர தளகர்த்தர்களையும் கைதிசெய்தனர். பிறகு விஜயநகரத்தி லிருந்து ஒரு காப்புச்சேனையைத்தருவித்து அதை உதயகிரியில் இருத்தித் தமது முக்கிய தளகர்த்தனை அங்கே தம் பிரதிநிதியாக நியமித்தனர். பிறகு சேனையுடன் திம்மரசு இருக்குமிடத்தை நோக்கிப் புறப்பட்டனர். திம்மரசு பிரதாப ருத்திரனது படையை எதிர்த்து இரண்டு வருஷகாலம் போர்புரிய நேர்ந்தது. தேகபலம், ஆண்மை, ஆத்மகௌரவம் இவைகள் நிரம்பிய வீரர்களும் காரிய நிபுணத்வம், தைரியம், சமயத்திற்கேற்ப நடந்துகொள்ளும் நுட்பபுத்தி இவைவாய்ந்த தளகர்த்தர்களும் அடங்கிய அச்சேனை எளிதில் எதிரி வசப்படுமோ! ஆயினும் திம்மரசு கொஞ்சங் கொஞ்சமாய் அப்படையைப் பின்னோக்கிச் செல்லுமாறு துரத்திக் கொண்டே வந்து அத்தங்கி, வினுகொண்டா, பெல்லம் கொண்டா, தங்கேடு, கேதவரம் முதலிய கோட்டைகளைக் கைப்பற்றினர். பிறகு கொண்டவீடு கோட்டையையும் முற்றுகை செய்தனர். கிருஷ்ணாநதிக்குத் தென்பாகத்தில் கஜபதி ராஜனுக்குள்ள கோட்டைகளுள் முக்கியமானது அக்கொண்டவீடு கோட்டையே; ஆதலின் அது திம்மரசின் வசம் விழாவண்ணம் எதிரிகள் பெருமுயற்சிகள் செய்தனர். பிரதாப ருத்திரனது குமாரனை வீரபத்திர கஜபதியே போர்முனையில் நின்று

படையை நடத்தினன். ஆயினும்என்ன? வீரலட்சுமியின்பலம் முழுதும் ராயரிட மன்றோ நின்றது. கோட்டைக்குவெளிநின்றுபோர்செய்த வீரபத்திரன் தளர்ந்து போய்த் தன் சைன்யத்துடன் கோட்டைக்குள் புகுந்துகொண்டான். பிறகு அங்கிருந்தபடியே திம்மரசை எதிர்த்தனன் என்றாலும் வெகுகாலம் கோட்டையைக் காத்துநிற்கச் சாத்தியப்படவில்லை; திம்மரசு,கோட்டையைப்பிடித்துக் கொண்டனர். வீரபத்திரன் முதலிய பிரதான மானவர்களைக் கைதிசெய்தனர். பிரதாபருத்திரனது மருமகன் ஒருவனே கிருஷ்ணாநதியைத் தாண்டித் தப்பியோடியவன்.

1515 ஆம் வருஷம் மார்ச்சுமாதத்தில் திம்மரசு, கொண்டவீடு கோட்டையை முற்றுகைபோட ஆரம்பித்தனர். உதயகிரி பிராந்தத்துள்ள கோட்டைகள் யாவும் போயினவென்றும், கொண்டவீடே எதிரிவசம் விழுமாறு ஆபத்து நேரிட்டுளதென்றும் கேட்டபிரதாபருத்திரன் வெகுகோபங்கொண்டு, இனிச் சேனையை அனுப்புவது மாத்திரம் போதாதென்று நினைந்து, தானே ஒரு பெருஞ்சேனையைச் சேகரித்துக்கொண்டு, தக்ஷிணதிக்கை நோக்கிப் புறப்பட்டனன். அவனது சேனை ஐந்துலட்சம் காலாட்களும், இருபதினாயிரம் குதிரைகளும் ஆயிரத்து முந்நூறு யானைகளுங் கொண்டது. பார்ப்போர் மனம் திகைத்து 'அம்மம்ம! இதையும் எதிர்த்து ஜயிக்கவும் முடியுமோ! என ஆச்சரியமுறுந் தன்மையது. அத்தகைய படை எதிர்நோக்கிவருவதெனக் கேட்ட திம்மரசு தஞ்சேனையை இருபங்காய்ப் பிரித்து ஒரு பங்குடன் தாம் கொண்டவீட்டிலிருந்துகொண்டு மற்றொரு பங்குடன் கிருஷ்ணதேவர்

வடக்குத்திசை நோக்கிச் சென்று பிரதாபருத்திரனுடன் போர்புரியுமாறு ஏற்பாடு செய்தனர். ராயரும் சடிதியில் கிருஷ்ணாநதியைத் தாண்டிச்செல்ல மேடேருக்கருகில் ஓர் மிகக்கோரமான யுத்தம் நடந்தது. ஆயிரக்கணக்கான வீரர்களும் நூற்றுக்கணக்கான அசுவங்களும் கஜங்களும் காலனுக்கிரையாயின. கடைசியில் ராயர் பிரதாபனை அடியோடுமுறியடித்துப் புறங்காட்டியோடும்படி செய்தனர். அவனது படையும் சின்னபின்னமாய்ச் சிதறுண்டது. ஜூன்மாதம் 23-ஆம் தேதியில் கொண்டவீடு கோட்டையும் திம்மரசின் வசமானது. பிறகு ராயர் கொண்டபல்லிக் கோட்டையையும் பிடித்து அதிலிருந்த பிரதாபனது மனைவி ஒருத்தியையும் கைதியாக்கினர்.

ஆகவே, பாலிய பருவமுதல் இடைவிடாது தம் மனத்திலிருந்து தூண்டிவந்த பேரவா பூர்த்தியானதால் திம்மரசும், ராயரும் பேரானந்தம் எய்தினர்;

முயற்சி திருவினை யாக்கு முயற்றின்மை
யின்மை புகுத்தி விடும்.
வாளாடு கூத்தியர் கண்போற் றடுமாறுந்
தாளாளர்க் குண்டோ தவறு.

ராயர், திம்மரசு தாம் பிறந்த விடமான கொண்டவீட்டிலேயே கொஞ்சநாள் அரசகௌரவம் பெற்று விளங்கவேண்டுமென அவாக்கொண்டவராய் அவ்வூரிலே தம் பிரதிநிதியாய் இருக்கவேண்டுமெனத் திம்மரசைக் கேட்டுக்கொள்ள அவரும் ஏற்றுக்கொண்டார்.

XXVIII

கஜபதியினது பிரதான நகரை எதிர்த்துச்செல்லல்

வெற்றியெனும் மதுவை உட்கொண்ட தேவராயருக்கு வீராவேசம் மிகுந்தது. பிரதாபருத்திரனது தலைநகராம் கட்டக்குக்குச்சென்று அதைக்கைப்பற்றிக் கஜபதிமன்னனைச் சிறைசெய்ய வேண்டுமென விருப்பங் கொண்டார். திம்மரசிடம் அதைத் தெரிவிக்க அவர் அவ்வாலோசனையைமுதலில் அங்கீகரிக்கவில்லை. 'ஐயா! நாம் நம் ராஜதானியினின்றும் வெகுதூரம் வந்துள்ளோம் என்றதைத் தாங்கள் மறக்கக்கூடாது. வடக்கே செல்லச்செல்ல எதிரியின் தேசமத்தியில் அன்றோ நாம் புகவேண்டிவரும். அங்கே அவனுக்குச் செல்வாக்கு மிகுதியும் உண்டு. ஜனங்களது பிரீதியை அடைந்தவனாதலின் வெகுபேர்கள் அவனுக்கு உதவியாகநின்று நம்மை எதிர்ப்பார்கள். நமக்கோ அவ்விடத்தில் பரிசிதர் ஒருவருமிலர். ஆதலின் தனியேயிருந்து போர் செய்ய நேரிடும். அப்போதைக் கப்போது வேண்டிய போர்வீரர்களையோ அல்லது உணவுப் பொருள்களையோ தருவித்துக் கொள்ளலும் அசாத்தியமாகிவிடும்; 'உள்ளூர்ப்புலியும் வெளியூரில்பூனையாகிவிடும்' அன்றோ!

காலாழ் களரி னரியடுங் கண்ணஞ்சா
வேலாண் முகத்த களிறு.

இனிநாம் வடக்கே செல்வோமாயின் நம்பலங் குறைவு படுதலன்றி எதிரியின் வலியு மிகும்; ஆதலின் இதுகாறும் நாம் அடைந்துள்ள வெற்றியோடு திருப்தியடைந்து திரும்பிச்செல்வதே நலம்.

ஆக்கங் கருதி முதலிழக்குஞ் செய்வினை
யூக்கா ரறிவுடை யார்,

எனத் திம்மரசு சொல்லியும் ராயர் இணங்கவில்லை. 'எவ்வாறாயினும் ஆகுக. நான் படையெழுச்சி செய்தே தீருவேன். வெற்றிக்குரிய முயற்சிகளைத் தாங்கள் செய்தே தீரவேண்டும்,' என்று அவர் பிடிவாதம் செய்தார். திம்மரசும் பதில் சொல்ல முடியாதவராய்ச் சேனையை வடக்கே நடத்திச் சென்றனர்.

'வெற்றியைப்போல் வெற்றிதருவது வெறொன்றிலது' எனப் பொருள்படும் ஆங்கிலப்பழமொழி உண்மையேயன்றோ? விஜயநகரப் போர்வீரர்கள் உற்சாகமிகுந்து, எதிரி பின்னோக்கி ஓடுமாறு செய்துகொண்டே போய், ராஜமகேந்திரபுரம் சென்று அதைக் கைப்பற்றினர். புதிதாய் ஒரு சேனையும் விஜயநகரினின்றும் வந்து இவ்விடத்தில் சேர்ந்துகொண்டது. பிறகு கோதாவரியைத் தாண்டி விசாகபட்டணக் காட்டுப்பிராந்தத்துள்ள போட்னூர் என்ற ஊரையும் பிடித்தனர். தங்களது வெற்றிக்கு அறிகுறியாய் அவ்வூரில் ஓர் உயர்ந்த ஸ்தம்பத்தைத் தேவராயர்நாட்டினர். அப்பால் சிம்மாசலம் சென்று அம்மலைமீது எழுந்தருளியிருக்கும் பெருமானைத் தரிசித்தார். இதுகாறும் ஏதோ ஒருவிதமாய்ப் போர்செய்துவந்த பிரதாபனது சேனை இவ்வூர் சேர்ந்ததும் சிதறுண்டு கண்ணுக்குத் தெரியாது மறைந்தது.

'இப்பொழுதேனும் ஊருக்குத் திரும்புவோம். இனி நாம் செல்லும்மார்க்கம் அடர்ந்தகாட்டுப் பிரதேசம்; துஷ்டமிருகங்களாலும் உணவுப்பொருளின் குறைவாலும் நமக்கு உபத்திரவம் நேரிடலாம்' என்று திம்மரசு சொல்லியும் ராயர் உடன்படவில்லை. மேன்மேலும் சேனையை நடத்திக்கொண்டே சென்றார்.

பிரதாபருத்திரனது சிற்றரசர்கள் இதைக் கேள்வியுற்று ஆருக்கோபம்கொண்டு எவ்விதமேனும் தேவராயரை முறியடித்து, பிரதாபனது கௌரவத்தைக் காப்பாற்றவேண்டுமென மனவுறுதி கொண்டனர். உடனே லட்சக்கணக்கான போர்வீரர்களைச் சேகரித்துக் கொண்டு தேவராயரை எதிர்த்து வந்தனர். பிரதாபருத்திரனும் தன் ராஜதானியிலுள்ள சேனையுடன் வந்து தன் சிற்றரசர்களுடன் சேர்ந்துகொண்டான்.

இச்சமயத்தில் தான் தேவராயருக்குத் தமது மதியீனம் விளங்கியது. வெகுமாதங்களாய் இடைவிடாது போர்புரிந்த காரணம்பற்றித் தம்போர்வீரர்கள் தளர்ச்சியடைந்து நின்றனர். தளகர்த்தர்களுள் சிலர் வியாதியால் வருந்தினர். 'எப்போது ஊருக்குச்செல்வோம், பெண்டுபிள்ளைகளைப் பார்ப்போம்' என நினைந்து ஏங்கினர் வேறு சிலர். சுற்றி எங்குப்பார்த்தாலும் திக்குத்திசை அறியவொண்ணா அடவியே. எதிரிகளோ வென்றால் வெகு வலிமைவாய்ந்து நின்றனர். சேனை புதிதாய்த்திரட்டப்பட்டு வெகு உற்சாகமும் மனவுறுதியும் நிரம்பப் பெற்றிருந்தது. போர்செய்யும் பிரதேசம் காடாயிருப்பினும் தம்தேசமாதலின் நகரம்போலேயே அவர்களுக்கு அனுகூலமாகவிருந்தது. இதையெல்லாம் பார்த்த தேவராயர் மனம் கலங்கினார். 'என் அப்பாஜி உரைத்த யோசனையைக் கேட்காமற்போனேனே' என்று மனம் நொந்தார்.

'உடைத்தம் வலியறியா ரூக்கத்தி னூக்கி
யிடைக்கண் முறிந்தார் பலர்.'

எனப் பொருள்படும் ஸூக்தியை அவமதித்தேனே! ஆதலின்,

அமைந்தாங் கொழுகா னளவறியான் றன்னை
வியந்தான் விரைந்து கெடும்

எனும் முதுரைக்கு நானே சாட்சியாம் நிலையிலன்றோ இப்பொழுதுள்ளேன்! எனச் சிந்தனை தடுமாறித் திம்மரசைத் தம்மிடம் வருவித்தனர்.

திம்மரசு வந்ததும், ராயர் அவரைவணங்கி, 'அப்பாஜி! தாங்கள் சொன்ன புத்தியைக் கேட்காது பிடிவாதம் செய்தேனே! ஆ! அது எவ்வளவு மதியீனம்! இப்பொழுதன்றோ என்மடத்தனம் எனக்குப் புலப்படுகின்றது ! தங்களது எண்ணத்துக்கு மீறி நடந்தமையைப் பொறுத்தருள வேண்டும். இந்த இக்கட்டினின்றும் என்னை விடுவித்தருள வேண்டும்;' எனப் பணிவுடன் வேண்டினர். 'பொல்லாத சேயெனினும் தாய்தள்ளல் நீதமோ' மன்னன் முனிந்தனன் எனினும் மந்திரி முறை வழுவலாமோ! 'ஆற்றமறைக்கும் பெருமை' அன்றோ! 'இடுக்கண் களைவதா நட்பு' அன்றோ! இவ்வுண்மைகளுக்கு உறைவிடமாகிய திம்மரசும் அச்சமயத்தில் அரசரிடம் கடுமொழிகள் செப்புவரோ! தம் பிரதாபத்தைப் பற்றிப் பிதற்றுவரோ! அன்று அன்று. 'அழிவினவை நீக்கும்' யுக்திகளை ஆராய்ந்து மனந்தேர்ந்து ராயரைநோக்கி, 'அரசே! அஞ்சற்க அஞ்சற்க; எளிதில் இவ்வபாயத்தை நீக்குவேன். எதிரி, தங்களிடம்வந்து தன் புத்திரியைத் தங்களுக்கு மணப்பெண்ணாய் அளிப்பதுமன்றித் தாங்கள் போரை நிறுத்த வேண்டுமெனவும் பணிவுடன் கேட்குமாறு உபாயம் செய்வேன்' என மொழிந்தார். ராயரும் விசாரம் நீங்கினர்.

பிறகு, தமது காரியாலயத்துக்குச்சென்று கஜானுவுக்குச் சேவகனை அனுப்பிப் பதினாறு பெரிய பெட்டிகளும் அவை நிரம்பிய வெள்ளிநாணயங்களும் தங்கநாணயங்களும் தம்மிடம் வரவேண்டுமெனக் கட்டளையிட்டார். சீக்கிரத்தில் அவைகள் கொணரப்பட்டன. உடனே அப்பெட்டிகள் ஒவ்வொன்றினுள்ளும் ஒவ்வோர் கடிதத்தை வைத்தனர். பின்பு நம்பிக்கை வாய்ந்த பதினாறு சேவகர்களைக் கூப்பிட்டு அவர்கள் தலைமீது பெட்டிகளை வைத்து, அவர்கள் அவற்றைத் தூக்கிக்கொண்டு, எதிரிசேனைகளும் தளகர்த்தர்களும் குழுமியுள்ள இடம் சென்று, அங்கே பிரதாபருத்திரன் அமர்ந்திருக்கும் ஸ்தானத்தை நோக்கி ஓடவேண்டு மென உத்தரவிட்டார். அவர்களும் அவ்வண்ணமே செய்யப் பிரதாபமன்னனது ஊழியர்கள் அவர்களைப் பிடித்துக்கொண்டு போய்த் தம் அரசன் முன்னிலையில் நிறுத்தினர்கள். பிரதாபன் அப்பெட்டிகளைக்கீழ் இறக்கி அவைகளைத் திறந்து பார்க்கவே அவைகள் ஒவ்வொன்றினுள்ளும் ஒவ்வோர் கடிதம் இருக்கக் கண்டான். அவைகளெல்லாம் தற்காலத்தில் தன்னுடன் கூடநின்று போர் நடத்திய தனது பதினாறு சிற்றரசர்களது விலாசத்துக்கு எழுதப்பட்டிருந்தன. அதைப்பார்த்து ஒருவாறு ஆச்சரிய முற்றான். லிகிதமொன்றைப் பிரித்து அதில் வரையப்பட்டிருந்ததைப் படித்தான். அதில் பின்கண்ட விஷயம் எழுதப்பட்டிருந்தது. 'தேவராயர் தாங்கள் செய்த உதவிக்கு மிகவந்தனம் அளிக்கிறார். அதற்குக் கைம்மாறாகக் கொஞ்சம் திரவியம் அனுப்பப்பட்டுள்ளது. அதைத் தயவுடன் அங்கீகரிக்க வேண்டும். தாங்கள் ஒப்புக் கொண்டுள்ளபடியே எல்லாவிஷ

யங்களும் நடந்தேறினால் தங்களுக்கு வெகு கிராமங்களையும் ஆடையாபரணங்களையும் வெகுமதியாய் அளிக்கச் சித்தமா யிருக்கிறார்; தாங்கள் சீக்கிரத்தில் தகுந்த பிரயத்தனங்களைச் செய்யவேண்டும்' இதைப் படித்த பிரதாபன் மதிமயங்கினான். என் சிற்றரசர்களும் இத்தகைய வஞ்சகர்களோ எனப்பயமுற்றான். அமர்க்களத்தில் என்னைநிறுத்தி வீரத்துடன் போர்புரிவது போல் நடித்து, பிறகு நட்டாற்றில்என்னைவிட்டு ஓடவோபார்த்தீர்கள் மன்னர்காள்! என எண்ணினன். நான் போர் முயற்சி ஆரம்பிச்சுமுன் என்னிடம் ஓடிவந்து 'ஐய!தேவராயனை அடியோடு முறியடிக்கவேண்டும்; காலதாமதம் வேண்டாம் உடனே புறப்படுங்கள்' என்று வேண்டினகாலத்தும் இத்தீய எண்ணம் உங்கள் மனத்தில் உள்ளதோ! எனச் சந்தேகித்தனன். ஒருசமயம் தான் படித்ததுதான் தவறோ எனநினைந்து மற்றும்மாருதராம் கடிதத்தை வாசித்தான். அதில் ஒன்றும் வித்தியாசமில்லை. அர்த்தத்திலும் சந்தேகமில்லை, ஆ! என்ன செய்வான்!

எங்கினா னிளைத்தான் திகைத்தான் மனம்
வீங்கினான் விம்மினான் விழுந்தானரோ
"வீழ்ந்தான் வீழாவெந்துய ரத்தின் கடல் வெள்ளத்
தாழ்ந்தா னுழா வக்கட லுக்கோர் கரைகாணான்.

எவருடனாயினும் கலந்து யோசிப்போம் என்றாலோ ஒருவரையும் நம்பலாம் என்ற நம்பிக்கை எழவில்லை. எவரும் வினைவேறு சொல்வேறு பட்டார் போன்றே தோன்றினர். கடைசியில் கள்ளுண்டவன் போலும் வெறிபிடித்தவன்போலும்முழுதும் மதிகலங்கினவனாய்ப் போர்க்களத்தினின்றும் ஓடிப்போய் யாருமறியாத ஓர் இடத்தில் ஒளிந்து கொண்டனன்.

வேவுகாரர் மூலமாய் இதுவிஷயத்தைத் தெரிந்துகொண்ட திம்மரசும் தாம்முதலில் ஊகித்த வண்ணமே காரியங்கள் நடைபெற்று வருவதைக்கண்டு மகிழ்ந்து தாமே நேரில் பிரதாபனைப் பார்ப்பதற்குச் சென்றனர். அவன் மனம்இன்னும் நிதானப்படாமல்பயத்தின்வசப்பட்டுக் கலங்கிநின்றது. வெகு சாதுர்யமாய், திம்மரசு அவனிடம் சம்பாஷித்து எவ்விதத்திலாயினும் கிருஷ்ணதேவருடன் சமாதானம் பண்ணிக்கொண்டாலல்லது தனக்கு உய்வில்லை என்று அவன்மனத்தில் படியுமாறு செய்தனர். பிறகு ஜாடையாகவும் சங்கேதமாகவும், 'குறித்தது கூறாமை கொள்ளு' மாறும் ஒரு சமயம் தேவராயரிடம் சென்று தான் தோல்வியுற்றதாய்க் கூறி, உடன்படிக்கை செய்துகொள்வதில் சிரத்தை காட்டி, அதற்கு அறிகுறியாய்த் தன் குமாரத்தியை அவருக்கு மணம் செய்விப்பதாக வாக்களித்தால் அவர் அவ்வெண்ணத்தைப் பூர்த்திசெய்து போர்த்தொழிலை நிறுத்துவார் எனத் திம்மரசு தோற்றுவித்தனர். மூழ்கும் தறுவாயிலுள்ளவன் த்ரணத்தையும் கைப்பற்றுவானன்றோ!' பிரதாபன் உடனே தேவராயரிடம் ஓடி, தன் மகளை அவருக்கு மனைவியாக்குவதாய் ஒப்புக்கொண்டு சமாதானஞ் செய்துகொண்டனன். அவ்வாறே விவாகமும் நடைபெற்றது. பிறகு தேவராயர் கோதாவரிநதி வரையிலுள்ள தேசத்தைப் பிரதாபனுக்கு அளித்து 1516-ஆம்வருஷத்தில் விஜயநகரத்துக்குத் திரும்பிவந்தார்.

இச்சமயத்தில் கிருஷ்ணதேவர் தம் அப்பாஜியிடத்தில் தாம் கொண்டபக்தியை, இவ்வாறென விவரித்தல் முடியுமோ?

XXIX. மகம்மதியரை ஜயித்தல்.

ராயர் விஜயநகரஞ்சேர்ந்து கொஞ்சகாலமானதும், கோல்கொண்டா சுல்தானன குடுப்ஷா ஒருலட்சம் போர் வீரர்களுடன் கொண்டவீடு ஸமஸ்தானத்தை நோக்கி வருவதாகத் திம்மரசு கேள்வியுற்றார். உடனே அவர் இரண்டுலட்சம் ஆட்கள் அடங்கிய ஓர் படையுடன் அவனை எதிர்க்கச்சென்றார். அவர் கொண்டவீடு போய்ச் சேருமுன்னரே, குடுப்ஷா கிருஷ்ணாநதியைத் தாண்டி, பெல்லங் கொண்டா கோட்டையைக் கைப்பற்றிப் பிறகு கொண்டவீடை நோக்கிவந்து கொண்டிருந்தான். இருசேனைகளும் அக்கோட்டைக்கு அருகில் சந்திக்கவே ஒரு பெரும் போர் விளைந்தது. இருதிறத்தாரும் வெகுவீராவேசத்துடனுங் கைகலந்து போர் செய்ய, அநேகமாயிரம்பேர்கள் உயிரிழந்தனர். கடைசியில் சுல்தானுடைய சேனை சிதறுண்டது. அவனும் புறங்காட்டி ஓடநேர்ந்தது. சுல்தானதுபடைத்தலைவனையும் அவனது மனைவியையும் திம்மரசு கைதிசெய்து அவர்களை விஜய நகரத்துக்கு அனுப்பினர். பிறகு தாம் கொண்டவீட்டிலேயே சிறிதுகாலம் வசித்திருந்து ஸமஸ்தானத்தில் குடிகள், விசாரமும் பயமு மின்றித் தங்கள் தங்கள் தொழில்களை நடாத்திச் செவ்வனே தம் வாழ்நாளைச் சுகமாகக் கழிக்குமாறு தகுந்த சீர்திருத்தங்களை யியற்றினர்.

பிறகு தம் மருமகனான அப்பன்னாவை அங்கே ராஜப்பிரதிநிதியாய் இருத்தித் திம்மரசு விஜயநகரத்துக்குத் திரும்பினர். இவரது வேறொரு மருமகனான கோபன்னா, குத்தி ஸமஸ்தானத்தில் ராஜ்யாதிகாரம்

செலுத்தி வந்தனன். இருசகோதரர்களும் வெகு யோக்கியதை வாய்ந்தவர்கள்; தெய்வபக்தி மிகுந்தவர்கள். ஆதலின் வித்வான்களுக்கு மானியங்கள் விட்டும் கோவில்களைப் பழுதுபார்ப்பித்தும், தேவஸ்தானங்களைச் சீர்ப்படுத்தியும் வந்தனர். புதிதாய்க் குளங்களையும் கிணறுகளையும் வெட்டுவித்தனர். இதுபோன்ற சற்காரியங்களை யியற்றியதால் பிரஜைகள் யாவராலும் மிக நன்கு மதிக்கப்பட்டனர் என்று வினுகொண்டாவிலும் கொண்டவீட்டிலும் உள்ள சிலாசாஸனங்களினின்றும் தெரியவருகிறது.

XXX ரேய்ச்சூர்க் கோட்டை முற்றுகை.

கொஞ்சகாலம் திம்மரசு ஸாம்ராஜ்யத்தின் க்ஷேமத்துக்கு அவசியமான சீர்திருத்தங்களைச் செய்துகொண்டு வந்தனர். ஆயினும் போர்முயற்சிக்குக் காரணம் மாத்திரம் இல்லாமற் போகவில்லை. ஸாம்ராஜ்யத்தின் எல்லைக்கு வெகு அருகிலுள்ள ரேய்ச்சூர்க்கோட்டையும் முதிகல்லுக்கோட்டையும் பீஜப்பூர்சுல்தான் வசம் இன்னும் இருந்தன வன்றோ? அவைகளையும் கைப்பற்றித் தம் வசம் செய்துகொண்டாலன்றி ஸாம்ராஜ்யத்துக்குத் தீங்கு என்றும்நேரிடாது என்று சொல்வதற்கில்லை. ஆதலின் 1520-ஆம் வருஷத்தில் கிருஷ்ணதேவர் ஒரு பெரிய படையுடன் சென்று மேற்சொன்ன இருகோட்டைகளையும் பிடித்துக்கொண்டு, சுல்தானை முறியடித்து பீஜப்பூரைவிட்டு ஓடும்படி செய்தனர். பிறகு சுல்தானுடன் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டதனால் இருவரும் சிநேகமாய்ச் சிலவருஷங்கள் இருந்தார்கள்.

XXXI திம்மரசின் ராஜ்ய நிர்வாகம்.

மூன்று தலைமுறையாக அமைச்சகௌரவம்பெற்று அரசாங்கத்தை இயற்றிவந்த திம்மரசின் பெருமையைப் போற்றாதார் ஒருவருமிலர். இவரது கியாதியும் விஜயநகர ஸாம்ராஜ்யத்தின் மேன்மையும் இந்தியதேச முழுதுமேயன்றிப் பிறதேசங்களிலும் பரவியது. பிரஜைகள் செவ்வனே சுகமெய்தினர். உட்கலகம் யாதொன்றுமில்லை. பிறதேசத்து மன்னர் இவரிடம் வெகு மரியாதையுடன் நடந்து கொண்டனர். ஜனங்களது நன்மையின்பொருட்டு வாய்க்கால்களும் தடாகங்களும் கிணறுகளும் வெட்டப்பட்டன. பிரயாணிகளது சௌகரிய நிமித்தம் சத்திரசாவடிகள் கட்டப்பட்டன. புதிதாய்க் கோவில்களும் மந்திரங்களும் நிருமிக்கப்பெற்றன. தேவஸ்தானங்கள் சீர்திருத்த மடைந்தன. ஸாம்ராஜ்யத்திலுள்ள நன்செய், புன்செய் நிலங்கள் சரியாய் அளக்கப்பட்டு அவைகளுக்கு உரியவர் யாவரென ஒழுங்காய் நிர்ணயிக்கப்பட்டன. அநாவசியமெனக் கருதக்கூடிய வரிகள் நீக்கப்பட்டன. உதாரணமாகத் தம் மக்களுக்கு விவாகம் இயற்றும் ஒவ்வொருவருங் கொடுக்க வேண்டியதாயிருந்த தீர்வை அடியோடு ஒழிக்கப்பட்டது. பிறநாட்டார்களுடன் வியாபாரம் மிகவும் பெருகியது.

பிரதான நகரமான விஜயநகரமோ எல்லாச்செல்வங்களும் மிகுந்து சகலசௌகரியங்களும் நிறைந்து சான்றோர்கள் உவந்து வசிக்கப்பெற்று விளங்கியது. விசாலமான வீடுகளும் உயர்ந்த கோபுரங்களும் அழகமைந்த மாளிகைகளும் அகன்ற தடாகங்களும் ரமணீயமான உத்தியானவனங்களும் நிறையப்பெற்ற அந்நகர்

மேற்றிசைநாட்டினின்றும் வந்த ஐரோப்பியர்களுக்கும் ஆச்சரியத்தை உண்டாக்கியது. 'இதுபோன்ற நகரம் வேறெங்கும் இன்று' என்றனர் அவர்களுள் பலர்.

திம்மரசுக்கு மதத்துவேஷம் என்பதே யில்லை. வைஷ்ணவர்களென்றுஞ் சைவர்களென்றும் அவர் வித்தியாசம் யாதொன்றும் பாராட்டுவதில்லை. ஜைனர்களும் கூட அவரால் ஆதரிக்கப்பட்டு வந்தனர். மகம்மதியர்கள் அவரைத் தங்களுக்குச் சினேகிதர் என்றே மதித்து வந்தனர். போர்த்துகல் தேசத்திலிருந்து வந்த ஐரோப்பிய வியாபாரிகளிடத்தும் அவர் பிரியமாய் நடந்துகொண்டனர். ஆகவே ஸாம்ராஜ்யத்தில் எவ்வகுப்பினராயினுஞ் சரி, எச்சமயத்தினராயினுஞ் சரி, எத்தேசத்தவராயினுஞ் சரி, யாவராலும் அவர் வெகுவாய் நன்குமதிக்கப் பெற்றார்.

தாம் பிரஜைகளின் க்ஷேமத்தின்பொருட்டே யுள்ளோம் என்றும், கதிரவன் தன் கிரணங்களால் நீரைப் பருகித் திரும்பியும் அந்நீரைப் பூமியின் நன்மையின் பொருட்டுப் பதின்மடங்காய் மழை ரூபமாய்ப் பொழிவதுபோலப் பிரஜைகளிடம் இருந்து வசூலித்த பணத்தை அவரது சுகத்தை விருத்திசெய்யவே செலவிட வேண்டும் என்றும், அவர் நினைந்து அதற்கு இயைந்தவாறே எப்பொழுதும் ஒழுகிவந்தார்.

XXXII திம்மரசின் அந்திய காலம்

புருஷார்த்தங்கள் யாவும் ஒருங்கே கிடைக்கப்பெற்ற தேவராயர் சிலவருஷங்கள் வெகுவிமரிசையாய் அரசாட்சி நடத்திவந்தனர். திம்மரசின் மனப்பூர்வமான துணையைப்பெற்ற அவர்க்கு, இது ஓர் அதிசய

மாகுமோ? ஆயினும் ஈசனது திருவுள்ளத்தை யாரே அறியற்பாலர்? வெகுபுத்திவாய்ந்த தேவராயருக்கும் மனநிலை மாறுபட்டது. இவருக்கு ஒரே புதல்வன். அவனுக்கு இக்காலத்தில் சுமார் ஆறு வயது. தமக்குப் பின் அச்சிறுவனுக்கு ஸாம்ராஜ்யம் கிட்டுமோ எனும் ஓர் அச்சம் அவர்மனத்தில் எழுந்தது. 'கலக்கத்தைக், கையாறுக் கொள்ளாதா மேல்' என்ற உண்மையை அடியோடு மறந்தனர். மேன்மேலும் நினைந்து நினைந்து மனத்தைப் புண்படுத்திக் கொண்டு தம் மைந்தனுக்குச் சிம்மாசனங் கிடைக்காமலே போய்விடுமென்று நிச்சயஞ் செய்துகொண்டார். ஆதலின் தாம் உயிரோடிருக்குங் காலத்தே, அவனுக்குப் பட்டாபிஷேகஞ் செய்வித்து விடவேண்டுமென ஆசை கொண்டார். திம்மரசிடம் அவர் தமது எண்ணத்தைத் தெரிவிக்க அவர் அதை அங்கீகரிக்கவில்லை. ராயர் தாமாகவே ராஜ்யாதிகாரத்தை விட்டுவிடுவதில் திம்மரசுக்குக் கொஞ்சமும் சம்மதமில்லை. இதனைக்கேட்ட தேவராயருக்கு முன்னிருந்த அவா மிகுதியும் பெருகிற்று. காரணம் என்னவெனில், தமக்குப்பின் தமது குமாரனுக்கின்றித் திம்மரசு தம் மகனுக்குப் பட்டம்சூட்டவேண்டுமென்ற கெட்ட எண்ணத்துடனேயே, தம் அபிப்பிராயத்துக்கு இணங்கவில்லை என்ற தீயஎண்ணம் கிருஷ்ணதேவராயர் கொண்டார். "ஆசையெனும் பெருங்காற்றூடிலவம் பஞ்செனவு மனதலையுங் காலம், கற்றதுங்கேட்டதுந் தூர்ந்து நிற்பர் அந்தோ" எனத் தாயுமானவர் கூறியதும் உண்மையே யன்றோ! பேராசையின் வசப்பட்ட தேவராயருக்குத் தம்[illegible]ம் தாயினும் இனிதே அன்புகாட்டித், தந்தையினும் மிகவே பரிவுடன் தன்னை

ப்போற்றிக், குருவினும் அதிகமாய்க் கலைகள் பயிற்றி, உடல் இரண்டெனினும் உயிரொன்றுமென யாவரும் போற்றுமாறு ஒழுகிவந்த திம்மரசிடத்தே வெகு விபரீதமான சந்தேகங்கள் உண்டாயின. ஆதலின் அவரது யோசனையை அசட்டைசெய்து தமது குமாரனை வெகு ஆடம்பரத்துடனும், கோலத்துடனும் சிம்மாசனம் ஏற்றுவித்துப் பட்டாபிஷேகத்தையுஞ் செய்வித்தனர். அவ்வபிஷேக சம்பந்தமான உற்சவங்கள் எட்டுமாதகாலம் விஜயநகரத்தில் நடந்தேறின. ஆயினும் என்ன!

"மணவணி யணிந்த மகளி ராங்கே
பிணவணி யணிந்து தம் கொழுநரைத் தழுவி
உடுத்த ஆடை கோடி யாக
முடித்த கூந்தல் விரிப்பினும் விரிப்பர்"

என்றவாறே, அச்சிறுவன் சிம்மாசனமேறின சிலமாதங்களுக்குள் ஏதோ வியாதியினால் பீடிக்கப்பட்டு இறந்து போனான்.

'போதாதகாலத்தில் பழுதையும் பாம்பாகும்' என்றொரு பழமொழியுண்டு. தற்காலத்தில் திம்மரசுக்குக் காலம் வெகு விபரீதமாயிருந்ததென்றே சொல்லவேண்டும். எவரோ சிலவீணர்கள் தேவராயரிடஞ் சென்று திம்மரசின் சூழ்ச்சியாலே விஷமிடப்பட்டு அரசன் இறந்துபோனான் என்றுரைத்தனர். இதைக்கேட்ட தேவராயரது உள்ளம், நெய் பெய்யப் பெற்ற அக்கினி போல் கோபத்தால் பொங்கியது. சற்றேனும் ஆலோசியாது அவரையும், அவரது புதல்வன் முதலிய நெருங்கிய பந்துக்களையுஞ் சிறையில் அடைப்பித்தனர். அந்தோ! நாற்பது வருஷகாலம் விஜயநகரத்தரசர்க

ளுக்குத்தம் ஆவியையும் உடலையும் அர்ப்பணஞ்செய்து ஊழியஞ்செய்த திம்மரசுக்கு இதுவும் ஓர் கைம்மாறோ!

சிறையில் புகுந்த பிறகேனும் தம்கஷ்டம் திம்மரசுக்கு நீங்கியதோ ? இல்லை, இல்லை. அனுபவஞானம் சிறிதுமில்லாத அவரது மகன் சிறையினின்றும் தப்பியோடிப்போய்ச் சிலபோர் வீரர்களைத் திரட்டி அவர்களுடன் கிருஷ்ணதேவராயரை எதிர்க்கவந்தனன். அவர் ஒருசேனையை யனுப்பி அச்சிறுவனை முறியடித்து மறுபடியும் அவனைச்சிறையில் அடைப்பித்தனர். அல்லாமலும் தகப்பன், பிள்ளை இருவரது கண்களையும் பிடுங்கச்செய்தனர். இதனினுங் கொடிய செயல் வேறுமுண்டோ! காலத்தின் கொடுமைக்கு வேறு அத்தாட்சியும்வேண்டுமோ!

கண்ணிழந்த திம்மரசு பிறகு மூன்று வருஷகாலம் சிறையிலிருந்து கடைசியில் தேகம் துறந்தனர். ஆ! என்ன கஷ்டம்!

XXXIII முடிவுரை.

சகலவிதபோகமும் சொல்லவொண்ணாச் செல்லுவகையும் ஒப்பில்லாமாட்சியும் குறைவில்லாக்கீர்த்தியும், 'எட்டுக்கண்ணும் விட்டடிக்கும்' என்னுமாறு அதிகாரமும் வாய்ந்த திம்மரசுக்கும் அந்திய காலத்தில் இத்தகைய கஷ்டமும் தீமையும் நேரிடல் தருமமாமோ! என நாம் ஆராய்தல் சகஜம். ஆயினும் நம் சிற்றறிவுக்குப் புலனாம்வண்ணம் காரணம் தெளிந்தறிதல் சாத்தியமன்று; என்றாலும்,

கருப்பைக்குண் முட்டைக்குங் கல்லினுட் டேரைக்கும்
விருப்புற் றமுதளிக்கு மெய்யன்,

காரணமின்றியோ, குரூரசித்தத்துடனே உயிர்களை வாட்டுவான் என மதித்தல் மாத்திரந் தகுதியன்று, அவ்வாறு எண்ணாது, எதுவரினும் அது ஆன்மலாபத்தைக் கருதியே வருமெனஉறுதிகொண்டுஎல்லாம்வல்ல இறைவனிடம் அன்பு மிகுந்து,

தருதுயரம் தடாயேலுன் சரணல்லால் சரணில்லை
விரைகுழுவு மலர்ப்பொழில்சூழ் வித்துவக் கோட்டம்மானே
அரிசினத்தா லீன்றதாய் அகற்றிடினு மற்றவள் தன்
அருள் நினைந்தே அழுங்குழவி யதுவேபோன்றிருந்தேனே
வாளால் அறுத்துச் சுடினு மருத்துவன் பால்
மாளாத காதல்நோ யாளன்போல் மாயத்தால்
மீளாத் துயர்தரினும் வித்துவக்கோட் டம்மாநீ
ஆளா வுனதருளே பார்ப்பன் அடியேனே.

எனத்துதித்து அவனடிபணிந்து வாழ்தலே நலம்

ஷாப்ட்ஸ்பரி பிரபு-ஓர்தேசோபகாரி.

1804—1885

1 இளமைப்பருவம்.

இவர் 1801-ஆம் ௵ ஏப்ரல் மாதம் 28-ஆம்தேதி லண்டன்மாநகரில் பிறந்தார். தொன்றுதொட்டுப்பிரபுத்துவம்வகித்தபாரம்பரையைச்சேர்ந்தவர்; இவரது தந்தை வெகு சமர்த்தர்; புத்திநுட்பம் வாய்ந்தவர். ஆயினும் ராஜகீயவிஷயங்களில் மிகவும் பாடுபட்டு வந்தவராகையால் தமது குமாரரது பாலியநடவடிக்கைகளைக் கவனித்து, அவைகளைச் சீர்திருத்தி, அவருக்கு நன்னடக்கை படியுமாறு பிரயத்தனங்கள் யாதொன்றுஞ் செய்யவில்லை. இது விஷயத்தில் இச்சிறுவரது தாய்க்கும் அதிக ஊக்கமிருந்ததாகத் தெரியவில்லை. இவ்வாறிருப்பினும், குழந்தை மாத்திரம் சுவபாவமாகவே நல்லவராகையால் நெறிதவறாமலே நடந்துவந்தார். அன்றியும், வீட்டில் வெகு காலமாகப் பணிவிடை செய்துவரும் மேரியா மில்லிஸ் என்ற ஓர் கிழவி, இக்குழந்தையினிடம் விசேஷ அன்புபாராட்டி, அடிக்கடி இவருக்கு நற்புத்தியும் ஈசுவர பக்தியும் புகட்டிவந்தாள். இந்த ஸ்திரீ மகா ஸாத்வீ. கபடமற்ற மனதும், மாசிலா ஹ்ருதயமும், இனியசொல்லும், ஒழுக்கமும் வாய்ந்தவள். ஆகையால் குழந்தையும் இவளிடத்தில் பிரியம் மிகுந்து, இவள் கூறியவண்ணம் நடந்துவருவர். காலையிலும் மாலையிலும் குழந்தையினிடஞ் சென்று கடவுளைத்தொழுவோமெனச்சொல்லி, மண்டிபோட்டு

உட்காரச்செய்து, அவரது கரங்களைக் கூப்புவித்து, தியானபரமான வாக்கியங்களைச் சொல்லச் செய்வாள்; தன்ஆயுள்நாள்முழுதும் ஈசுவரனைத்துதிக்கும்போதெல்லாம் இவ்வாக்கியங்களையே இவர் சொல்லிவந்தாரென்றால் மேரியமில்லிஸின்பெருமையைச் சொல்லல்வேண்டுமோ !

ஏழாவது பிராயத்தில் இக்குழந்தையை, பிதாமானர் ஹறவுஸ் என்னுமிடத்திலுள்ள கல்விச்சாலைக்கு அனுப்பினார். அது ஒரு போர்ட்டிங்ஸ்கூல். அதாவது பிள்ளைகள் பாடங்கள் படிப்பதுமல்லாமல் உண்பதும் உறங்குவதும் அங்கேதான். அக்காலத்தில், கலாசாலைகளில் மிகவும் அதிகமாகக் கற்பிக்கப்பட்டவை. லத்தீன், கிரீக்கு என்ற இரண்டு பாஷைகளே. சுவபாஷையாகிய இங்கிலீஷுக்கு விசேஷகௌரவமில்லை. பூசாஸ்திர, தாவரசாஸ்திர, ரஸாயன சாஸ்திரசம்பந்தமான படிப்பு மிகக்குறைவு. மேற்சொல்லப்பட்ட லத்தீன், கிரீக்கு பாஷைகளிலுள்ள பாடல்களை மொழிபெயர்ப்பதே முக்கிய நோக்கமாகக்கொண்டு மாணுக்கர்கள் கல்வி பயின்று வந்தார்கள். இவ்வாலிபரும் அவ்வாறே இப்பாஷைகளைப் படித்துவந்தார் ஆயினும், இப்பள்ளிக்கூடத்தில் இவருக்கு அதிகவிருப்பமில்லை. கூடப்படிக்கும் இதர பிள்ளைகள் இவரை அடிக்கடி பீடித்துத்துன்புறுத்தினார்கள். போஜனமும் சரியாகக் கிடைக்கவில்லை. பிற்காலத்தில் இக்கலாசாலை ஞாபகம் வரும்போதெல்லாம் இவருக்கு மயிர்க்கூச்செறிவும் வெறுப்பும் உண்டாகுமாம். ஒருநாள், தமதுமாற்றுந்தாயெனமதித்து மிகவும் நன்றிபாராட்டிவந்த மேரியமில்லிஸ், இறந்தனள் என்ற செய்திவந்தது. அதைக்கேட்டதும், இச்சிறுவர் அடைந்ததுக்கம் இத்

தன்மையதெனச் சொல்லல் அரிது. 'என்தாயே! இனி உன்னையொத்த நண்பரை எங்குக்காண்பேன்! எனக் கதறினார். இறக்குந்தருணத்திற் கூட மேரியமில்லிஸ், குழந்தை ஞாபகம் மறவாதவளாய்த் தனது பொன் கடிகாரத்தை ஒருவரிடங் கொடுத்து 'இதை என் குழந்தையினிடஞ் சேர்ப்பி' என்றனள். ஷாப்ட்ஸ்பரிபிரபுவும் அக்கடிகாரத்தைத் தம் ஆயுள் நாள் முழுதும் ஜாக்கிரதையாகக் கூடவே வைத்திருந்து இஃது என் அருமைநண்பர் அளித்தபரிசு' எனத் தம் சுற்றத்தார்களுக்குஞ் சினேகிதர்களுக்கும் மிகுந்த களிப்புடன் சுட்டிக்காண்பிப்பாராம்.

பன்னிரண்டாவது வயதில் இவர் மானர்ஹவுஸ் ஸ்கூலைவிட்டு மேற்படிப்புக்காக ஹாரோ பட்டணஞ் சென்றார். இங்கே டாக்டர் பட்ளர்என்ற கல்விமான் இவரைத் தனது அகத்தில் ஏற்றுக்கொண்டார். இவருடன் வேறுசில உயர்குலத்துச் சிறுவர்களும் கல்விப்பயிற்சி செய்து வந்தார்கள். மானர்ஹவுஸ் ஸ்கூலிற் போலல்லாமல், இச்சிறுவர்கள் நன்னடக்கை யுடையவர்களாய் ஷாப்ட்ஸ்பரியுடன் சினேகமா யிருந்தார்கள். அதனால் இவர் சுலபமாய்ப் பாடங்களைக் கற்று விரைவில் மனத்தேர்ச்சி யடைந்தார். அதுவுமின்றி, பக்கத்திலுள்ள காடுகளிலும் தோட்டங்களிலும் கிராமங்களிலும் அடிக்கடி உல்லாஸமாகக் காலங்கழிக்க நேரிட்டதனால் இவர் ஈசுவர சிருஷ்டியின் அற்புதங்களையெல்லாம் நன்றாய்த் தெரிந்துகொண்டது மல்லாமல் பூமியிலுள்ள ஜீவராசிகளெல்லாம் கடவுளின் படைப்புப் பொருள்களாதலால் அவைகளுக்குத் தீங்கியற்றல் மனிதனுக்குத்தகாது, தம்மாலியன்றவளவு அவைகளை அன்புடன்

பாதுகாப்பதே கடமையென்ற உயர்ந்த ஞானத்தையும் பெற்றார்.

ஒருநாள் ஹாரோ பட்டணத்தில், ஒருபெரிய தெருவின் வழியாய் ஷாப்ட்ஸ்பரி தனியாய்ப் போய்க்கொண்டிருந்தார். அகஸ்மாத்தாய்த் திடீரென்று 'ஹோ' என்ற கூச்சலும், கைகொட்டலும், கட்குடியர்களது பாட்டுக்களும் அவரது காதில் விழுந்தன. சத்தம் வந்தவழியே சென்று பக்கத்திலுள்ள சந்திற் பார்க்கையில் மதுபானத்தால் மயக்கங்கொண்ட சில வெறியர்கள் மேற்கூறிய சத்தங்களைச் செய்து பிரேதமடங்கிய பெட்டியொன்றைத் தூக்கிக்கொண்டு போவதைக்கண்ணுற்றார். இறந்தவனது உறவினரோ சினேகிதரோ எவரேனும் கூடவிருந்ததாகத் தோன்றவில்லை. சந்தின்மூலை திரும்பினதும் அவ்வெறியர்கள் அப்பெட்டியைக் கீழேயெறிந்துவிட்டு முன்னிலும் மிகுதியாய் ஆரவாரஞ்செய்து அகோரமான சில பாட்டுக்களைப் பாடத்தொடங்கினார்கள். இதைப்பார்த்த ஷாப்ட்ஸ்பரி மனங்கரைந்து மிகத்துயரமுற்று, 'அந்தோ! இறந்தவன் அகதியாதலாலல்லவோ அவனது பிணத்தை யிவ்வாறு அவமதிக்கிறார்கள். அவனையும் ஈசன் படைக்கவில்லையோ! அவரது சிருஷ்டிக் கிரமத்தில் எளியர்கள் இருப்பது சகஜமாயினும், இறந்தவனைப்போன்ற திக்கற்றவர்களும் பூமியில் திரிதல்வேண்டுமோ! தனிகர்கள் தயைமிகுந்து தங்கள் கடமையைச் செய்தால் வறுமையின் கொடுமை நீங்காதோ!', என ஆலோசித்து, 'இனி என்ஆயுள்நாள் முழுதும் என்னாலியன்றவளவு ஏழைகளின் கொடுமையை, இந்நாட்டார்களுக்கு வற்புறுத்தி அவர்களது நிலைமையைச் சீர்திருத்தமுயல்

வேன்; இதுஸத்தியம் என்று தம்மனத்தில் உறுதிப் பாடுசெய்துகொண்டார்.

பதினாறாவது பிராயத்தில் ஹாரோபட்டணத்தை விட்டு நீங்கி இரண்டு வருஷகாலம் டார்பி மாகாணத்தில் மதபோதகாசாரியர் ஒருவரிடம் உயர்தரக்கல்வி பயின்று வந்தார் 1819 ஆம் ௵ ஆக்ஸ்பர்ட் க்ரைஸ்ட்சர்ச் கலாசாலையிற் சேர்ந்து, 3வருஷகாலம் படித்து பி. ஏ. பரீக்ஷையில் முதல் வகுப்பில் தேறினார்.

II யௌவனதசை.

கலாசாலையை விட்டுத் திரும்பித் தமது ஊருக்கு வந்த காலத்து ஷாப்ட்ஸ்பரிக்கு வயது இருபத்திரண்டு. தந்தை மிகுந்த செல்வராயிருந்ததனால் இவருக்கு உடனே வேலையிற்புகுந்து குடும்ப காலக்ஷேபத்துக்குத் திரவியம் சம்பாதிக்கவேண்டிய அவசியம் இல்லாதிருந்தது. தமது மனோபாவங்களைச் சாவதானமாக ஆலோசித்து நன்றாயுணர்ந்து, எவ்வித மார்க்கங்களில் பிரவர்த்தித்தால் தமது மனோரதங்களைப் பூர்த்தி செய்வதுமல்லாமல் லோகோபயோகமான காரியங்களையுஞ் சாதிக்கலாம் என்று நிதானித்து அதற்கு அநுகுணமான பிரயத்தனங்கள் செய்வதற்கு அவருக்குத் தக்க அவகாசமிருந்தது. அவ்வவகாசத்தை ஷாப்ட்ஸ்பரி வீண்போக்கவில்லை. ஹாரோவில் இவர்செய்துகொண்ட த்ருட ஸங்கற்பத்தைப் பற்றி ஏற்கெனவே சொல்லியிருக்கிறோம். அச்சங்கற்பமே, மேன்மேலும் இவரது மனத்தைக்கவர, பார்லிமெண்ட் ஸபையில் மெம்பராகி ஏழைகளின் நிலையைப்பண்படுத்துவதும் நாட்டில்

மதம் விருத்தியாகி ஈசுவரபக்தி செழித்தோங்கச்செய்வதும் ஆகிய இவற்றை உள்நோக்கமாகக் கொண்டு பாடு படுவதே தமது கடமையாகுமெனத் துணிந்தார். இக்காலத்தில் இவரது மனத்தில் தோன்றிய எண்ணங்கள் இத்தன்மையன வென இவரது தினசரிப்புத்தக மூலமாய்த் தெரியவருகின்றது. "ஈசுவரகிருபையால் என்செல்வத்தைப் பூமியில் சுகவிருத்தியின்பொருட்டும் மதச்செழிப்பின் பொருட்டுமே செலவு செய்யவேண்டுமெனத்தோன்றுகின்றது" என்றும், "பிறர் பரிகசித்தால் தான் என்ன, அவமதித்தால்தான் என்ன, தர்மத்தையே கடைப்பிடித்து ஒழுகுவதல்லவோ மனிதன் கடமை; என் ஆசையெல்லாம் ஈசுவரகிருபைக்குப் பாத்திரமாகி நாட்டுக்கு உபயோகமாயிருத்தலே" என்றும், இப்புத்தகத்தில் கண்டிருக்கிறது.

1826-ஆம் வருஷத்தில் உட்ஸ்டாக் மாகாணத்து ஜனங்கள் இவரைத் தங்கள் பிரதிநிதியாகப் பார்லிமெண்டுக்கு அனுப்பினார்கள். அச்சபையில் முதலில் ஒரு வருஷகாலம் இவர் ஒன்றையுங்கவனியாமலே இருந்துவிட்டார். அடுத்தவருஷம் கார்டன் என்ற ஓர் மெம்பர், சித்தப்பிரமை கொண்டவர்களுக்கென்று ஏற்பட்ட வைத்திய சாலைகளின் சீர்திருத்த சம்பந்தமாய் ஓர் மசோதா கொண்டுவர, அம்மசோதாவைப் பார்லிமெண்டார்கள் அங்கீகரித்தல் மிகவும் நியாயம் என ஷாப்ட்ஸ்பரி வற்புறுத்திப்பேசினர். லண்டன் நகரத்திலும் வேறு சிலவிடங்களிலுமுள்ள சிகித்ஸாசாலைகளை நேரே போய்ப்பார்த்து அங்குள்ள குறைகளை வெளிப்படுத்தினர். பிரதிவாரமும் சனிக்கிழமை சாயங்காலம் முதல் திங்கட்கிழமை காலை வரையில் விடுமுறை

யாதலால் இந்தச் சிகித்ஸாசாலைகளில் வைத்தியர்களும், வேலையாட்களும் அக்காலங்களில் இருப்பதில்லையாம். ஆனால் அங்கிருக்கும் சித்தரோயாளிகள் ஒருவரை யொருவர் வருத்தாமலிருக்கும் பொருட்டு அவர்கள் ஒவ்வொருவரையும் சங்கிலிகளால் ஒவ்வோரிடத்தில் கட்டி, கைக்கெட்டிய தூரத்தில் கொஞ்சம் ஆகாரத்தை வைத்துவிட்டுப் போய்விடுவார்களாம். அன்றியும், வெறிபிடித்த பைத்தியக்காரர்களையுஞ் கொஞ்சம் சாந்தமாயிருப்பவர்களையும் பிரித்துத் தனித்தனி இடங்களில் வைப்பதில்லையாம். அச்சிகித்ஸாசாலைகளும் மிக அசுத்தமாகவும், துர்நாற்றம் நிரம்பியும் இருக்குபாம். இவைகளைப் பார்த்த ஷாப்ட்ஸ்பரி மிக்க விசனமுற்றவராய் மேற்சொன்ன மசோதாவைப் பார்லிமெண்டார்கள் அங்கீகரிக்கும்படி செய்வதற்குத்தகுந்த முயற்சிகளை ஊக்கத்துடன் செய்ய, 1828-ஆம் வருஷத்தில் அந்தமசோதா ஏற்றுக் கொள்ளப்பட்டது. பிறகு இவரது விடாமுயற்சியாலேயே 1845-ஆம் வருஷத்தில் வேறொரு சிறந்த சட்டமும் இயற்றப்பட்டது. அச்சட்டம் காரணமாகச் சித்தப்பிரமங்கொண்டநோயாளிகளுக்கென்றே ஒருகோடிபவுன் செலவுசெய்து, அங்கங்கே சிகித்ஸாசாலைகள் அமைக்கப்பட்டன. அவைகள் சரியாய் நடக்கும் பொருட்டுப்பிரதிவருஷமும் 15 லக்ஷம்பவுனும் கவர்ன்மெண்டாரால் அளிக்கப்பட்டது.

இவ்வருஷத்திலேயே இவருக்கு நம் இந்திய தேச சம்பந்தம் கொஞ்சம் ஏற்பட்டது. 1858-ஆம் வருஷத்துக்கு முந்தி ஆங்கிலேயர்கள் இத்தேசத்தில் தங்கள் ஆளுகைக்கு உட்படுத்திய மாகாணங்களெல்லாம் பிரிட்டிஷ் அரசாட்சிக்கு நேரேகீழ்ப்பட்டவைகளல்ல. இங்கி

லாந்து தேசத்தில் ஏற்பட்ட ஓர் வர்த்தக சங்கத்தாராகிய ஈஸ்ட் இந்தியா கம்பெனியாருக்குச் சொந்தமானவை. ஆயினும் இந்தக் கம்பெனியார்கள் சரிவர இந்திய மாகாணங்களை ஆண்டுவருமாறு தகுந்த யோசனைசொல்லப் பார்லிமெண்டார்கள் ஓர் சிறு கமிடி ஏற்படுத்தி யிருந்தார்கள். அக்கமிட்டியில் ஓர் மெம்பராக நம் ஷாப்ட்ஸ்பரியைத் தேர்ந்தெடுக்க, அவரும் இவ்வதிகாரத்தை இரண்டு வருஷம் நடத்தினார்.

1829 ஆம் வருஷம் தாம் பிறந்தநாளாகிய ஏப்ரல் மாதம் 28-ஆம் தேதி ஷாப்ட்ஸ்பரி பின்வருமாறு தம் தினசரிப் புத்தகத்தில் எழுதி யிருக்கிறார். "என்ன ஆச்சரியம்! கடவுள் எனக்கு எவ்வளவோ நன்மைகளை யெல்லாம் அளித்திருக்கிறார்; கோடிக்கணக்கான ஜனங்கள் நிறைந்த இந்திய தேசத்துக்கு எனது சிரத்தையினாலோ அசிரத்தையினாலோ சுகமோ துக்கமோ ஏற்படும்படியான பதவியிலல்லவோ என்னை வைத்திருக்கிறார். நான் அப்பதவியில் எவ்வாறு இனி நடந்துகொள்ளவேண்டுமென யோசிப்பேன். முதன்மையாய்க் கவனிக்கவேண்டிய விஷயம் யாதென்றால், எக்காரியம் செய்யப்புகினும், சர்வேசுவரனது கீர்த்தியும் பெருமையும் செழித்தோங்கப் பார்த்தல்; இரண்டாவது, மானிடகோடிகளின் சுகத்தைவிருத்திசெய்தல்; இவ்விரண்டு காரியங்களும் நிறைவேறுமாறு விடா முயற்சியுடன் உழைத்தல் வேண்டும். பிறர் மெச்சிக் கொள்ளவேண்டுமென்ற அற்ப ஆசை கூடாது. கம்பீர புத்தியுடனிருந்து, விஷயங்களைத் தீர விசாரித்தறிந்து நடுவு நிலைமை தவறாது நடக்கவேண்டும்" என்பது. இவ்வித உள் நோக்கங்களுடன் இருந்து இடைவிடாது

ஜனங்களுக்கு நன்மை செய்து வந்த ஓர் பிரபுவை ஜனங்கள் மிகக் கொண்டாடித் துதித்தார்கள் என்றால் அது ஓர் ஆச்சரியமாமோ?

1830-ஆம் வருஷம் டார்ஸட் மாகாணத்து ஜனங்கள் இவரைத் தங்களது பிரதிநிதியாய்ப் பார்லிமெண்டுக்கு அனுப்பினார்கள். அவ்வருஷமே இவர் எமிலி கௌபர் என்ற ஓர் பெண்மணியை மணம் புரிந்தார். இவ்வம்மையும் உயர்குடிப்பிறந்தவளே. சிறந்த உத்தம குணங்களையுடையவள். தன் கணவரது மனப்போக்கு எத்தன்மையதோ அவ்வண்ணமே நடந்துகொள்ளும் இனிய சுபாவமுடையவள். கோபம் என்பதே அவளிடத்திலில்லை. தருமத்திலேயே எப்போதும் சிந்தையுள்ளவள். கணவர் புரிந்த நற்காரியங்களிலெல்லாம் அவருடன் முன் நின்று தைரியம் சொல்லி, பிறர் அவமதித்தால் அது துச்சம் எனத் தேறுதல் சொல்லி அந் நற்காரியங்களில் ஊக்கத்தை விருத்திசெய்து வந்தாள். 'தருமத்தைச் செய்வதே நம் கடமை. அவ்வாறு செய்வதால் ஏற்படும் சுகதுக்கங்களை நாம் கவனிக்கவே கூடாது. கடைசியில் ஜயம் பெறுவோம் என்பதில் ஐயமுமில்லை' என்று அடிக்கடி தன் கணவருக்கு உரைத்தல் அவளுக்கு வழக்கமாம். அவ்வாறு நாற்பது வருஷகாலம் பாலுந் தேனும்போல மனமொத்து இல்லறம் நடாத்தி ஆறு புதல்வர்களையும் நான்கு புதல்விகளையும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்ந்து கடைசியில் தேகவியோகம் ஆயினள். தம் அருமை நாயகியை நினைக்கும்போதெல்லாம் ஷாப்ட்ஸ்பரி பிரபு மனம் பூரித்துக் கண்ணீர் ததும்பி, கைகூப்பி, 'இறைவா! நீர் எனக்குச் செய்த நன்மை எத்தன்மையதென என்னால்

சொல்லப்படுமோ! இல்லறவாழ்வில் என்னிலும் மேலான சுகத்தை அநுபவித்தவருமுண்டோ! என் கண்மணியை எனக்கு நீர் கருணைபுரிந்தது அதிசயமன்றோ! என ஆனந்த பரவசராய் ஈசனைத் துதிப்பார்.

III. பரோபகார முயற்சிகள்.

இனி ஷாப்ட்ஸ்பரி பிரபு, பார்லிமெண்டு மெம்பராய்ப் பாடுபட்டு நிறைவேற்றிய சில முக்கிய சீர்திருத்தங்களைக் குறித்து விவரமாகச் சொல்லுவோம்.

இவரது காலத்தில் கைத்தொழில் மிகுந்த லண்டன், மான்சஸ்டர், பர்மிங்காம் முதலிய பட்டணங்கள் மேன்மேலும் விருத்தியாய்க்கொண்டே வந்தன. யந்திர சாலைகள் ஏராளமாகிக் கைத்தொழிற் சாமான்கள், விசேஷமாய்ச் செய்யப்பெற்றுப் பிறதேசங்களுக்கு ஏற்றுமதி அதிகமாயிருந்தபடியால் வர்த்தகர்களும் யந்திரசாலைகளுக்கு உரிமைபெற்றவர்களும் விசேஷலாபத்தை அடைந்து வந்தார்கள். அதுகாரணம் பற்றி இங்கிலாந்து தேசமே, பணம் பெருத்த சீமையெனப் பிறதேசத்தார் கொண்டாடும்படியான கௌரவத்தையும் அடைந்தது. ஆயினும், ஜனசமூகத்தினுடைய சுகம் மாத்திரம் அதிகரித்தது என்று சொல்வற்கில்லை. யந்திர சாலைகள் மிகவே அச்சாலைகளின் வேலையாட்களும் அதிகரித்தனர். இவர்களெல்லோரும் தாங்கள் வேலையிலமர்ந்திருக்குமிடங்களுக்கு அருகிலேயே இருக்க வேண்டியிருந்தமையால், அச்சாலைகளுக்குச் சுற்றுப்பக்களிலெல்லாம் வீடுகள் ஏற்பட்டு ஒவ்வொரு வீடுகளிலும் ஏராளமான ஜனங்கள் குடியிருக்க நேர்ந்தது.

வெற்றிடமென்பதே கிடையாது. வீதிகளும் மிக நெருக்கமாய் விட்டன. ஆகையால் வெளிச்சமும் சுத்தவாயுவுமில்லாமற் போக யந்திரசாலைப் புகையும் கரியமில வாயுவும் கலந்தகாற்றையே உட்கொள்ள நேரிட்டதனால், ஜனங்களுக்கு ஆரோக்கியம் மிகக்குறைந்து வியாதிகள் அதிகரித்தன.

இதுவுமன்றி, இவ்யந்திரசாலைகளில் கூலியாட்கள் செய்ய வேண்டியிருந்தவேலையும் மிகக்கடுமையாயிருந்தது. தினந்தோறுமே காலை 6-மணி முதல் 12- மணி நேரம் வரையில் அவர்கள் அச்சாலைகளில் வேலையில் அமர்ந்திருந்தார்கள். காலை சுமார் 8மணிக்குமேல் அரைமணியும், மத்தியானத்தில் 12-மணிக்குமேல் ஒருமணியும் தவிர வேறு விடு முறைக்காலமே கிடையாது. ஆகாரமும் போதுமான வளவு கிடைக்காது. இங்கிலாந்து போன்ற குளிர்மிகுந்ததேசங்களில் ஆகாரம்புஷ்டியாயும் ஸத்துள்ளதாயும் இருத்தல் அவசியம். அவ்வாறன்றி இவ்யந்திரசாலைகளிலுள்ளவர்கள் வெகுவாய் ஓட்ஸ் கஞ்சியையும் உருளைக்கிழங்கையும் தேயிலைக்கஷாயத்தையுமே புசித்துவந்தனர். மாமிசத்தை வாங்கிச் சாப்பிடக்கூடிய சம்பளக்காரர்கள் மிகவும் சிலரே. இது மாத்திரமே யல்லாமல் ஒவ்வொரு வேலையாளும் காலை முதல் மாலை வரையிலும் வருஷாரம்பமுதல்வருஷமுடிவுவரையிலும் ஒரே வேலையையே திரும்பத்திரும்பச்செய்யவேண்டி வந்தமையால், அவர்களெல்லோரும் உற்சாகமென்பதேயில்லாமல் அலுத்துச்சலித்துத் தேகவலிமை குன்றிப் போனார்கள்.

இம்மாதிரி சுத்தமான காற்று இல்லாமையாலும் தக்க உணவுகிடையாமையாலும் தாங்கவொண்ணாத

கஷ்டப்பட்டு ஒவ்வொரு நாளும் 12 அல்லது 15 மணி வேலை செய்தவர்கள், ஆண்மக்கள் மாத்திரமல்லர். ஸ்திரீகளும் இளங்குழந்தைகளுங்கூட அவ்வாறு செய்ய வேண்டியிருந்தது. இக்குழந்தைகள் பட்ட பாடு சொல்லற்பாலதோ! அநேக யந்திரசாலைகளில் 5 வயதுள்ள சிறுவர்களும் உழைத்து வந்தனர். இப்படிப்பட்டவர்களுக்குக்கொடுத்துவந்த கூலி மிகச்சொற்பமாகையால் இளம்பிள்ளைகளை வேலைக்கு அமர்த்துவதில் யந்திரசாலை அதிபர்களுக்கு அவா மிகுந்தது. ஆகவே தங்கள் மனுஷ்யர்களைப் பல கிராமங்களுக்கும் பட்டணங்களுக்கும் அனுப்பி அங்குள்ள எளிய பேதை ஜனங்களை நோக்கி "உங்கள் சிறுவர்களுக்கு உண்ணச் சோறும் உடுக்க உடையும்" ஏராளமாய்த்தருகிறோம்; கைத்தொழில்களையும் கற்பிக்கிறோம் என்றும், இன்னும் பலவிதமான புரட்டுகளையெல்லாம் சொல்லி ஆடு மாடுகளை விலைக்கு வாங்குவதுபோல் அவர்களது சிறு பாலர்களை வாங்கிவரச்செய்து தங்கள் யந்திரசாலைகளில் கடுமையான வேலைக்குட்படுத்தினார்கள். இவ்வாறு வந்த சிறுவர்கள் சட்டப்பிரகாரம் அச்சாலைகளில் தாங்கள் இருபத்தோராம் பிராயம் வரையிலும் வேலைசெய்யக்கடமைப் பட்டவர்கள். ஐயோ! இவர்கள்என்னபாடு பட்டார்கள். பகல் முழுதும் உழைத்தவர் சிலர்; இரவு முழுதும் உழைத்தவர்வேறு சிலர்; இதுவுமன்றிப் பகலிலும் இரவிலும் சேர்த்து வேலை செய்யவேண்டிவருவதும் உண்டு. சோர்வினாலோ தள்ளாமையாலோ சிறிதுநேரம் வேலையின்றியிருக்கவும் முடியாது. அவ்வாறிருப்பின் அவர்களைப் பக்கத்திலிருக்கும் காவலாளர்கள் காலாலுதைத்துத்-

த்தடியாலடிப்பார்கள்! தம் கஷ்டங்களைச் சொல்லிக் கொள்வதற்கும் இடம் இல்லை. கவர்ன்மெண்டு அதிகாரிகள் வந்தகாலத்தில் தெரிவித்துக் கொள்ளலாமென்றாலோ, அவர்கள் வந்துபோன பிறகு இவர்களுக்கு முன்னிலும் பதின் மடங்காகவல்லவோ தீமையுங் கஷ்டமும் விளையும்! ஆகவே ஏதும் திக்கற்றவர்களாய்த் தேகம் மெலிந்து மனங் களைத்து வியாதியிலடிபட்டு அளவற்ற சிறுவர்கள் மடிந்தார்கள். அவ்வாறு மடியாது உயிரோடிருப்பினும், அங்கங் குறையாமலும் ஆரோக்யத்தாழ்வில்லாமலும் தப்பியவர் ஒருவருமிலர் என்றே சொல்லலாம். இந்தக்கொடுமையையெல்லாம் கண்ணுற்று மனங்கரைந்த எலிஸபெத் பாரெட்ப்ரௌணிங் என்ற ஆங்கிலப்புலவர்சிகாமணி பின் வருமாறு கதறினர்:—

பாலகர் புலம்பல்.

1. என்னே சொல்வேன்! என்னே சொல்வேன்!
இப்பாலகர்தாம் அடையுந்துன்பம்
அன்னைமார் மடிமீ தேறி யவாது
முகமே நோக்கி யோவெனக் கதறி
ஓல மிட்டு விழிநீர் சொரிய
யாரே மனமும் கரையா தீண்டு
பார்த்திட வல்லோ ராவரிப் புவியில் ?
நண்பர்காள்! நீங்கள் பார்க்கவு மிலையோ ?
வனப்பு மிகுமிவ் வனத்தினில் மேவும்
புள்ளிமான் குட்டியும் பொருக்கென வெழுந்து
தன்னிழல் தன்னோ டுலவி யாடும்.
கூட்டினில் குலவி வாழுங் குஞ்சுகள்
மகிழ்வுடன் மழலை பேசிக் கொஞ்சிடும்.
நறுமணம் எங்கும் வீசிக் கொண்டே

மேற்றிசை தன்னை யலரச் செய்யும்
சிறுமல ரினிதாய்த் திகழ்வதைக் காணீர்.
பசும்புற் படர்ந்த தரையின் மீதே
இனிது வந்துறங்கி யியல்பாய் மீண்டும்
கதிரவன் பொன்னொளி கண்டு களிக்கச்
சட்டென வெழுந்து தாவியே யோடி
இனத்துடனினமே சேர்ந்து விளையாடி
இனிதே பவனி யாக வெங்கும்
பார்ப்போர் கண்ணும் மனமுங் குளிரப்
போகுதே* தகரின் புனிற்றிளங் குட்டியும்
அரிதென அறிஞர் கூறிடும் இந்த
மானிடப் பிறப்பை மதியுடன் தாங்கிப்
பாவமே யாதென வறியா வளரும்
இவ்விளங் குழவிகள் இடருறல் தகுமோ!
யாமார்க் குங்குடி யல்லே மென்றும்
வறியவன் துரைமக னவனே யென்றும்
அவனுறை யில்லம் அடையலர் சேர
ஒண்ணு தொளிருங் கோட்டை தானே
என்றிறு மாந்து பேசு நம்மவர்க்கும்
இதுவோ தருமம்! இதுவுமோ ரழகோ!
2. விரைவினி லிறத்தல் விழுமிதென் றுணர்ந்தோம்.
ஆலீஸ் சவக்குழி யருகினிற் கண்டோம்;
ஆங்குப் பணி செயற் கிடமிலை யதனல்
இன்றுயில் கொள்ளு மியல்புட னவளும்
கதிரவன் எழுமுன் கண்ணிய தொழிற்கு
விதியொடு செல்ல விரைந்தெழுகென்று
அதட்டி யெழுப்புவோர் ஆண்டில ரெவரும்
அன்றி யடிக்கடி யக்குழிக் கருகே
செவிகளை வைத்துச் சிரத்தையாய்க் கேட்டோம்;
பணியை யுணர்த்தும் பண்பொலி யொன்றும்
எங்கள் செவியில் ஏற்றது மில்லை;

*ஆடு

ஆலீஸ் ஈண்டே யரிதினில் வரினும்
ஆலீஸ் அவளென் றறிந்திட லரிதாம்
தொழிலை யியற்றுந் துயரில் லாமையால்
எழிலுறு மவள்மெய் இன்முக மொளிரும்
எல்லையி லின்ப மெய்திடு மாதலின்
நாங்களு மிறத்தல் நலமென் றுணர்ந்தோம்
என்றிக் குழவிகளியம்பக் கேட்ட
யாமு மிங்ஙனம் இனிதுறல் தகுமோ !

ஷாப்ட்ஸ்பரி பிரபு இப்பாலர்கள் படும் இடும்பையை நீக்கவேண்டு மென்று மனந்துணிந்தார். நேரில் யந்திர சாலைகளுக்கும், சுரங்கங்களுக்கும், மற்றுஞ் சிறுவர்கள் அமர்ந்துள்ள தொழிற் சாலைகளுக்குஞ் சென்று அவர்கள் படுந் துயரத்தைக் கண்ணுற்றார். அங்கங்கே பொது ஜனக்கூட்டங்களைக் கூட்டி, அச்சிறுவர்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டுமென வற்புறுத்தினர். யந்திரசாலை வேலையாட்களையே தங்கள் கஷ்டங்களை நீக்க வேண்டுமென, பார்லிமெண்டுஸபையோர்களுக்கு விண்ணப்பஞ் செய்து கொள்ளச் செய்தார். தமது சிநேகிதர்களுக்கும் இவ்விஷயத்தில் சிரத்தை யுண்டாகுமாறு தக்க முயற்சிகளுஞ் செய்தார். எதைச்செய்தால் தான் என்ன ? பணலாபமே உள் நோக்கமாகக் கொண்ட யந்திரசாலை அதிபர்கள் இவைகளைக் காதில் போட்டுக் கொள்ளவே யில்லை. அவர்களும் அவர்களது இஷ்டப்படி நடப்பவர்களுமே பார்லிமெண்ட் அங்கத்தினர்களாய் மிகுந்திருந்தமையால் ஷாப்ட்ஸ்பரி பிரபுவை ஆதரித்துப் பேசுபவர் மிகச் சிலரேயாயினர். ஆகையால் 1833-ஆம்௵ இவர், யந்திரசாலைகளிற் சிறுவர்கள், தினம் 10 மணிநேரத்

துக்குமேல் வேலைசெய்யும்படி செய்யலாகாது; அவ்வாறு செய்தால் குற்றமாகும் என்று கருத்துள்ள ஓர் மசோதாவைப் பார்லிமெண்ட் ஸபையில் கொண்டு வந்த காலத்தில் அது அங்கீகரிக்கப்படவில்லை.

ஆயினும் ஷாப்ட்ஸ்பரிக்கு மாத்திரம் தைரியம் குறையவில்லை. தாம் மேற்கொண்ட காரியம் தருமத்தைத் தழுவினதே யன்றி வேறல்ல என்ற உறுதியான நிச்சயத்தாலும், உலகத்தில் ஸத்தியமும் நியாயமும் ஒருநாளும் அழியா என்ற பூர்ண நம்பிக்கையாலும் தமது முயற்சிகள் வீண்போகா என மனவுறுதி கொண்டு, முன்னிலும் அதிக சிரத்தையுடன் இவ்விஷயத்தில் உழைத்துவந்தார். அது காரணமாக, 1840-ஆம் வருஷம் பார்லிமெண்ட் ஸபையார் ஓர் கமிட்டி ஏற்படுத்தி, அக்கமிட்டியார்கள், தேசத்தில் யந்திரசாலைகளில் மாத்திரமல்லாமல் மற்றுஞ் சிறுவர்கள் அமர்ந்துள்ள பிறதொழில்களிலும், வியாபாரங்களிலும் புகுந்து அவைகளையெல்லாம் நன்றாய்ச் சோதித்துத் தக்க சாட்சிகளையும் விசாரித்துச் சிறுவர்களுக்கு நன்மையுண்டாகுஞ் சீர்திருத்தங்களைக் குறித்துத் தங்களுக்குத் தெரிவிக்குமாறு விதித்தார்கள். 1842-ஆம் வருஷத்தில் இக்கமிட்டியார்கள் தங்கள் ரிபோர்ட்டை விளம்பரப்படுத்தினார்கள். அதைப்படித்த பிறகுதான் பொது ஜனங்களுக்குப் பாலர்படும் கஷ்டங்களெல்லாம் விசதமாய்த் தெரியவந்தன. கனிச்சுரங்கங்களிலும் கரிச்சுரங்கங்களிலும் ஆயிரக்கணக்கான சிறுவர்கள் வேலைசெய்து வந்தார்கள். அவர்களில் பெரும்பான்மையோர் ஏழு அல்லது எட்டுப்பிராயமுள்ளவர்களே. நான்கு, ஐந்து வயதுச் சிறுவர்களும் அநேகர் இருந்தனர்களாம். தினந்தோ

றும் நாள்முழுதும் சுரங்கங்களினுள்ளேயே வேலை செய்துவந்தார்களாதலின் இவர்கள் சூரியனை வாரத்துக்கு ஒரு முறையே பார்க்கலாயினராம். எப்போதுங் குனிந்துகொண்டே வேலை செய்தாராதலின், சிறுவர்களிற் பெரும்பான்மையோர் முதுகு கூனி சுவாசாசயந் திடமாய் வளராமல் வியாதிக்குட்பட்டார்களாம். சுரங்கங்கள் நில மட்டத்துக்கு மிகத்தாழ்ந்திருந்தமையால் நீர் பெருகி மண்ணுடன் கலந்து தரை சேறாகுமாதலால் சிறுவர்கள் சேற்றிலேயே பன்னிரண்டு மணிநேரமுஞ் சஞ்சரிக்கும்படி நேரிட்டதாம். ஆகையால் தேகவலிமை மிகுந்தவர்களும் சீக்கிரத்தில் காசம், முடக்குவாயு முதலிய வியாதியி லடிபட்டு வெகுவாய் இறந்தனர்களாம். இவ்வாதாரங்களைக்கொண்டு 1842-ஆம் வருஷத்தில் பார்லிமெண்ட் ஸபையில் ஓர் மசோதாவைப் பிரேரேபித்துக் கல்லும் கரையுமாறு ஓர் உபந்நியாஸஞ் செய்தார். அதைக் கேட்டவர்களெல்லாம் மிகவும் மனநொந்து, தாங்கள் இதுகாறும் ஒருவித சீர்திருத்தமுஞ் செய்யவில்லையே யெனத்துக்கித்து, ஷாப்ட்ஸ்பரி பிரபுவின் மசோதாவை அங்கீகரித்தனர். அச்சட்டத்தின் முக்கிய நோக்கம் ஸ்திரீகளையும் பத்து வயதுக்குட்பட்ட சிறுவர்களையுஞ் சுரங்கங்களில் வேலையிலமர்த்தக் கூடாதென்பதே; 1843 ஆம் வருஷத்தில் இம்மசோதா அங்கீகரிக்கப்பட்டுச்சட்டமாயிற்று. 1847 ஆம் வருஷம் யந்திரசாலைகளில் ஒருவரையும் தினம் பத்து மணிநேரத்துக்குமேல் வேலைசெய்யக் கட்டாயப்படுத்தக்கூடாதென்ற வேறோர் சட்டமும் நிறைவேறியது. 1861-ஆம் வருஷம், வேறொரு கமிட்டியாரைப் பார்லிமெண்டார் நியமிக்கும்படிசெய்து அவர்களது

ரிபோர்ட்டை ஆதாரமாகக்கொண்டு வேலைசெய்யுஞ் சிறுவர்களுக்கு வேறு சில நன்மைகளுங் கிடைக்குமாறு செய்தார். 1878-ஆம் வருஷத்தில், இது சம்பந்தமாக வேறொரு சட்டத்தையும் பார்லிமெண்டார் ஒப்புக்கொண்டதனால், தொழில் செய்யும் சிறுவர்களது கஷ்டங்களெல்லாம் வெகுவாய் ஒழிந்தனவென்றே சொல்லலாம். அக்காலத்தில் ஷாப்ட்ஸ்பரி பிரபு அடைந்த ஆநந்தம் இவ்வளவெனச்சொல்ல முடியாது.

அறத்தான் வருவதே யின்ப மற் றெல்லாம்
புறத்த புகழு மில—குறள்.

IV இந்தியதேசஸம்பந்தம்.

ஷாப்ட்ஸ்பரி பிரபு 'இந்தியா போர்ட் ஆப் கண்ட்ரோல்' ஸபையில் கமிஷனர் உத்தியோகத்தை, இரண்டு வருஷகாலம் வகித்தனர் என்று முன்னமேயே சொல்லியிருக்கிறோம். அக்காலத்தில் இந்தியா தேசத்தில் பயிர்த்தொழில் செவ்வையாய் நடைபெறுமாறு சில பிரயத்தனங்கள் செய்தார். கிறிஸ்தவ மதத்தில் உண்மையான பக்தி நிறைந்தவராதலின் இந்தியாவில் தம் மதம் பரவவேண்டுமென்னும் அவா இவருக்கு மிகுதி. மதபோதகர்கள் இத்தேசத்துக்கு வருங்காலத்தி லெல்லாம் அவர்களுக்கு மிக்க உதவிசெய்து வந்தார்.

1843-ஆம் வருஷத்தில், வேறொரு விஷயத்திலும் இவர் தமக்கு இந்தியாவிலுள்ள சிரத்தையை வெளிப்படுத்தினார். பதினெட்டாவது நூற்றாண்டின் இறுதியில், ஈஸ்ட் இந்தியா கம்பெனியார் நம்தேசத்தின் மிகுதியான பாகத்தை ஆண்டு வந்தார்கள். அக்காலத்தில்

கம்பெனி அதிகாரிகள் சொந்தத்திலுங்கூட வியாபாரஞ் செய்து விசேஷ திரவியம் சம்பாதிக்கலானார்கள். மத்திய இந்தியாவிலும் வேறு சில இடங்களிலுங் கஞ்சாச் செடியைச் சாகுபடிசெய்து, இலையைப் பதஞ் செய்து டச்சு வியாபாரிகளுக்கும் மற்றவர்களுக்கும் விற்று அதிக லாபத்தை அடைந்தார்கள். கம்பெனியார்கள் இதைக் கேள்வியுற்று இனி உத்தியோகஸ்தர்கள் சொந்தத்தில் கஞ்சாவைச் சாகுபடி செய்யக்கூடாதென்று உத்தரவுசெய்து, தாங்களே அவ்வியாபாரத்தைக் கைக்கொண்டார்கள். இதனால் அவர்களுக்கு வருஷத்தில் இருபது லக்ஷரூபாய்க்குமேல் அதிக லாபம் கிடைத்து வந்தது. கஞ்சாச்சரக்கு விசேஷமாய் விலைபோன தேசம் சீனதேசம். அத்தேசத்தவர்களில்பெரும்பாலார் கஞ்சாவைத்தின்று தேகவலிமையும் மனவலிமையுங் குறைந்து தத்தம் தொழில்களைச் சரிவர நடத்துவதற்குச் சக்தியற்றவர்களானார்கள். இதைப்பார்த்த சீன கவர்ன்மெண்டார், கஞ்சாச்சரக்கு தந்தேசத்தில் இறக்குமதியாகாவண்ணம் பிரயத்தனங்கள் செய்யலானார்கள். என்ன செய்தும் அச்சரக்கு வியாபாரம் குறையவேயில்லை. தாழ்ந்த ஜனங்களே யல்லாமல் வரவர அதிகாரிகளும் தனிகர்களும் கூடக் கஞ்சா தின்னுங் கெட்டவாடிக்கையை அனுசரிக்கலானார்கள். சீனசக்கரவர்த்தி மிகத் துக்கித்து எவ்விதத்தினாலாவது இவ்வியாபாரத்தை அடியோடு நிறுத்திவிடவேண்டுமென நிச்சயஞ் செய்து, 1840 ஆம் வருஷம் கான்டன் துறைமுகத்தில் இருபதினாயிரங் கஞ்சாப் பெட்டிகள் அடங்கிய ஓர் ஆங்கிலேயக்கப்பல் வந்திருப்பதாகக் கேள்வியுற்றுத் தம் அதிகாரிகளைத் துறைமுகத்துக்கு

அனுப்பி அப்பெட்டிகள் யாவற்றையுஞ் சமுத்திரத்தில் விழுத்தும்படி செய்தார். உடனே இங்கிலீஷ்காரர்களுக்குஞ் சீனதேசத்தவர்களுக்கும் சண்டையேற்பட்டது. கடைசியில் சீனதேசத்தவர் தோல்வியடைந்து 1842 ஆம் வருஷத்தில், சமாதானம் செய்துகொண்டார்கள். உடன்படிக்கைப் பிரகாரம் ஹாங்காங் தீவு ஆங்கிலேயர் வசமானது. ஆங்கிலேயர் யாதொரு நிபந்தனையுமின்றி வியாபாரச் சரக்குகளைச் சீனதேசத்தில் ஐந்து துறைமுகப்பட்டணங்களில் இறக்குமதி செய்யலாமென அனுமதியும் பெற்றனர். சமுத்திரத்தில் மூழ்கிப்போன கஞ்சாப் பெட்டிகளுக்காக 60 லக்ஷம் ரூபாய்க்குமேல் ஈடுகொடுப்பதாகவும் சீன கவர்ன்மெண்டார் ஒப்புக்கொண்டார்கள். ஆகவே அக்கவர்ன்மெண்டாருடைய விருப்பம் சிறிதேனும் நிறைவேறவில்லை. முன்போலவே கஞ்சா வியாபாரம் தடையில்லாமல் நடந்துகொண்டே வந்தது.

ஆயினும் இம்மாதிரி சீனராஜாங்கத்தாரது இஷ்டமில்லாமல் அவர்கள் தேசத்தில் வியாபாரஞ் செய்து இக்கெட்ட சரக்கை வாங்கி உண்டு, இகத்துக்கும் பரத்துக்கும் யாதொருவித உபயோகமுமாகாதவராகும்படி ஆயிரக்கணக்கான ஜனங்களைச் செய்தல் அதர்மமென்றும், தங்கள் மதத்துக்கு நேர்விரோதமான ஒழுக்கமென்றும், பல அதிகாரிகளும், பிரபுக்களும் அபிப்பிராயப்பட்டார்கள். அவர்களுள் நம் ஷாப்ட்ஸ்பரி பிரபுவும் ஒருவர். "நன்மை செய்யின் அன்றே செய்க" என்ற உண்மையைக் கடைபிடித்து ஒழுகுபவராதலின் உடனே இவ்வியாபாரத்தை முற்றிலும் நீக்கவேண்டுமென்ற எண்ணங்கொண்டவராய் 1843 ஆம் வருஷம் ஏப்ரல்

மாதம் 4ஆம் தேதி, பார்லிமெண்ட் ஸபையில் ஓர் தீர்மானத்தைப் பிரேரேபித்தார். அதன்கருத்து, பிரிட்டிஷ் இந்தியாவில் ஈஸ்ட்இந்தியா கம்பெனியார் கஞ்சா சாகுபடி செய்து சீனதேசத்துக்கு அனுப்புவது கிறிஸ்தவமதத்தை அனுசரித்து வரும் ஓர் கவர்ன்மெண்டாருடைய கடமைக்கும் கௌரவத்துக்கும் தாழ்மையானது. ஆகையால் சீக்கிரத்தில் இவ்வியாபாரத்தை நிறுத்துவதற்குத் தக்க ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்பதே. சீனதேசத்திலிருந்த கிறிஸ்தவப் பாதிரிமார்கள் சங்கங்களைக்கொண்டு இவ்விஷயத்தைக் குறித்துப் பார்லிமெண்டார்களுக்கு ஓர் விண்ணப்பமும் அனுப்புவித்தார். தாமும் மிகப்பரிவோடு கல்லுங் கரையுமாறு சபையிற் பேசினர். "ஈஸ்ட்இந்தியா கம்பெனியார், நியாயமல்லாத இவ்வியாபாரத்தைச் செய்யும்படி பார்லிமெண்டார் இடங்கொடுப்பது நன்றல்ல. ஏதோ விசேஷ லாபம்வருகிறதே யென்ற காரணத்தைக்கொண்டு அதர்மமான ஓர் காரியத்தைச் செய்ய அனுமதி கொடுக்கலாமா! பிரிட்டிஷ் கொடி பறக்குமிடங்களிலெல்லாம் ஜனங்கள் சுதந்தரத்துக்கு யாதொருவிதமான கேடும் இருக்கக்கூடாது என்ற உயர்ந்த நோக்கத்தைக் கொண்டு அடிமை வியாபாரத்தை ஒழித்த இப்பார்லிமெண்ட் ஸபைக்கு அதனினுங் கொடிய இவ்வியாபாரத்துக்கு அனுமதி கொடுத்தல் அழகோ! அடிமைகளின் தேகம் மாத்திரமன்றோ யஜமானன் கைவசமானது! பாழாகிய இந்தக் கஞ்சாவோ அதைத் தின்பவரது தேகத்தைமாத்திரமன்றி மனத்தையுமல்லவோ அடிமையாக்குகிறது! தேகவலிமையுங் மனஉறுதியும் நீங்கியபின் ஒருவனுக்கு சுவாதந்தரியம் என்பது எங்கே? இதுவரைக்குமே கணக்

இல்லாத ஜனங்கள் கொடிய இந்தப் பழக்கத்துக்குட்பட்டு நாசமானார்கள். இனிமேலாவது இப்பாவத்துக்கு நாம் ஆளாகாமலிருப்போம்" என்றார். அப்போது பிரதான மந்திரியான ஸர் ராபர்ட்பீல், இவர் சொல்வதை ஒப்புக்கொண்டு, தாம் சீனகவர்ன்மெண்டாரோடு இவ்விஷயத்தில் ஆலோசித்துக்கொண்டிருப்பதாயும், சீக்கிரத்தில் தக்க ஏற்பாடுகள் செய்வதாயுஞ் சொல்லி, பிரேரேபணையைத் திரும்பப் பெற்றுக்கொள்ளும்படி ஷாப்ட்ஸ்பரி பிரபுவை வேண்ட அவரும் அவ்வாறே செய்தார். ஆயினுங் கஞ்சாவியாபாரம் மாத்திரம் நிற்கவில்லை. சமீபகாலத்தில்தான் இந்தியா ஸெகிரிடரியான லார்ட் மார்லி என்பவரால் இது அடியோடு ஒழிக்கப்பட்டது.

1861-ஆம் வருஷத்தில், இந்தியாவின் வடமேற்குப் பாகங்களில் ஓர் கடுமையான பஞ்சம் ஏற்பட்டு லட்சக்கணக்கான ஜனங்கள் வருந்தினார்கள். அவர்களது கஷ்ட நிவாரணத்துக்காக ஆங்கில தேசத்தார்கள் ஒரு கோடி ரூபாய்க்குமேல் சந்தா வசூல் செய்து நம் தேசத்துக்கு அனுப்பினார்கள். ஆயினும் இந்தியா தேசத்தில் பஞ்சம் வருவானேன்? பஞ்சம் நேரிடாவண்ணம் செய்வதற்கு என்ன என்ன வசதிகளை இந்தியா தேசத்தவர்களுக்குச் செய்து தரவேண்டுமென்று அவர்களுள் ஒருவரேனும் ஆலோசிக்கவில்லை. நம் பிரபு மாத்திரம் அவ்வாறு அசிரத்தையாயிராமல் இந்தியா கவர்ன்மெண்டு அதிகாரிகளுடன் கடிதப்போக்கு வரவு செய்து பஞ்சத்துக்கு உண்மையான காரணம் யாதெனத் தெரிந்துகொண்டார். பிறகு அந்த வருஷம் ஜூலை மாதம் 5-ஆம் தேதி யன்று பார்லிமெண்ட் ஸபையில் ஓர் பிரேரேபணையைக் கொணர்ந்தார். தாம்,

இந்தியா தேசத்தில் ஜனங்கள் பஞ்சத்தால் அடிபட்டு வருந்துவதைக் கேள்வி யுற்று மிகவும் வருந்தியதாகவும், அடிக்கடி அத்தேசத்தில் பஞ்சம் நேரிடுவானேன்? என்று விசாரித்ததாகவும் மழை யில்லாமையாலோ நீர்ப்பாய்ச்சல் வசதிகள் சரியாக இல்லாமையாலோ வியவசாயிகள் தங்கள் புலங்களைச் சாகுபடி செய்ய முடியாமற் போய்த் தானியவிளைவு குறைந்துபோகுங் காரணத்தாலேயே பஞ்சம் உண்டாவதென்று தாம் தெளிவாய்த் தெரிந்துகொண்டதாகவும், பூர்வகாலத்தில் இந்திய மன்னர்கள் செய்து வந்த விதமே ஆங்கில கவர்ன்மெண்டாரும், ஆறுகளையும் வாய்க்கால்களையும் ஏரிகளையும் குளங்களையுஞ் செம்மைப்படுத்தித் திருத்துவது மல்லாமல் அவசியமான இடங்களில் மேற்சொன்ன வசதிகளை ஏற்படுத்த வேண்டுமென்றும் வெகு நேரம் வற்புறுத்திப் பேசினார். அக்காலத்தில் இந்திய தேசத்தைப்பற்றித் தெரிந்து கொண்டவர் பார்லிமெண்ட் சபையில் வெகு சிலரே. ஆதலின் ஷாப்ட்ஸ்பரி பிரபுவின் பிரேரேபணை அங்கீகரிக்கப்படவில்லை. ஆயினும் இந்திய தேசத்தில் முக்கிய கைத்தொழில் வியவசாயமே; அத்தொழிலுக்கு இன்றியமையாததான நீர்ப்பாசனத்துக்கு வேண்டிய சௌகர்யங்களைச் செய்து கொடுக்கக் கவர்ன்மெண்டார் கடமைப் பட்டுள்ளார் என்ற உண்மையை முதன் முதல் பார்லிமெண்டாருக்குச் செவ்வனே விளங்கச் செய்தவர் நம் பிரபுவே.

V. லண்டன் நகரும், திக்கற்ற பிள்ளைப் பள்ளிகளும்.

மன்னுயிரைத் தன்னுயிர்போல் பாவிக்கும் ஷாப்ட்ஸ்பரி பிரபுவுக்கு மேன்மேலும் ஜனசமூகத்தின் க்ஷேமத்தை விருத்தி செய்வதிலேயே விருப்பம் மிகுந்து வந்தது. 'ஈசன் எனக்கு அளித்திருக்கும் பதவிக்கும் கௌரவத்துக்கும் நன்றியறிதலை நான் எவ்வாறு காண்பிப்பது? எளியவர்களும் பேதையர்களுஞ் செம்மையாய் வாழ்நாள் கழிக்கும்படி செய்தாலல்லவோ!' என அடிக்கடி தமக்குள்ளே சொல்லிக்கொள்வர். இவ்வாறு பரோபகார சம்பந்தமான எண்ணங்களே இவர் மனத்தில் எப்பொழுதும் குடிகொண்டிருந்தன.

லண்டன் மாநகர் எப்பொழுதும்போல இவர் காலத்திலும் செல்வம்நிறைந்து, தக்கோர் மிகுந்து, நவநாகரிகங்கள் செழித்து உன்னத ஸ்திதியிலிருந்தது. ஆயினும் எப்பொழுதும் போலவே இந்நகரில் தான் ஏனைய நகரங்களில் இருப்பதை விட அதிகக் கொடிய வறுமையுங் குடியும் சூதும் வாதும் குடிகொண்டிருந்தன. கணக்கிடவரிய ஏராளமான செல்வம் படைத்தோர்கள், மணிக்கு ஓர்வித நூதன ஆடைகளை உடுத்து, முகூர்த்தத்துக்கு ஓர்வித நூதன சிற்றுண்டிகளை யுண்டு, நடனசாலைகளுக்குங் கூத்தாடுமிடங்களுக்குஞ் சென்று ஆங்குள்ள காட்சிகளைக் கண்டு களித்தும், தங்களது கிருகத்திலேயே அப்பொழுதைக்கப்பொழுது தம்போலிய தனிகர்களை யழைத்து ஏராளமான செலவு செய்து விருந்தளித்தும், 'தேவேந்திரபோகம்' எனச் சொல்லுமாறு பற்பல சுகங்களையு மனுபவித்து இந்நகரின் ஓர் பக்கத்தில் வசித்துவர, மற்றொரு பக்கத்தில் பதினாயி

ரக்ஷணக்கான பேதையர்கள் நாளுக்கு ஒருவேளைகூட வயிறு நிரம்பப் புசிக்க உணவில்லாமலும், குளிர் தாங்குப்படி உடுக்க உடையில்லாமலும், இரவில் படுத்துறங்க இடமில்லாமலும், இரவுபகல் முழுதும் தெருத்தெருவாயலைந்து, செய்வதற்கு வேலையும் அகப்படாமல் களைத்துத் தள்ளாடி, தனிகர்கள் களிப்புடன் விருந்துண்பதைச் சுவர்களது சாளரங்களின் வழியாய்ப்பார்த்துத்திகைத்து நிற்பர். உலகில், உண்ணவுணவும் உடுக்கவுடையு மில்லாமையாலன்றோ களவும் பொய்யும் மிகுதியாக விளைகின்றன! அவ்வாறே இப்பேதையர்களில் அநேகர் பாலிய முதல் தீச்செயல்களிற் பயின்று தீய ஒழுக்கங்களிற் பிரவேசித்தனர். பாரம்பரையாய் இவ்வறியோர்கள் அக்கிரம மார்க்கங்களை அனுஷ்டித்து வந்தனராதலால் இவர்களுக்கு இது நன்று இது நன்றன்று என்ற ஞானங்கூட வில்லாமற் போயிற்று. தீதெனத்தெரிந்து தீச்செயல் செய்பவனை ஒருவாறு கரையேற்றல் ஸாத்தியம். தீமை யின்னதென்றே யறியாத மூடரை தீயவழக்கத்தினின்று திருப்புதல் அஸாத்தியமன்றோ! இவ்வுண்மையைச் செவ்வனே யறிந்த நம் ஷாப்ட்ஸ்பரி பிரபு வறியோர்களின் சிறுவர்களுக்கு நல்லறிவு ஊட்டுவதே ஒவ்வொரு தேசோபகாரியின் முதன்மையான கடமை யாகுமெனத் துணிந்தார்.

லண்டன் நகரில் வெஸ்ட்மின்ஸ்டர் என்ற பாகத்தில் எளியோர்கள் மிகுதியும் வசித்து வந்த 'நீயூபை' தெருவில், வாகர் என்ற ஓர் பாதிரியார், குதிரைலாயத்துக்கென்று கட்டப்பட்ட ஓரிடத்தைக் குடிக்கூலிக்கு வாங்கி அதில் எளியவர்களின் சிறுவர்களுக்காக ஓர் பள்ளிக்கூடத்தை 1839-ஆம் வருஷம் ஏப்ரல் மாதம் 14-

ஆம் தேதியில் ஸ்தாபித்தார். இதற்குமுன் இம்மாதிரிக் கல்விச்சாலை லண்டனில் ஏற்படவேயில்லை. வைத்த நான்கு தினங்களுக்குள்ளேயே நூற்றைம்பது பிள்ளைகள் கூடினார்கள். ஆறுமாதத்தில் இன்னும் நூற்றைம்பது சிறுவர்களுஞ் சிறுமிகளுஞ் சேர்ந்தார்கள். லேடிட்ரோபிரிட்ஜ் என்ற சீமாட்டி இப்பள்ளிக்கூடத்திலுள்ள சிறுமிகளைத் தனியே பிரித்து அவர்களுக்கென்று பிரத்யேகமாய் ஓர் இடத்தையுங் குடிக்கூலிக்குவாங்கி ஓர் உபாத்தியாயஸ்திரீயையும் நியமித்தாள். இவ்விரு பள்ளிக்கூடங்களும் நாளடைவில் விருத்தியாகவே, இருந்தவிடம் போதாமல் விசாலமான வேறோர் கட்டடத்துக்கு மாற்றப்பட்டன. இந்த நல்ல சமயத்தில் அங்கு விஜயஞ்செய்து ஜனங்களுக்கு உற்சாகத்தை உண்டுபண்ணி, அவர்களுக்குப் படிப்பில் சிரத்தை வருமாறு நற்போதனை செய்தவர்களுள் ஒருவர் ஷாப்ட்ஸ்பரி பிரபு. இப்பாடசாலைகளின் பொருட்டுத் தாமே விசேஷ நன்கொடைகொடுத்துதவியதுமல்லாமல் தமது சிநேகிதர்களிடத்திலிருந்துந் திரவியம் வசூல் செய்துகொடுத்தார்.

ஆயினும் சுவயமாகவே சில பாடசாலைகளை ஏற்படுத்தி, வித்தியாதானம் செய்யவேணுமென்ற ஆசை இவருக்கு மிகுதியாக உண்டு. ஆனால் அதற்குத்தகுந்த அவகாசமும் ஸௌகரியங்களும் ஏற்படவில்லை; இவ்வாறிருக்க, ஒரு நாள் டைம்ஸ் பத்திரிகையில் ஏழைப்பிள்ளைகள் சம்பந்தமான ஓர் பிரசுரத்தை வாசித்தார். லண்டன் நகரில் 'பீல்ட்லேன்' என்ற பெயருள்ள பாகத்தில் ஏழைகளுக்குப் பாடசாலைகள் தேவையென்றும் அவைகள் நடைபெறுமாறு கனதனவான்கள் பொருளுதவி புரியவேண்டுமெனவும் சொல்லியிருந்தது. இதை

ப்பார்த்தவுடனே ஷாப்ட்ஸ்பரி பிரபு மிக ஆனந்த மடைந்தவராய் தாம் ஈசனை வெகு நாளாய்ப் பிரார்த்தித்து வந்ததற்குப் பலனாகவே இம்மாதிரி பிரசுரம் வெளியானதெனத் தெளிந்து, இந்நற்காரியத்தில் பூரணமாய் உதவிபுரியவேண்டு மெனவும் நிச்சயித்துப் பத்திரிகையில் பிரசுரஞ் செய்தவர்களுக்கு அவர்கள் தம்மைவந்து பார்க்கும்படி கடிதம் எழுதினார். அவர்களும் அவ்வாறே வர், சீக்கிரத்தில் ஓர் வித்தியா சாலையை ஸ்தாபித்தார். அடிக்கடி இவர் இப்பள்ளிக் கூடத்துக்குச் சென்று பிள்ளைகளோடு பரிவுடன் கலந்துபேசி இவர்களுள்ளத்தில் தெய்வ பக்தியும் 'அறத்தினிலார்வமும் அல்லதில் வெறுப்பும்' பதியுமாறு செய்தார்.

இத்தகைய கல்விச் சாலைகளின் நன்மையைப் பொது ஜனங்கள் உணரவே, மேன் மேலும் இன்னும் அநேகபள்ளிக் கூடங்கள், அங்கங்கே ஸ்தாபிக்கப் பெற்றன. இவைகளின் நோக்கம் ஒன்றே யாதலின் இச் சாலைகளை நடத்துவோர்களும் அவைகளில் அமர்ந்துள்ள உபாத்தியாயர்களும் அடிக்கடி சந்தித்துத் தங்கள் தங்கள் அனுபவங்களை ஒருவருக்கொருவர்சொல்லி மேன்மேலும் பிள்ளைகளை விருத்திக்குக் கொண்டுவரக் கூடிய முயற்சிகளைப் பற்றி யாலோசித்தல் முக்கியமெனக்கருதி 'திக்கற்றபிள்ளைப் பள்ளிகள் சங்க' மென ஓர்சங்கத்தைச் சில பெரியோர்கள் ஸ்தாபித்தார்கள். இச்சங்கத்துக்கு அக்கிராசனாதிபதியாய் நமது ஷாப்ட்ஸ்பரி பிரபு பத்துவருஷ காலம் இருந்து வேலை செய்து வந்தார். சமயம் வாய்ந்த போதெல்லாம் பொதுஜன ஸபைகளில் ஏழைப் பிள்ளைகளின் கொடுந் துயரங்களைப் பற்றிக் கேட்பவர் மனமுருகப் பேசி, அவர்களிடமிருந்து திர

விய உதவிபெற்று அத்திரவியத்தையெல்லாம் சிறுவர்களுக்கு ஆடை வாங்குவதிலும் வேறு ஸௌகரியங்கள் அளிப்பதிலுஞ் செலவு செய்துவந்தார். இவரது மாளிகையில் எப்பொழுதும் ஏழைப் பிள்ளைகள் வந்தவண்ணமாகவே இருப்பார்கள். தமக்கு வேறு எந்த வேலையிருப்பினும் அதை மதியாது இப்பிள்ளைகள் சொல்வதை நிதானமாய்க் கேட்டுத் தக்க பரிகாரஞ் செய்து அப்பிள்ளைகள் மனப்பூர்வமாய் அன்பு மிகுந்து 'இப்பெரியவர் உள்ள நாளில் நமக்கோர் குறையும் வரா' தென எண்ணி வீடுபோய்ச் சேரும் வண்ணம் உதவி புரிவார். இவரது பேரன்புக்குமோர் எல்லையுண்டோ ?

அன்பிலா ரெல்லாந் தமக்குரிய ரன்புடையா
ரென்பு முரியர் பிறர்க்கு.

VI திக்கற்ற பள்ளிப்பிள்ளைகள்.

திக்கற்றபிள்ளைப் பள்ளிகளின் தொகை மேன்மேலும் விருத்தியாகிக்கொண்டே வந்தது; தனவந்தர்கள் திரவிய உதவிபுரிந்தார்கள். ஏழைப் பிள்ளைகளும் அப்பள்ளிக் கூடங்களில்வந்து சேர்ந்து கல்விகற்றார்கள். ஆயினும் அவர்களின் நிலைமையைச் செம்மைப்படுத்த வேறு சௌகரியங்களும் வேண்டியிருந்தன. கௌரவமாயும் தம் மதிப்புக்குன்றாமலும் ஜீவனத்தைத்தேடிக்கொள்ளுமாறு வசதிகள் ஏற்படுத்தினாலன்றி அப்பள்ளிப் பிள்ளைகளுக்கு ஊட்டிய கல்வி பயனற்றதாம் என நம் பிரபு கண்டுகொண்டார். 'பசியே பற்பல பாவச்செயல்களுக்குந் தூண்டுகோலன்றோ! ஆதலின் அவர்களுக்கு ஏற்ற ஜீவனோபாயவழியைப்பற்றி நம்பிரபு விசாரிக்கலானார்.

அக்காலத்தில் வெகு ஜனங்கள் இங்கிலாந்திலிருந்து வெளியேபோய் வட அமெரிக்காவிலும் ஆஸ்திரேலியாவிலுங் குடியேறிக் காடுகளை அழித்து, நிலத்தைப்பண்படுத்திக் கோதுமை முதலிய தானியங்களை விளைவித்துச் சுகமாகக் காலங்கழித்தது மன்றி, சீக்கிரத்தில் மிக்க திரவியத்தையும் சம்பாதிக்கலானார்கள். அதைப்பார்த்துத் திரளான ஜனங்கள் பிரதிவருஷமும் அப்பிராந்தங்களைச் சேர்ந்து குடியேறினார்கள். தம்மிடத்துள்ள திக்கற்றபிள்ளைகளிற் சிலரையும் அவ்வாறே அனுப்புவது நன்றென ஷாப்ட்ஸ்பரி பிரபு தெளிந்தார். அதுமுடிவுபெறுவதற்குங் கொஞ்சம்திரவியம்வேண்டியிருந்தது. பிரயாணச்செலவுக்குங் குடியேற்ற நாட்டில் வந்து இறங்கியவுடன் சிலநாட்களுக்குக் காலக்ஷேபஞ் செய்வதற்கும் ஒவ்வொருவரிடத்துங் கொஞ்சம்போதுமான பணமிருத்தல் வெகுமுக்கியம். மேற்கூறியபிள்ளைகளுக்கு அப்பணத்தை யார்கொடுத்து உதவுவார்? கவர்ண்மெண்டாரே அது விஷயத்தில் சிரத்தை யெடுத்துக் கொள்ளவேண்டுமென ஷாப்ட்ஸ்பரிபிரபு தீர்மானித்தார்.

1848-ஆம் வருஷம் ஜூன் மாதம் 6-ஆம் தேதி நம் பிரபு பார்லிமெண்ட் ஸபையில் ஓர் முக்கிய தீர்மானத்தைப் பிரேரேபித்தார். அதன் முக்கிய அம்சம் யாதெனில், பிரதி வருஷமுங் கவர்ன்மெண்டார் லண்டனிலும் அதைச்சுற்றியுமுள்ள பேதைப்பள்ளிகளிலுள்ள சிறுவர்களில் சுமார் ஆயிரம்பேர்களைத் தென் ஆஸ்திரேலியாநாட்டில்குடியேறச்செய்வித்து, அவர்கள் அங்கே கௌரவமாக வுழைத்துக் காலக்ஷேபஞ் செய்வதற்குத்தகுந்த உபாயத்தைத் தேடவேண்டுமென்பதே. அந்தப் பிரேரேபணையைப்பற்றிப் பேசுங்கால்,

லண்டனில் அக்காலத்தில் திக்கற்ற பிள்ளைகள் என்று சொல்லக்கூடியவர்கள் சுமார் முப்பதினாயிரம் பேர்கள் உளர் என்றும், அவர்களிற் பெரும்பான்மையோருந் தீச்செயல்கள் செய்தே காலத்தைக் கழிப்பவர்கள் என்றும், சுபாவமாகவே அநேகருக்கு அவ்வாறு நடப்பதில் அருவருப்பு உண்டென்றும், சரியான தொழில் துறைகளை ஏற்படுத்தித் தந்தால் அவர்கள் யோக்கியர்களாகவே யிருந்து ஒழுகுவார்களென்றும் வற்புறுத்தினர். அங்கத்தினர்கள் அப்பிரேரேபணையை ஆதரிக்க அது நிறைவேறிற்று. பிரதி வருஷமும் கவர்ன்மெண்டார் திக்கற்றபிள்ளைகளைக் குடியேற்ற நாடுகளுக்கு அனுப்பும் விஷயமாக ஆயிரத்தைந்நூறு பவுன்பணஞ்செலவுசெய்ய ஒப்புக்கொண்டனர். ஷாப்ட்ஸ்பரிபிரபு தம் சிநேகிதர்கள் சிலரிடமிருந்து பணம் வசூல் செய்து அதைக்கொண்டு பிரதிவருஷமும் நூற்றுக்கணக்கான சிறுவர்களை ஆஸ்திரேலியா தேசத்துக்கு அனுப்பினர்.

1849-ஆம் வருஷத்தில் ஆஸ்திரேலியாவுக்கு அனுப்பப்பட்ட காரோலின் வாக்கர் என்னும் சிறுமி தன் எஜமானனிடம் வெகு அடக்கத்துடனும் ஒழுக்கத்துடனும் நடந்து கொண்ட காரணம் பற்றி, எஜமானன் அவளிடத்து விசேஷ நன்கு மதிப்பெய்தி, அவளைத் தன்குமாரனுக்கு மணம் புரிவித்தான். ஷாப்ட்ஸ்பரி தனக்குச் செய்த பேருபகாரத்திற்காக அவரைப் போற்றி இம்மாது எழுதின கடிதத்தை அவர் தாம் உயிருடனிருக்கும் வரையில் தமக்குப் பக்கத்திலேயே வைத்துக்கொண்டிருந்தார்.

பேதைப் பிள்ளைகள் மாத்திரமன்றிப் பாலியம் முதல் குடி, களவு, முதலிய தீச்செயல்களைச் செய்து பாபத்தில் அழுந்தினவர்களான வயது வந்தவர்களில் அநேகரும் நம் பிரபுவின் முயற்சியால் கானடா முதலிய பிற தேசங்களுக்கு அனுப்பப்பட்டு, அங்கே தங்கள் குரூரவழிகளையெல்லாம் நீத்து நன்னடக்கை படிந்தவர்களாய் க்ஷேமம் அடைந்தனர்.

VII குடிக்கூலி விடுதிகள் சட்டம்.

இக்காலத்தில் லண்டன் நகரில் எளியவர்கள் பட்ட கஷ்டம் மிக அதிகமென முன்னமே குறிப்பித்துள்ளோம். கைத்தொழில்கள் மேன்மேலும் விருத்தியாக, அத்தொழில்களை நாடி ஜீவனஞ்செய்யுமாறு பக்கத்துக் கிராமங்களினின்றுஞ் சிறு பட்டணங்களினின்றுந் திரளான ஜனங்கள் லண்டனில் வந்து கூடினார்கள். இக் கூட்டம் நாளுக்குநாள் மிகுந்துகொண்டே வந்தது. ஆனால் இவர்களுக்குக் குடித்தன வசதிக்குத் தகுந்தவாறு விடுதிகள் மிகுதியும் ஏற்படவில்லை. இதுகாரணம்பற்றி ஜனநெருக்கம் வர வர அதிகரித்துக்கொண்டே வந்தது. மிகச் சிறுவீடுகளிலுங் கூட அநேக ஜனங்கள் ஒருங்கே கூடிவசிக்க நேர்ந்தது. குடிக்கூலியும் மிகுந்தது. இதற்குஆசைப்பட்டு நிலச்சுவாதீனதார்கள் அங்கங்கே காலிஸ்தலங்களில் சிறிதேனுங் காற்றாவது வெளிச்சமாவது புகாவண்ணம் நெருக்கி வரிசை வரிசையாக அறைகளைக் கட்டி, சுத்தஜலம் கிடைப்பதற்கும் அசுத்த ஜலம் உள்ளே தங்காது வெளியே போவதற்கும் வழிகள் சரியாய் ஏற்படுத்தாமல் மிக்க

அநியாயஞ் செய்துவந்தனர். வீடுகள் அறைகள் அடுக்கடுக்காய்க் கட்டப்பட்ட ஐந்து அல்லது ஆறு மாடிகள் உள்ளனவாயிருந்ததனால் தரைமட்டத்திலும் அதற்குச் சற்று உயர்ந்துள்ள மாடிகளிலும் உள்ள அறைகள்மிக இருளடைந்தனவாய் வெளிச்சமில்லாமல் இருந்தன. நாற்புறங்களிலும் இவ்விதமாகக் கிருகங்கள் ஏற்பட்டதனால் காற்றில்லாமையின் கஷ்டம் மிகவும் அதிகமாயிற்று. வீதிகள் என்றாலோ, அவைகள் மிகக்குறுகியவைகள். ஒரு மனிதன் தன் இரு கரங்களையுந் தாராளமாய் விரிக்கக்கூட முடியாதவைகளாயிருந்தன. ஆதலின் இவ்வீதிகளில் சூரியவெளிச்சம் படுவது மிக அரிது. அதனால் வீதிகளும் அசுத்தமாய்த் துர்நாற்றம் வீசிக்கொண்டிருந்தன.

ஜன நெருக்கமோ மேன்மேலும் விடாமல் அதிகரித்துக் கொண்டே வந்தது. மேற்குறித்த வீடுகள் ஒவ்வொன்றிலும் 1841ஆம் வருஷத்தில் சராசரி 24 ஜனங்கள் குடியிருந்தனர். 1847ஆம் வருஷத்திலோ அத்தொகை 40க்கு ஏறியது. அதுவுமன்றி வீட்டுக்குரியவர்கள் அடிக்கடி பழுது பார்ப்பதுமில்லை. சூரிய வெளிச்சமும் பூஜ்யம்; சுத்தமான காற்று மருந்துக்கும் இல்லை. எங்கே பார்த்தாலும் இருள் மூடியிருந்தது. அறைகள் ஆறு அல்லது ஏழு அடிக்குமேல் உயரமில்லை. தரை அசுத்தம் மிகுந்து நீர்கசிந்து ஈரமாயிருக்கும். சுவர்களும் மேல்தளமும் சுண்ணாம்புப் பூச்சு அடியோடு உதிர்ந்துபோய், புகைபடிந்து கறுப்பாய்த் தோன்றும். மேலும் அங்கே அசுத்தமான புழுக்கள் உண்டாய் எப்பொழுதும் தரையில் விழுந்துகொண்டேயிருக்கும். வீட்டிலிருந்து வெளியில் எறி

யப்பட்ட அசுத்தபதார்த்தங்கள் தெருவிலேயே கிடக்கும். ஒவ்வொரு வீட்டுவாயிலுக்குப் பக்கத்திலும் சாக்கடை ஜலம் நிறைந்த ஓர் குழி உண்டு. சுத்த ஜல வசதியோ, ஐம்பது அல்லது அறுபது ஜனங்களுக்கு ஓர் நீர்க்குழாய்வீதம் ஏற்பட்டுள்ளது. நாள்முழுவதும் அக்குழாய்களில் இடைவிடாது ஜலம் வருவதுமில்லை. ஆதலின் வாரத்துக்கு ஒருமுறை கூட ஸ்நானம்செய்வதற்கும் அங்குள்ளவர்களுக்கு இயலாது. இத்தகைய நிலைமையில் வசித்தவர்களை வியாதியும் பீடிக்காமலிருக்குமோ !

இவ்வளவு கஷ்டங்களும் நிரம்பிய இடங்களில் ஜனங்கள் வசிக்க உடன் படுவானேன்? என்றாலோ, அவர்களது ஏழைமையே அதற்குக்காரணம். பேராசை கொண்ட சிலபேர்கள், சொந்தக்காரர்களிடமிருந்து மொத்தமாய்ச் சில வீடுகளை வாடகைக்கு வாங்கிச் கொண்டு அவைகளிலுள்ள அறைகளைத் தனித்தனியாகப் பிறருக்கு உயர்ந்த வாடகைக்கு விட்டு லாபமும் சம்பாதித்து வந்தனர். இதனாலேயே ஏழைகள் பட்ட கஷ்டம் முன்னிலும் அதிகரித்தது. உதாரணமாக 14அடி நீளம், 13அடி அகலம்,6அடி உயரங் கொண்ட ஓர் அறையில் மூன்று குடும்பத்தார்கள் குடியிருந்தனர். அவர்களது தொகை 22. வேறொரு அறை 12அடி நீளம், 10அடி அகலமானது; அதில் 32 ஜனங்கள் வசித்து வந்தனர். மற்றுமொரு அறை 18அடி நீளம் 10அடி அகலம்; இதில் 58 பேர்கள் குடியிருந்தனர். என்றால் அவர்கள் அனுபவித்த கஷ்டம் இத்தன்மையது என்று ஒருவாறு விளங்கலாம்.

விளைந்த கஷ்டங்களைப் பொறுக்க முடியாத சிலர் போலீஸ் உத்தியோகஸ்தர்கள் தெருவில் வந்த காலத்தில் அவர்கள் முன்னிலையில் முனிசிபல் விளக்குக்களை யுடைத்தனர். உடனே அவர்கள் கைதி செய்யப்பட்டுச் சிறைச் சாலைக்கு இழுத்துக் கொண்டு போகப் பெற்றனர். அவர்களும் உற்சாகத்துடன் சென்றனர். இவ்விதக் குற்றத்தை ஏன் செய்தீர்கள்? என்று வினவப்பட்டபோது, 'நாங்கள் வேண்டுமென்றே சட்டவிரோதமான இக்காரியத்தைச் செய்தோம். நாங்கள் உடம்பு கழுவிக் குளித்துப் பல நாட்கள் ஆயின. எங்கள்மேலுள்ள அழுக்கு இவ்வளவெனச் சொல்லவொண்ணாது. சிறைச்சாலையில் புக நேர்ந்தால் புகுவதற்குமுன் கட்டாயம் நாங்கள் ஸ்நானம் செய்விக்கப் படுவோம் என்று தெரியும். அவ்விதத்தாலாவது உடம்பைச் சுத்தஞ் செய்து கொள்ளலாமென்றே இக்குற்றத்தைச் செய்தோம்' என்றுசொன்னார்களாம். வறுமையின்கொடுமை இதனினும் உளதோ!

இத்தகைய ஸ்தலங்களில் குடியிருப்பவர்களின் சுபாவம் இத்தன்மைய தென்று சொல்லவும் வேண்டுமோ? குடியர்கள்,வெறியர்கள்,வீணர்கள், கொலைகளவுகள் புரிவோர் ஆகிய இத்தன்மையவரே பெரும்பாலராவர். எவரேனும் யோக்கியர்கள் இவர்கள் மத்தியில் வந்து குடியிருக்க நேர்ந்தாலும் வெகு சீக்கிரத்தில் யோக்கியதை மாறித் தம் தோழர்களின் வழிகளைப் பின்பற்றுபவராவர்.

இதை யெல்லாம் நேரிலேயே போய்ப் பார்த்த ஷாட்ப்ஸ்பரிபிரபு இக்கொடுமையை நீக்கும் பொருட்டு

1851ஆம் வருஷத்தில், பார்லிமெண்ட் ஸபையில் ஓர் மசோதாவைக் கொணர்ந்தார். அதன் முக்கிய கருத்து யாதெனில், ஒவ்வொரு பட்டணத்திலும் ஏற்பட்டுள்ள வாடகை விடுதிகளையுஞ் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் நேரில் பார்வையிட்டு அவைகளெல்லாம் சுகாதார வசதிகள் நிறைந்துள்ளனவா யிருக்குமாறு செய்ய வேண்டுமென்பதேயாம். சுத்த ஆகாயம் உலாவுவதற்கு வேண்டிய பலகணிகளும், சுத்த நீர் தாராளமாய்க் கிடைக்கக் கூடிய அளவுக்கு நீர்க்குழாய்களும், வீட்டினின்று வெளிவந்த அசுத்த நீர் வாசலில் தங்காது அப்புறப்படுத்தப் படுவதற்கு அவசியமான சாக்கடைகளும் இருக்க வேண்டும். மேலும் அடிக்கடி சுவர்களுக்குச் சுண்ணாம்பு பூசவேண்டும். இல்லையாயின் அவ்விடுதிகளில் வாடகைக்கு ஜனங்களை வசிக்கச்செய்யக்கூடாது. அன்றியும் வீடுகளின் விஸ்தீர்ணத்துக்குத் தகுந்தபடி அவைகள் ஒவ்வொன்றிலும் இவ்வளவு ஜனங்கள் தான் வசிக்கலாமென நிர்ணயிக்கப் படவேண்டும். மீறிநடக்கும் வீட்டுச் சொந்தக் காரர்களைத் தண்டிக்க வேண்டும் என்ற நிபந்தனைகளெல்லாம் அம்மசோதாவில் அடங்கியுள்ளன. பொது ஜனங்கள் இம்மசோதா மிகவும் அவசியமானது என்பதை எளிதில் உணர்ந்துகொண்டகாரணம் பற்றி அதிக விவாதமின்றி அது பார்லிமெண்ட் சபையில் அங்கீகரிக்கப் பட்டுச் சட்டமாயிற்று.

இச்சட்ட நிபந்தனைகள் அனுஷ்டிக்கப் பட்டதனாலே வெகு சீக்கிரத்தில் பொது ஜன ஸௌகரியங்கள் விருத்தியாயின. ஆடு மாடுகள் போல் ஜனங்கள் வீடுகளில் அடைக்கப்பட்டிருப்பது ஒழிந்தது. முன் பத்து

அல்லது பன்னிரண்டு பேர்கள் இருந்த இடத்தில் இப்போது நான்கு அல்லது ஐந்து பேர்களே இருந்தார்கள். ஆதலின் தொத்து வியாதிகள், ஜ்வரம் முதலிய ரோகங்களால் பீடிக்கப் பட்டவர்களுடைய தொகையும் இறந்தவர்களின் தொகையும் மிகுதியும் குன்றின.

VIII புகைப்போக்கி யேறும் பிள்ளைகள்.

சென்ற நூற்றாண்டில், இங்கிலாந்தில் நீராவியின் சக்தியினால் இயக்கப்பட்ட யந்திரசாலைகள் விருத்தியாகிக் கைத்தொழில்களும் மிகுந்து வந்தனவென்று ஏற்கெனவே கூறியுள்ளோம். அவ்வியந்திரசாலைகள் ஒவ்வொன்றிலும் உயர்ந்தோங்கிய புகைப்போக்கிகள் உண்டு. அவற்றின் உட்புறத்தை யடிக்கடி சுத்தஞ் செய்தல் மிக அவசியம். அவ்வாறு செய்யாவிடில் உட்பக்கத்தில் புகை மிகுதியும் படிந்து, யந்திர அறையினின்றும் கிளம்பும் புகை முழுதும் வெளிப்போகாமல் உள்ளேயே சூழ்ந்து நின்று, வேலை செய்வோரைப் பீடிப்பது மன்றிப் புகைப்போக்கிகளே காலக்கிரமத்தில் துருப்பிடித்து இடிந்து விழுந்துபோம். இது காரணம் பற்றிப் புகைப் போக்கிகளைச் சுத்தம் செய்வதற்கென்றே சில கண்டிராக்டர்கள் ஏற்பட்டார்கள். அவர்கள் தாங்களே புகைப்போக்கிகளில் ஏறிச் சுத்தஞ்செய்வதற்குத் தகுந்தவர்களல்லர். ஏனெனில், புகைப் போக்கிகளின் உட்புறங் குறுகலானதுபற்றி வயது முதிர்ந்து தேகம் பருத்தவர்கள் அவைகளின்மேல் ஏறவொண்ணாது. ஆதலின் கண்டிராக்டர்கள் இதற்

தென்றே வெகு இளம்பிராயத்துச் சிறுவர்களைப்பழக்கி வந்தார்கள். அவர்களெல்லோரும் பெரும்பாலும் நாலுவயதுக்கு மேற்பட்டு எட்டுவயதுக்கு உட்பட்டவர்களே. பாவம்! இச்சிறுவர்கள் புகைப்போக்கிகளில் ஏறி வேலைசெய்யும்போது பட்ட கஷ்டத்தை நினைக்கும்போதே நம் எல்லோருக்கும் மனம் திடுக்கிடும். உருண்டு, குறுகி, நெடிதோங்கிய குழாய் ஒன்றில் உட்புறமாய் உயர ஏறுவதென்றால் சுலபமா! தேகத்தின் அங்கங்கள் ஒவ்வொன்றையும் எவ்வளவு குறுக்கி மடக்க முடியுமோ அவ்வளவுக்கும் மடக்கிக் குழாயின் ஒரு பக்கத்தில் தேகம் முழுதும் உராயும்படி செய்துகொண்டே ஏறவேண்டும். குழாயின் உட்பக்கம் மிருதுவாய் வழுவழுவென்றிருந்ததா? அவ்விதம் இருந்தால் ஏறத்தான் முடியுமா? இல்லை. வெகு சுரசுரப்பாயும் கரடுமுரடாயும் இருக்கும். ஆதலின் ஏறிச் செல்லுங்காலத்து, கைகளிலும் முழங்கால்களிலும் காயம் பட்டு இரத்தம் மிகுதியும் வெளிவரும். அவ்வாறு உதிரம் வாராதிருப்பதற்கு ஓர் யுக்தி கண்டுபிடிக்கப்பட்டது. அதாவது புகைப்போக்கியிலேறுவதற்கு முன்பு அப்பிள்ளைகளை நெருப்புக்குப் பக்கத்தில் நிறுத்தி உப்பு நீரை அவர்கள் தேக முழுவதிலும் தேய்ப்பதாகும். அவ்விதஞ் செய்ததனால் தேகத்தின் மேலுள்ள தோல் தடித்து எளிதில் காயம் படாவண்ணம் ஆயிற்று. ஆனால் அச்சிறுவர்களுக்குக் கஷ்டம் நீங்கிற்றோ? இல்லவேயில்லை. அடிக்கடி உப்பு நீர் தேய்க்கப்பட்டகாரணம் பற்றி உடம்பில் ஓர் வித கோரமான பிளவைகள் கிளம்பிச் சகிக்கமுடியாத கஷ்டத்தை யுண்டாக்கின.

யந்திரசாலைகளில் வேலை நடக்குங் காலத்தில் புகைப்போக்கிகளைச் சுத்தஞ் செய்வது முடியாதல்லவோ! அதனால் காலையில் வேலைக்காரர்கள் வருவதற்கு முன்னரே அவ்வேலை நடந்தேறவேண்டியிருந்தது. ஆதலின் விடியற்காலையில் இரண்டு அல்லது மூன்று மணிக்கே கண்டிராக்டர்கள் பிள்ளைகளை யெழுப்பி வேலைக்கு அழைத்துக்கொண்டு போவது வழக்கம். படுத்துறங்கும் அப்பேதைகளை யடித்தும் உதைத்தும் எழுப்பி, வேலை ஸ்தலங்களுக்கு அழைத்துப்போய் மையிருட்டாயிருக்கும் புகைப்போக்கிகளின்மீது ஏறச் செய்வார்கள். அந்தோ பரிதாபம்! குளிரினாலும் பயத்தினாலும் நடுக்கங்கொண்ட அப்பாலர்கள் சிற்சில சமயங்களில் கொஞ்சதூரம் ஏறிப் பிறகு ஏறமுடியாமற் போவதுமுண்டு. அச்சமயத்தில் குரூர நெஞ்சம் படைத்த கண்டிராக்டர்கள் வைக்கோலைக் கொணர்ந்து புகைப்போக்கியின் அடிப்பக்கத்தில் பரப்பி அதைக் கொளுத்திவிடுவார்கள். உயர எழும்பும் உஷ்ணத்தையும் புகையையுஞ் சகியாதவர்களாய் அக்குழந்தைகள் மேன் மேலும் ஏறிச்செல்வார்கள். சிற்சில சமயங்களில் புகைப்போக்கிகளுள் விஷக்காற்று சம்பந்தப்பட்டு அதனால் பிள்ளைகளுக்கு வியாதி யுண்டாவதுமுண்டு.

வேலையொழிந்த நேரங்களிலாவது அச்சிறுவர்களுக்குச் சுகமுண்டா? அதுவுமில்லை. பேராசை கொண்ட கண்டிராக்டர்கள் அவர்களுக்குப் பூர்த்தியான உணவுங் கொடுப்பதில்லை. குளிர் அடங்குவதற்குப்போதுமான ஆடைகளுந் தருவதில்லை. அநேகமாய் அவர்கள், காற்றாவது வெளிச்சமாவது சிறிதும்

இல்லாத அறைகளில் சாம்பற் குவியலின் மீது படுத்துறங்குவது வழக்கம். அவர்கள் குளித்துத் தேகத்தைச் சுத்திசெய்து கொள்ளுவது வெகு அரிது. தேகவளர்ச்சியின்றி, அங்கவலிகுன்றிக் காயவடுக்கள் மிகுந்து வியாதியால் பீடிக்கப்பட்டு, பார்வைக்கு வெகு பரதேசிகளாய்க் காணப்பட்டதனாலே கண்டிராக்டர்கள் அச்சிறுவர்களை வெளியிலே ஒரு காலத்திலும் அனுப்புவதில்லை.

ஆ! கொடிது, கொடிது! இத்தகைய அநீதஞ் செய்தபோது கண்டிராக்டர்களுக்குச் சிறுவர்கள் எவ்வாறு கிடைத்தனர்! என்று கேள்வி பிறக்கலாம். வறுமையின் கொடுமையை என்னவென்று சொல்லுவோம்!

மானங் குலங் கல்வி வண்மை யறிவுடைமை
தானந் தவமுயர்ச்சி தாளாண்மை — ......
....
பசிவந்திடப் பறந்துபோம்

அன்றோ! வறுமைத்துன்பத்தால் காப்பாற்ற முடியாது தாய் தந்தையரால் மனப்பூர்வமாக விற்கப்பட்ட அருமைக்குழவிகள் பலர். மேலும் தந்தை தாயின்றி அநாதர்களாயிருந்து கண்டிராக்டர்கள் வசம் வந்தவர் வேறுபலர்; இதுவன்றியும் கண்டிராக்டர்கள், அயோக்கியர்கள் சிலரைக் கிராமாந்தரங்களுக்கு அனுப்ப, அங்கிருந்து அவர்களால் களவுசெய்யப்பட்டு வந்த சிறுவர்கள் சிலர்.

பிறருக்கு நேர்ந்த துயரைத் தம்முடையது போல் பாவிக்குஞ் சுபாவம் வாய்ந்த நம் ஷாப்ட்ஸ்பரி பிரபு

வுக்கு, இக்கொடுமையையுங்கண்டு மனப்பொறா யுண்டாமோ! நேரே சென்று அப்பேதையர்கள் நிலைமையைக் கண்ணாரக்கண்டு மனம் பரிதவித்து எவ்விதமேனும் இவர்கள் துயரை நீக்கமுயல்வேன் எனத் திட சங்கல்பஞ் செய்துகொண்டனர்.

இவர் காலத்துக்கு முன்னேயே இக்குழந்தைகளின்நன்மையை யுத்தேசித்து ஓர் சட்டம் ஏற்பட்டிருந்தது. ஆயினும் அதிகாரிகளுடைய அசிரத்தையால் அச் சட்டநிபந்தனைகள் ஒழுங்கே அனுஷ்டிக்கப்படவில்லை. ஆதலின் சட்டம் இருந்தும் இல்லாதது போலேயே கண்டிராக்டர்களது நடவடிக்கை யிருந்தது. இதை யறவே யொழித்துச் சட்டத்திலுள்ள குறைகளைத் தீர்க்குமாறு புதிய நிபந்தனைகளைப் பிரரேபித்து அச்சட்டத்தைப் புதிப்பிப்பதற்குப் பத்து வருஷகாலம் நம் பிரபு பாடுபடவேண்டியதாயிற்று. அவ்வாறு காலதாமதமாயினுஞ் சற்றேனும் மனங்கலங்காது விடாமுயற்சியுடன் சமயம் வாய்ந்தபோதெல்லாம் தமது அபிப்பிராயத்தைப் பொது ஜனங்கள் முன்னிலையிலும் பார்லிமெண்ட் சபையிலும் வற்புறுத்தி வந்தார். கடைசியாய் 1864-ஆம் வருஷம் நவம்பர் மாதம் முதல் தேதியில், இவரால் கொணரப்பட்ட திருத்த மசோதா, பார்லிமெண்டாரால்அங்கீகரிக்கப்பட்டுச்சட்டமாயிற்று. அச்சட்டத்தின் முக்கிய நிபந்தனை யாதெனில், பதினாறு வயதுக்குட்பட்ட யாதொரு சிறுவனையும் புகைப்போக்கியின் மேல் ஏறச்செய்யக்கூடாது என்பதே. அவ்வாறு செய்யின் குற்றஞ்செய்தவர் சிறையில் அடைக்கப்படுவர் எனவும் அச்சட்டத்தில் கண்டிருந்தது. அதனால் கஷ்டங்கள் வெகுவாய் நிவர்த்தியான போதி

னும் சிற்சில விடங்களில் அநீதம் நடந்து கொண்டே வந்தது. 1872 ஆம் வருஷத்தில் 'ஸ்டாபோர்ட்ஷயர்' என்றமாகாணத்தில் ஓரிடத்தில், ஏழுவயதுள்ள சிறுவன் ஓர் புகைப்போக்கியிலேற்றப்பட்டு அங்கிருந்த விஷக்காற்றை யுட்கொண்டதனால் மாண்டுபோனான். அன்றியும் 1875-ஆம் ஆண்டில் சேம்பிரிட்ஜ் நகரத்தில் பதினான்கு வயதுள்ள சிறுவன் ஒருவன் மேற்கூறிய விதமாகவே உயிர் துறக்கநேர்ந்தது. ஆதலின் ஷாப்ட்ஸ்பரி பிரபு மறுபடியுஞ் சிற்சில அம்சங்களைச்சேர்த்து மேற்சொன்னசட்டத்தைத் திருத்தி யமைக்கவேற்பாடு செய்தனர். அவர் முயற்சி பலிதமாகவே, புகைப்போக்கியேற்றல் விஷயமாக இது காறும் நடந்து வந்த அநியாயங்கள் அறவே யொழிந்தன.

IX கிராமாந்தரச் சிறுவர்கள்.

இக்காலத்தில் யந்திரசாலைகள் மிகுந்துள்ள பட்டணங்களில்தான் வேலை செய்யுஞ் சிறுவர்களுக்குக் கஷ்டம் என்பதில்லை. கிராமாந்தரங்களிலும் அவர்களுக்குத் துன்பமுண்டு. நிலங்களை மிகுதியாக வுடையவர்கள் தங்கள் நிலங்களைத் தாங்களே பயிரிடுவதில்லை. குத்தகைக் காரர்களைக் கொண்டே யிக்காரியத்தை முடிப்பது வழக்கம்; ஏககாலத்தில் வெகு விஸ்தீர்ணமமைந்த புலங்கள் சாகுபடி செய்ய வேண்டிவரவே வேலைக்கு அவசியமான மனிதர்களையும் பிள்ளைகளையுங் கொணர்ந்து சேர்ப்பதற்கென்றே சில கண்டிராக்டர்கள் ஏற்பட்டனர். இவர்கள் அங்கங்கே கிராமங்களுக்குச்சென்று கூலிவேலைசெய்து பிழைக்குங் குடும்பத்தினர்களுடன் ஒப்பந்தஞ் செய்துகொண்டு தனிப்

பட்டமனிதர்களையோ, பிள்ளைகளையோ தாமாகவே வேலையில் அமராமல்தடுத்ததுமன்றி, யொப்பந்தத்துக்குட்பட்டவர்களுக்குத் தகுந்த சம்பளங் கொடாமலும் அவர்களுக்குத் தாங்கமுடியாத வேலையையும் இட்டு வேறு பலவிதத்திலும் அவர்களைத்துன்புறுத்தி வந்தனர். அதிகாலையில் ஒப்பந்தக்காரர்கள் யாவருங் குறிப்பிட்ட வோரிடத்தில் வந்து கூடவேண்டும்; பிறகு வேகமாய் வயல்களுக்குப் போய் எருவைப் பரப்புவதோ, களைபறிப்பதோ, கற்களைப் பொறுக்கி யெறிவதோ, கிழங்குகளை வெட்டி யெடுப்பதோ, அன்றி வேறு எத்தொழிலோ ஆகிய விவற்றிலொன்றில் அமரவேண்டும். ஆறு ஏழுவயதுக்குழந்தைகளும் இவ்வேலைகளைச் செய்ய நேர்ந்தது. ஓய்வோ, ஒழிவோ கிடையாது. வெயிலானாலுஞ் சரி' மழையானாலுஞ் சரி, குளிரானாலுஞ்சரி, தேகம் அசௌக்கியமானாலுஞ் சரி, அன்றாடங் குறிப்பிட்டவேலையைச் செய்தே தீரவேண்டும். ஐயோ பாவம்! நன்றாய்த்தூங்குங் குழந்தைகளை யடித்து எழுப்பி, குளிரினால் நடுங்கும் அப்பேதையர்களை வெகு தூரம் நடத்தியிட்டுக் கொண்டு போய், கால் நோகவும், கை சோரவும், உடல் நிமிர்ந்து நிற்க வொண்ணாது தள்ளாடவும், முட்களாலுங் கூரிய கற்களாலும் வெட்டுண்டு உள்ளங்கைகளினின்றும் உதிரம் ஒழுகவும் அவர்கள் வேலை செய்வதைப்பார்த்துக்கொஞ்சமேனும் மனங் கரையாது அந்தப்பாவி கண்டிராக்டர்கள் இக்குழந்தைகளை மேன் மேலும் வேலை செய்யுமாறு ஏவுவர்.

ஷாப்ட்ஸ்பரி பிரபு இதைக் கண்கூடாகப் பார்த்துஞ் சும்மாவிருப்பரோ ! நாற்பது வருஷகாலமாய்ப்

பாடுபட்டு அதன் பலனாக யந்திரசாலைகளில் வேலைக்கு அமருஞ் சிறுவர்களுக்கு ஏற்பட்ட ஸௌகர்யங்கள் யாவுங் கிராமாந்தரங்களில் வியவசாயத்தொழில்செய்து பிழைக்குஞ் சிறுவர்களுக்குங் கிடைக்கவேண்டுமெனப் பார்லிமெண்ட் ஸபையில் வற்புறுத்தி, அதற்கு அனுகுணமான ஓர் மசோதாவை 1867-ஆம் வருஷத்தில் பிரேரேபித்தார். பார்லிமெண்ட் அங்கத்தினர் நம் பிரபுவின் மனநிலையை யறிந்தவ ராதலின் அதிக விவாத மின்றி அம் மசோதாவை யங்கீகரித்தனர். எட்டுவயதுக்குட்பட்ட சிறுவர்களை வேலைக்கு அழைக்கக்கூடாதென்பதும், எட்டுவயதுக்குமேல் பதின்மூன்று வயதுக்குட்பட்ட சிறுவர்களைப் பிரதி தினமும் ஓர் குறிப்பிட்ட காலத்துக்குமேல் வேலைசெய்யச் சொல்லக்கூடாதென்பதுமே அச்சட்டத்தின் முக்கிய நிபந்தனைகள்.

X. 1878 ஆம் வருஷத்துச் சட்டம்.

சென்ற ஐம்பது வருஷங்களாக யந்திரசாலைகளிலும், கரிச்சுரங்கங்களிலும் மற்ற கைத்தொழிற்சாலைகளிலும் வேலைசெய்யுஞ் சிறுவர்களுடையவும் ஸ்திரீகளுடையவும் நன்மையை யுத்தேசித்து அப்போதைக்கப்போது ஏற்படுத்தப்பட்ட சட்டங்களை யெல்லாம் ஒருங்கு சேர்த்து, அவற்றின் நிபந்தனைகளை யொழுங்குபடுத்தி ஒரே சட்டமாக வியற்றவேண்டுமெனக் கவர்ன்மெண்டாரே முயற்சிசெய்தனர். பார்லிமெண்டு அங்கத்தினர்களும் அதற்கு அனுமதி யளித்தனர். ஆகவே தனித்தனியா யிருந்த நாற்பத்தைந்து சட்டங்களை

யொன்று சேர்த்து முக்கிய நிபந்தனைகளை யெல்லாஞ் செவ்வனே திருத்தியமைத்து ஒரே சட்டமாகச்செய்து, பார்லிமெண்ட் ஸபையில் விவாதத்துக்குக் கொண்டு வந்தபோது அங்கத்தினர்கள் ஏகமனத்தினராய் அதை யங்கீகரித்தது மாத்திரமன்றி, அச்சமயம் ஸபையில் விஜயஞ் செய்திருந்த நம் ஷாப்ட்ஸ்பரி பிரபுவைப்பல வாறு புகழ்ந்து ஏத்தி அவரது இடைவிடா முயற்சியாலன்றி அத்தகைய சட்டஞ் செய்யப்பட்டிராதென்றும், ஏழைகளுடைய துயரம் அவ்வளவு சீக்கிரத்தில் தீர்ந்திராதென்றும், சுமார் நாற்பது வருஷகாலமாய்ப் பட்டகஷ்டத்தின் பயனை நேரில் பார்த்து ஆனந்தமடையும் பாக்கியத்தை நம் பிரபு பெற்றதற்குத் தாங்கள் எல்லோரும் சந்தோஷப்படுவதாகவுஞ் சொன்னார்கள். நம் பிரபுவுக்கும் அச்சமயம் உண்டான மகிழ்ச்சிக்கு அளவேயில்லை.

அச்சட்டத்தின் முக்கிய அம்சங்கள் பின் வருவனவாம்:—பதினான்கு வயதுக்குட் பட்ட சிறுவர்கள் யந்திர சாலைகளிலோ, வேறு கைத்தொழிற் சாலைகளிலோ, ஒரு தினத்தில் காலையிலோ அல்லது மாலையிலோ ஒரு வேளை மாத்திரமே வேலையில் நியமிக்கப் படலாமே யொழிய, இரு வேளைகளிலும் அவர்களை ஒருவரும் வேலையில் அமர்த்தக் கூடாது. வேலையின்றி யிருக்கும் மற்றொரு வேளையில் இச் சிறுவர்களுக்கு எழுதப் படிக்க வேண்டிய வசதிகளை முதலாளிகள் அமைத்துக் கொடுக்கவேண்டும். பதினான்கு வயதுக்கு மேற்பட்டுப் பதினெட்டு வயதுக்குட்பட்டவர்களைப் பகல் இரு வேளையிலும் வேலையில் ஒருவர் அமர்த்தலாமாயினும், வயதுமுதிர்ந்தவர்களைப்போல் அவ்வளவு

காலம் வேலை செய்யும்படி கட்டாயப்படுத்தக் கூடாது; மத்தியானகாலத்தில் ஆகாரம்உண்ணுவதற்கு வேண்டிய அளவு அவகாசங் கொடுக்க வேண்டும். வியாதி நேர்ந்த காலத்துச் சிகித்சை செய்வதற்கு வைத்தியர்களை முதலாளிகள் நியமிக்கவேண்டும். வேலை செய்யுங் காலத்தில் அகஸ்மாத்தாய் உயிரை இழக்கவோ, அல்லது யாதேனும் அங்க மிழந்து பிறகு வேலை செய்ய முடியாதபடியிருக்கவோ, நேரிடின் அதற்குத்தக்க பரிகாரத்தைப் பணவுதவிமூலமாய்ச் செய்ய முதலாளிகள் கட்டுப்பட்டவர்கள். இவை போன்ற வேறுசில நிபந்தனைகளும் அச்சட்டத்தில் அடங்கி யிருந்தன.

XI லண்டனில் அங்காடி வியாபாரிகள்.

லண்டன் நகரில் பெரிய வீதிகளுக்குப் பக்கத்தில் கடைத் தெருக்களும் மார்க்கெட்டுகளும் இருந்தன. ஆயினும், ஒதுக்கிடங்களிலுஞ் சிறு தெருக்களிலும் கடைகளாயினும் மார்க்கெட்டுகளாயினுங் கிடையா. அவ்விடங்களில் வசிப்பவர்களில் பெரும்பாலார் வெகுவாய் ஏழைகளே. அவர்களுக்கு வேண்டிய மீன், பழம், கறிகாய் முதலிய பொருள்களை யன்றாடம் அங்காடி வியாபாரிகளிடமிருந்தே யவர்கள் வாங்குவது வழக்கம். அவ்வங்காடிக்காரர்களும் மிக்க ஏழைகளே. அவர்கள் விடியற்காலையி லெழுந்து மார்க்கெட்டுக்குச் சென்று மொத்தமாய்ச் சிலஉணவுப்பொருள்களைவாங்கி அவைகளை ஓர் சிறு வண்டியி லேற்றிக்கொண்டு தெருக்கள் தோறுஞ் சென்று விற்று வருவார்கள். அவர்களது ஜீவனம் வெகு கஷ்டஜீவனமென்றே சொல்ல வேண்டும். தங்கள் வியாபாரத்துக்கு வேண்டிய முத

லும் அநேகமாய் அவர்கள் கையிலிருப்பதில்லை. ஆதலின் உயர்ந்த வட்டிக்குக் கடன் வாங்குவது வழக்கம். அன்றியும், பொருள்களை யேற்றிச்செல்லும் வண்டியும் அதையிழுக்குங் கழுதையும் அவர்களுக்குச் சொந்தமாயிரா. அவற்றின் சொந்தக்காரர்க ளிடமிருந்து அவைகளை வாடகைக்கு அமர்த்திக்கொள்ளுவது வழக்கம். தங்களுக்குக் கிடைத்த லாபத்தினின்றும் கடனாகவாங்கின முதலுக்கு வட்டியும், வண்டிவாடகையுங் கழித்தபிறகு மிகுதியாக நின்ற தொகை சொற்பமே யாகும். ஆயினும், அங்காடி வியாபாரத்தொழில் செய்து ஜீவனம் செய்தவர்கள் வெகு பேர்கள் உண்டு. அவ்வியாபாரி யொருவனுக்கு, பிரதிதினமுங் கொள்வனைக்கு வேண்டிய அற்பமுதலும் ஒருவண்டியுங் கழுதையுஞ் சொந்தமாகக் கிடைத்து விடுமானால், தான் இகலோக சுகமுழுவதையுமே அடைந்ததாக வெண்ணுவான்.

அவ்வியாபாரிகள், அதிகயோக்கியர்களென்றாவது செட்டாய்க் குடித்தனஞ் செய்பவர்களென்றாவதுசொல்லுவதற்கில்லை. முன் பின் யோசியாது அப்போதைக்கப்போது கிடைத்ததையெல்லாம்செலவுசெய்து விட்டு, கடன்காரர்கள் வந்து பணம் கேட்குங்கால் ஒன்றுஞ் சொல்லத்தோன்றாது விழிப்பவர்களே அவர்களுள் பெரும்பான்மையோர். அந்நிலைமையை மாற்றி, அவர்களுக்கு நற்புத்தி கற்பிப்பதற்கும், சொற்பவட்டியில் கடன் கொடுத்து உதவுவதற்கும், கொஞ்சங்கொஞ்சமாய் அவர்களால் சேமிக்கப்பட்ட திரவியத்தை வாங்கிவைத்துக்கொண்டு, காலக்கிரமத்தில் அவர்களுக்கு ஓர் வண்டியை வாங்கிக்கொடுப்பதற்கும், வேறு விதங்

களிலும் அவர்களது நிலைமையைச் சீர்படுத்துவதற்கும் அநுகுணமாக ஓர் சபை ஏற்பட்டது. அச்சபையார் நம் பிரபுவின் தன்மையை யறிந்தவர்களாதலின், அவரையே தங்கள் சபைக்கு அத்தியக்ஷராயிருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள, அவரும் ஒப்புக்கொண்டார். அன்று முதல் தம் ஆயுள் முடியும்வரையிலும் அவ்வியாபாரிகளிடத்து விசேஷஅன்புபாராட்டி அவர்களுக்கு எவ்வளவோ அவர்உதவிசெய்துவந்தனர். அடிக்கடி அவர்கள் கூட்டத்திற்சென்று அவர்களோடொருவராய் நின்று அவர்களுடன் தக்கபடி வார்த்தையாடிச் சிறிது சிறிதாய்த் தங்களது நடவடிக்கைகளைச் சீர்திருத்திக்கொள்ளுமாறு செய்தனர். ஒரு சமயம், லண்டனில் ஒரு பாகத்தில் இவ்வியாபாரிகள் வந்து வியாபாரஞ் செய்யக்கூடாதென்று அதிகாரிகள் உத்தரவிட்டனர். இது தெரிந்த ஷாப்ட்ஸ்பரி, அதிகாரிகளிடஞ் சென்று அவர்களுடன் மன்றாடி அத்தடையுத்தரவை ரத்து செய்யும்படி செய்தார்.

ஆதலின் ஷாப்ட்ஸ்பரி பிரபு என்ற பேரைக் கேட்ட மாத்திரத்திலேயே அவ்வியாபாரிகளுக்கு மட்டில்லாத மகிழ்ச்சியுண்டாகும். அவரிடத்துத் தங்களுக்குள்ள பக்தியையும் நன்கு மதிப்பையும் உலகத்தார் யாவரும் அறியுமாறு தெரிவிக்க வேண்டுமென்ற அவா அவர்களுக்கு உண்டாயிற்று. அதற்கென்று ஒரு கூட்டங்கூடுவதாய்த் தீர்மானித்து, அச்சமயம் விஜயஞ் செய்ய வேண்டுமென்று நம் பிரபுவைப் பிரார்த்திக்க அவரும் ஒப்புக்கொண்டார். குறித்த தினத்தில் சபை கூடிற்று. ஆயிரம் வியாபாரிகளுக்கு மேல் கூடினார்கள். ஷாப்ட்ஸ்பரி பிரபு வந்து சேர்ந்ததும் அவரையெல்லோ

ரும் எழுந்திருந்து கைகூப்பி வணங்கிக் கரகோஷஞ் செய்து வெகுமரியாதையுடன் மேடையின்மீதுள்ள ஆசனத்தில் அவரை யிருத்தினர். பிறகு, வியாபாரிகளில்பிரமுகர் ஒருவர், தங்கள் கூட்டத்தார் ஷாப்ட்ஸ்பரி பிரபுவால்அடைந்துள்ள நன்மைகளைக் குறித்துப்பேசி, அவரிடத்துத் தங்களுக்குள்ள அன்புக்கும் பக்திக்கும் அறிகுறியாக அவர் ஓர் பரிசைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று சொன்னார். உடனே சபையில் அழகாய் அலங்கரிக்கப் பட்ட ஓர் கழுதை கொணர்ந்து நிறுத்தப் பட்டது. அப்பிரமுகர் அதை மெல்ல நடத்திச் சென்று மேடையில் ஏற்றினார். ஷாபட்ஸ்பரி பிரபு சரேலென்று தமது ஆசனத்தை விட்டு எழுந்து அப்பிராணியைத் தழுவி யணைத்துக் கொண்டார். பிறகு சிறிது நேரம் அச்சபையில் பேசினார். தாம் நிரம்பவும் ஆனந்தமடைந்ததாகவும், தமக்களித்த பரிசுக்குத் தாம் மிகவும் வந்தனமுள்ளவராயிருப்பதாகவும் அப்பிராணியைத் தம் குழந்தையைப்போல் காப்பாற்றுவது நிச்சயமென்றுங்கூறி, 'நான் இறந்த பிறகு, உலகிலுள்ள ஜனங்கள், இந்தப் பிராணி யெவ்வளவு பொறுமை யுடனும் பிறர்மீது குறை கூறாமலுந் தன் தொழிலைச் செய்து வருகிறதோ, அவ்விதமே நானும் எனக்குள்ள வேலையைச் செய்து வந்தேனெனச் சொல்லுவதே சிறந்த புருஷார்த்தமெனநான் நினைத்துள்ளேன்' என்று சொல்லி முடித்தார்.

தமக்களித்த கழுதையைத் தம் சொந்தக்கிராமத்துக்கனுப்பி, அங்கே தமக்குள்ள குதிரைகள் பசுக்கள் முதலிய மிருகங்களோடு அதுவும் போஷிக்கப்பட்டு வருமாறு ஏற்பாடு செய்தார்.

நம்பிரபுவுக்கு, வாயில்லாப்பிராணிகளிடத்திலுள்ள காருண்யத்தைப் பார்த்து, அங்காடி வியாபாரிகளும் அவைகளை யன்புடன் நடத்தத் தலைப்பட்டார்கள். உதாரணமாக, 1872-ஆம் வருஷத்தில் டார்பி என்ற வர்த்தகன் ஒருவன், தன் வண்டியை ஓட்டிக்கொண்டு போகையில் அதில் கட்டியிருந்த கழுதை கால் தடுக்கிக் கீழே விழுந்து காலை யொடித்துக்கொண்டது. அவனது சிநேகிதர்கள், அந்தக் கழுதைக்குக் கால் குணமாகாதென்றும், அது அதிகமாய்க் கஷ்டப்படாவண்ணம் அதை யுடனே கொன்று விடுவதே நலமென்றுங் கூறினார்கள். டார்பிக்கோ, அவ்வாறு செய்வதில் மனமில்லை. தனக்கு எவ்வளவோ பாடுபட்டுழைத்த அப்பிராணியை யெவ்வாறாயினும் சொஸ்தம் செய்யவேண்டுமென விரும்பினான். வீட்டுக்குச்சென்று, தனக்கென்று தனியாயிருந்த அறையில் அதைப்படுக்கவைத்து, தகுந்த வைத்தியர்களைக்கொண்டு அதற்கு சிகித்சை செய்வித்தான். கொஞ்சநாளில் சிறிது குணம் ஏற்பட்டது. பிறகு, பத்துப்பதினைந்துமைல் தூரத்திலுள்ள ஓர் கிராமத்துக்கு அதை யனுப்பி, அங்குள்ள தனது சிநேகிதன் ஒருவனைக்கொண்டு அதைப்போஷித்து வந்தான். இவ்வாறு பதினெட்டு மாதங்கள் கழிந்தன. கடைசியாய் அப்பிராணி, சௌக்கியப்பட்டுத்திரும்பித் தன் எஜமானனிடம் வந்து முன் போல ஊழியஞ் செய்யலாயிற்று. லண்டன் ஜீவரக்ஷணஸமாஜத்தார், டார்பிசெய்த காரியத்துக்கு அவனை மிகவும் புகழ்ந்து அவனுக்கோர் நற்சாட்சி பத்திரமும் அளித்தார்கள். ஷாப்ட்ஸ்பரி பிரபு விதைத்த விதை முளைகிளம்பிப் பெருஞ்செடியாகிப்பூத்து மேலே சொன்ன நற்காரியங்களாங் கனிகளைத்தந்தது.

XII வேலை யில்லாச் சிறுவர்களுக்கு வேலை

யந்திரசாலைகளிலும் இதரவேலை ஸ்தலங்களிலுஞ் சிறுவர்களுக்குத் தாங்கப்படாத வேலையைக் கொடுத்து அதைச் செய்யக் கட்டாயப் படுத்தக் கூடாதென நினைந்து, அதை யொழிக்குமாறு பல சட்டங்களையும் ஷாப்ட்ஸ்பரி பிரபு இயற்றி வைத்தது வாஸ்தவமே. ஆயினும், வேலை செய்வோம் என்றாலும் வேலை கிடைக்காமலும் குடிப்பதற்குங் கஞ்சியில்லாமலும் லண்டன் நகரத் தெருக்களில் அலைந்த நூற்றுக் கணக்கான சிறுவர்களுக்கு என்ன செய்வது? வேலை செய்யாமலிருந்து பசியால் வருந்துவதை விட, தாங்கப்படாத கடின வேலையைச் செய்தாவது கொஞ்சம் உணவுக்கு ஆதாரம் செய்து கொள்வது நன்றல்லவா? இதனுண்மையை ஷாப்ட்ஸ்பரி பிரபு தெரிந்து கொண்டார். பிறகு ஒரு நாள், பதினாறு வயதுக்குட்பட்ட சிறுவர்களெல்லாம், குறிப்பிட்ட ஓர் இடத்தில் தம்மை வந்துபார்க்கவேண்டுமென்று பிரசுரஞ் செய்வித்தார். அவ்வாறே இருநூறு பிள்ளைகளுக்குமேல் அன்று வந்தார்கள். நம் பிரபு, அவர்களுக்கு வயிறார உணவு கொடுத்து, பிறகு அவர்களுடைய நிலைமையைப் பற்றி விசாரித்து, அநேக உண்மைகளைத் தெரிந்து கொண்டார். வந்துள்ளவர்களுள் பலரும் தாய் தந்தையரின்றி அநாதர்களாயிருந்தனர். தினந்தோறும் அவர்களுக்கு ஆகாரங் கிடைப்பதில்லை. உடுக்க உடையுமில்லை. குளிரடங்கப் படுத்துறங்க இடமுமில்லை. அவர்களில் சிலர், திருட்டுமுதலிய குற்றங்கள் சாட்டப்பட்டு இரண்டொரு தரஞ் சிறையிலிருந்தவர்கள். பெரும்பாலும் கூலிவேலை யகப்படாத காரணத்தினாலேயே குற்-

றங்கள் செய்யவேண்டி வந்ததாம். இவற்றை யெல்லாங் கேட்டுக் கடைசியில் நம் பிரபு, அப்பிள்ளைகளைப்பார்த்து 'குழந்தைகளே! நீங்களெல்லோரும் யோக்கியமாய் வேலை செய்து காலக்ஷேபஞ் செய்யும் வழியை நான் காட்டினால், நீங்களெல்லோரும் அதைப் பின் பற்றுவீர்களாக?' எனக்கேட்டார். 'ஆம், ஆம்' என்று அவர்களெல்லோரும் மறுமொழி கூறினர். பிறகு அவர்களைத்தத்தம் இடத்துக்கு அனுப்பி விட்டனர்.

மறுநாள் ஷாப்ட்ஸ்பரி பிரபு கவர்ன்மெண்டு கப்பல் இலாகா அதிகாரிகளுக்கு ஓர் விண்ணப்பஞ் செய்து கொண்டார். லண்டன்மாநகரில் நூற்றுக் கணக்கான சிறுவர்கள் வேலையில்லாமல் தவித்தனரென்றும், அவர்களுக்குக் கப்பலில் வேலைசெய்யும் லஸ்கர்கள் முதலிய கீழ்த்தர ஊழியர்களின் தொழிலைக் கற்பித்தல் நலமென்றும், அவ்வாறு செய்யின் இதர தேசத்தினின்றும் லஸ்கர் வேலைக்கு மனிதர்களைத் தருவிக்க வேண்டிவராதென்றும், வேலையில்லாது திண்டாடின பல சிறுவர்களுக்கும் இது மூலமாய்க் சாலக்ஷேபம் செய்வதற்கு வழியேற்படுமென்றும் அவ்விண்ணப்பத்திலெழுதியிருந்தார். அதிகாரிகளும் இவ்வபிப்பிராயத்தை யங்கீகரித்து இரண்டு பழைய சண்டைக் கப்பல்களைச் சித்தப்படுத்திச் சிறுவர்களுக்கு மாலுமித் தொழிலைக் கற்பிப்பதற்கு ஏற்பாடு செய்தனர். இது காரணமாகப் பிரதி வருஷமும் சுமார் இருநூறு சிறுவர்களுக்கு வயிறு வளர்க்கவும் வழியேற்பட்டது. கொஞ்சகாலமான பிறகு, வேறொரு கப்பலையும் பாலர் பயிற்சிக்கென்று சித்தப்படுத்தி, ஷாப்ட்ஸ்பரி கப்பல் என்னும் நாமத்தை அதிகாரிகள் அதற்குச் சூட்டினர்.

XIII ஷாப்ட்ஸ்பரியினது சீமாட்டியின் மரணம்.

1872-ஆம் வருஷத்தில் நம் பிரபுவுக்கு ஓர் பெரிய துக்கசம்பவம் நேர்ந்தது. நாற்பத்தொரு வருஷகாலமாய்த் தம்முடன் கூடவிருந்து, இல்லறத்தை நடாத்தி மக்களைப் பெற்றுப் பெருவாழ்வெய்தி, தனது கணவனும் நம் பிரபு கைக்கொண்ட முயற்சிகளையெல்லாம் ஆதரித்து, மேன்மேலுந் தருமகைங்கரியங்களியற்றுவதில் அவரை உற்சாகப்படுத்தி, 'தன் அன்பர் துஞ்சிடில் தானுந் துஞ்சி, துன்பம் எய்திடில் தானும் அத்துன்புற்று, இன்பம் உற்றிடில் இன்புற்றிருந்து, செய்திர் என்றலுஞ் செய்தனம்' எனுமாறு ஒழுகி

அன்பு மறனு முடைத்தாயி னில்வாழ்க்கை
பண்பும் பயனு மது.

என்ற ஆன்றோர் வாக்கை உண்மையென உலகத்தாருக்கு உணர்த்தவே வந்தனளோ! எனப் பிறர் புகழுமாறு தமக்கு வாழ்க்கைத்துணை நலனாயிருந்த ஷாப்ட்ஸ்பரி சீமாட்டி பரலோகஞ் சென்றனள். இக்காலத்தில் நம் பிரபுவுக்கு வயது எழுபத்தொன்று. உடல்வலி குன்றி மனந் தளர்வுற்று உறுதிகள் பலங்குறைந்து பிறர் உதவிபார்த்து நிற்கும் பிராயமன்றோ அது! ஆயினும் அத்தகைய காலத்தே அவரது ஊன்றுகோலைத் தள்ளிவிட்ட ஈசனது திருவருள் விந்தையாமன்றோ! நம் பிரபு அடைந்த துயரைச் செப்பவும் போமோ! ஓவென்றலறிக் கோவெனக் கதறிப் பிறரை அல்லற்படச்செய்யுந் தன்மையதோ அத்துயரம்! அன்று, அன்று; மனத்துள் கரந்து நின்று பிறர்க்குச் சிறிதுந் தோன்றாது அந்நெஞ்சினை நெக்கு நெக்கு

ருக்கச் செய்யுந் தன்மையது. அதைத் தாங்கமாட்டாது நம் பிரபு பின்வருமாறு பொருள்கொண்ட வாக்கியங்களைத் தனது தினசரிப் புத்தகத்தில் எழுதினர். 'ஜகதீசா! ஏன் என் ஆருயிரைக் கைப்பற்றிப் போய் விட்டீர்.?

தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்.

அல்லவோ அவள்! அவளின்றேல் புகலிடம் வேறிலது எனக்கென வுமக்குத் தெரியாதோ? அந்தியகாலத்தில் எங்கள் புதல்வரும் புதல்விகளும் அவரவர்களது மனையில் சுகமுற்று வாழ்ந்திருக்க, நாங்கள் இருவருந்தனியேயோர் இல்லிலிருந்து ஒருவர்க்கொருவர் துணையாய் நின்று உம்மை வழிபடுவோ மென்று எண்ணின எண்ணம் உமக்குத் தெரியாதோ சுவாமி! ஆயினும் என்னை யிவ்வாறு கைவிடலாமோ!'

ஆனல் சீக்கிரத்தில் மனந்தெளிந்து 'நாற்பது வருஷகாலமும் இந் நற்பேற்றைத் தந்தருளிய கருணை வள்ளல் என்னிடத் தன்பை நீக்கின ரெனக்கொள்ளல் மதியீனம். இந்த சம்பவமும் அவரது கருணையின் வழிப்பட்டதே அதில் ஐயமில்,' என்று அதே தினசரிப் புத்தகத்தில் மறுபடியும் வரைந்தார்.

XIV எமிலி கடன் நிதி.

'துக்கத்தின் வழிப்பட்டது, தூயதாம் ஞானம்,' என்று ஆங்கிலத்தில் ஓர் வாக்கியமுண்டு. சுவானுபவத்தில் தரித்திரமோ, துக்கமோ எத்தன்மையதெனத்

தெரியாத வொருவனுக்குப் பிறர்க்குநேருங் கஷ்டநிஷ்டூரங்களை யறிதல் சாத்தியமாகாது; ஆதலின் அவனிடம் அன்பும், அருளும், பொறையும், சாந்தமும், திக்கற்றவருக்குத் தெய்வமாந்தன்மையும், அடக்கமும், அமைதியும் வெகுவாய் வளருவதற்குக் காரணம் ஏற்படாது. ஒருகால் மேற்கூறிய குணங்கள் அவனிடத்தில் சுவபாவமாகவே பொதிந்திருப்பினும், ஏதேனுந் துக்க சம்பவம் நேரிடின் அது காரணமாக அவனிடத்துள்ள இனிய குணங்கள் மேன்மேலும் விருத்தி யடையும். இது அனுபவசித்தமாக ஏற்பட்ட உண்மை.

அவ்வாறே நம் பிரபுவுக்குந் தம் தருமபத்னியின் வியோகத்தால் ஏற்பட்ட துக்கத்தின் காரணமாக மேன்மேலும் பிறருக்கு உபகாரஞ் செய்து அவர்களுக்குள்ள குறைகளையுங் கஷ்டங்களையும் நிவர்த்திக்க வேண்டுமென்ற அவா பதின் மடங்கு பெருகிற்று. சற்றுநேரங் கூட வீண்பொழுது போக்குவதில்லை. 'காலன் வருமுன்னே, கண்பஞ்சடைமுன்னே' எவ்வளவு நற்காரியங்களைச் செய்தல் சாத்தியமோ அவைகளையெல்லாஞ் செய்தே தீரவேண்டுமென முடிவுசெய்துகொண்டார்.

லண்டன் மாநகரில் செல்வமுஞ் செருக்குந் தாண்டவமாடினும் வறுமையுந்துன்பமுங் குறைந்தபாடில்லை. கோடீசுவரர்களும், லக்ஷாதிகாரிகளும் விருத்தியாக விருத்தியாகக் குடிக்கக் கஞ்சியும் உடுக்கக் கந்தையும் இல்லாது தவித்தவர்களும் அதிகமாயினர். பிற்கூறப்பட்டவர்களுள் வெகுபேர் மானிகள்; பிறரிடத்து இரவாமலும், உற்றார் உறவினர்களுக்குப் பாரமாயிராமலுந் தாமாகவே யேதேனுமொரு தொழிலைச்செய்து,

வந்த வருமானத்தைக்கொண்டு, கஞ்சியேனுங் கூழேனுங் குடித்துக் கௌரவமாகக் காலங்கழிப்போமென விரும்பியவர் பலருண்டு. ஆயினும் அவர்களெல்லோருக்கும் வேலை கிடைப்பதில்லை; சில்லறை வியாபாரம் ஏதேனுஞ் செய்ய நினைத்தாலோ அதற்குவேண்டிய சொற்பமுதலும் அகப்படுவதில்லை. பிராணன் போனாலும் பிறரிடத்துச்சென்று 'தேஹி' என்னும்மொழிமாத்திரம் உரையார்கள். இத்தன்மை வாய்ந்த பெண்பாலார் வெகுபேர் லண்டனில் இருந்தனர். அவர்களது ஆத்ம கௌரவத்துக்குக் குறைவு வராமல் அவர்களுக்குப் பிழைக்கும் வழிகற்பிக்கவேண்டுமென்று நம் பிரபு ஓர் ஏற்பாடு செய்தனர். தம்பத்னியினது பேர் சூட்டி 'எமிலி கடன் நிதி' யென்னும் ஓர் நிதியை ஸ்தாபித்தார். அந்நிதியிலிருந்து ஸ்திரீகள் வியாபாரத்துக்கு வேண்டிய சொற்பத்தொகைகளைக் கடனாக வாங்கிக்கொள்ளக்கூடும். ஆயினும் வாங்கும் கடன்தொகைக்குத் தகுந்த ஜாமீன் கொடுக்கவேண்டும். அன்றியுங் கடன் தொகையில் வெகு சொற்ப பாகத்தையேனும் அப்போதைக்கப்போது, வாரத்தில் ஒரு முறையோ அல்லது மாதத்தில் ஒரு முறையோ தவறாது கொடுத்து வரவேண்டும். இத்தகைய நிபந்தனைகளுக்கு உட்பட்டுக் கடன் வாங்கிக்கொண்டவர்கள் அநேகர். அவர்களுள் ஒவ்வொருவரும் யோக்கியர்களாயிருந்து வாங்கின கடனைக்கொடுத்து விட்டுச்சொந்தத்திலேயே தம் வியாபாரத்துக்கு வேண்டிய முதலையுஞ் சேகரித்துக்கொண்டனர். என்றால் 'எமிலி கடன் நிதி' எவ்வளவு உபயோகமாயிருந்தது என்று விவரித்துக்கூறல் அவசியமோ! பிச்சையர்க வொருவனுக்கு ஒரு அணு

வைக்கொடுப்பதினும் அவன் தானே யுழைத்து அரையணாவையேனும் சொந்தத்தில் சம்பாதித்துக்கொள்ளுமாறு செய்வித்தல் மிக மேலன்றோ!

XV. எண்பதாம் வருடத்துப் பிறந்த நாள் கொண்டாட்டம்

1881-ஆம் வருஷம் ஏப்பிரல் மாதம் 28 ஆம் தேதி ஷாப்ட்ஸ் பரி பிரபுவுக்கு எண்பதாம் பிராயம் ஆரம்பமானது. அன்றைய தினத்தை இங்கிலாந்து தேசத்திலுள்ளார் யாவரும் ஓர் பெரிய உற்சவதினமாகக்கொண்டாடினார்கள். முக்கியமாய் லண்டன் நகரில் மிகவும் விசேஷமான குதூகலநிகழ்ச்சிகள் நடந்தேறின. அல்லற் பட்டார் யாவருக்கும் ஆதரவளிக்கும் அன்பின் களஞ்சியமாம் நம் பிரபுவை யாரே போற்றாதிருப்பவர்! தேகத்தால் உழைத்துப் பாடுபட்டுக்கஷ்ட ஜீவனஞ் செய்து வந்த ஒவ்வொரு வகுப்பினரும் அம்மகானது பேருபகாரத்துக்குப் பாத்திரர்களாயினரன்றோ! அவர்களெல்லோரும் ஆயிரக்கணக்காக நம் பிரபுவைக்கண்டு களிக்க வந்தனர். அன்றைத்தினஞ் சாயங்காலம் லண்டன் நகரிலுள்ள முக்கிய சபாமண்டபமான 'கில்டுஹாலி'ல் ஓர் விசேஷ வரவேற்புக் கூட்டங் கூடியது. குறித்த காலத்துக்கு முன்னதாகவே அம்மண்டபம் ஜனங்களால் நிரம்பியது. உள்ளே நிற்கவும் இடமில்லாது பலகணிவாயில்களிலுஞ் சுவர்களின் மீதும் பலர் ஏறிநின்றனர். ஷாப்ட்ஸ்பரிபிரபு தமது மாளிகையினின்று புறப்பட்டு ஸபாமண்டபத்துக்கு

வரும் வழியிலெல்லாம் ஜனங்கள் அவரைச் சூழ்ந்து நின்று கரகோஷஞ்செய்து, ஆசிமொழிகள் கூறி மலர் மாரிபொழிந்தனர். ஸபாமண்டபம் வந்து சேர்ந்ததும் அங்குக் கூடியிருந்த பிரமுகர்கள் யாவரும் அவரை வெகு மரியாதையுடன் வரவேற்று மேடையில் வீற்றிருக்கச்செய்தனர். 'லார்ட்மேயர்' எனும் பட்டம் வாய்ந்த, லண்டன்நகரபரிபாலனஸபையின் அத்தியக்ஷர் அச்சமயம் அக்கிராஸனம் வகித்தார். அவரும் மற்றுஞ் சில கனவான்களும் நம் பிரபுவின் அரிய குணங்களையும், உத்தம ஜனஸேவையையும் மிகப்புகழ்ந்து பேசினர். தொழிற்சாலைகளில் வேலை செய்துவரும் ஆடவர், பெண்டிர், குழந்தைகள் ஆகிய இவர்களது கஷ்ட நிவாரணத்தை யுத்தேசித் தல்லவா நம் பிரபு நாற்பது வருஷகாலமாகப் பாடுபட்டு வந்தனர்! அவரது பிரயத்தனத்தா லன்றோ தினந்தோறும் பத்து மணி காலத்துக்கு மேற்பட்டு எவரையுந் தொழிற்சாலையதிகாரிகள் வேலை செய்யக் கட்டாயப் படுத்தக் கூடாதென்றும், சிற்சில இடங்களில் ஸ்திரீகளையுங் குழந்தைகளையும் வேலையில் அமர்த்தவே கூடாதென்றும் நிபந்தனைகள் ஸர்க்காரால் ஏற்படுத்தப் பட்டன! அந்நிபந்தனைகள் அமுலுக்கு வந்த காரணத்தினால் தொழிற்சாலையின் சொந்தக் காரர்களுக்கு வரும் லாபம் ஒருவாறு குறைந்தாலும், அவர்களுள் ஒருவருக்காவது ஷாப்ட்ஸ்பரி பிரபுவிடத்துத் துவேஷமாவது அதிருப்தியாவது உண்டோ? கொஞ்சமும் இல்லை. அந்தச் சொந்தக்காரர்களுள் பிரபலரான பாஸ்டர் என்பவர், தாமும் தம்மைப் போன்ற முதலாளிகளும் நம் பிரபுவிடத்து மிக்க அன்பும் பக்தியும்

கொண்டுள்ளதாக அச்சபையில் தெரிவித்துக்கொண்டது மாத்திரமன்றி, நம் பிரபுவின் உழைப்பின் மூலமாக வேற்பட்ட சீர்திருத்தங்களை யெல்லாம் தாம் போற்றுவதாகவுங் கூறினர். ஆகவே 'அஜாதசத்துரு' வென்றும், 'அநாதரக்ஷக ரென்றும்' 'ஜனரஞ்சக' ரென்றும் அவரை யாவரும் புகழ்ந்தனர்.

அங்நற் சமபத்தில், நம் பிரபுவிடத்து மிகுதியும் பக்திவாய்ந்த மிஸ்காப் என்னும் மாது, ஆங்கிலத்தில் ஓர் ஆசிகவியை யெழுதி அதைப் பிரபுவிடம் ஸமர்ப்பித்தார். அதன் முக்கியப் பொருள் பின் வரும் பாடலில் காணப்படும் :

வாழிய ஐயநீர் வாழிய பெருமநீர்
ஊழி தோறூழி யும்பெயர் நிலவுக.
எழு பத் தீரைந் தெய்திய விந்நாள்
எங்கு நிறைந்திடு மிறைவ னுமக்கே
பொங்கு மருளினைப் புரிவா னாக.
உவப்புடன் பிறருக் குபகரிப் பதுவே
தவப்பய னென்று தவறு தொழுகிய
அருமையாந் தருமமு மறத்தின் மாண்பும்
பெருமையுஞ் சீரும் பெறுதற் கெளியவோ !
அன்னையை யிழந்தபின் அப்பனை யிழந்தும்
என்ன தாஞ் செய்வ மெனமே திகைத்துத்
திக்கில்லா தழுதுந் துயர்க்கடல் மூழ்கியும்
புக்கிடமில்லாப் புல்லிய சேய்க்குத்
தாயு மாகித் தந்தையு மாகி
ஆயுளை யவருக் களித்தனி ரன்றோ!
என்ன தாஞ் செய்கிறோ மெங்கிருக் கின்றோம்,
அன்ன தாம் ஞானமு மற்றவே யில்லாப்
பித்தர் தமக்கே பெரிது மிரங்கி
ஒத்த நன்மையை யுஞற்றினி ரன்றோ !

கரிக்குகை யுள்ளுங் காற்றிலாக் கனியிலும்
பரிக்கு மிழிவாம் பதவியுற் றனரே
என்றே யாரு மிரங்கி நடுக்குறக்
குன்றாத் துயருட் குளித்துத் தவிக்கும்
நாரியர் தமக்கும் நாதனில் சேய்க்கும்
ஆரு மியற்றிடா வருள் புரிந்தீரே !
நல்லார்க்கும் நல்லர்நீர் நண்பிலர்க்கு நண்பர்நீர்
பொல்லாங் கெங்கும் நில்லா வண்ணம்
புவியைத் திருத்தும் புனிதமா நோக்கம்
வாழிய ஐயநீர் வாழியெம் பெருமநீர்
பலித்திட வுமக்கெனப் பரமனைப் போற்றுவம்.
தாழ்வில் நற் க்ருமந் தவறா தியற்றியே
ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
ஆர்வமு மின் பமு மாற்று விப் பீரே.

இவ்விதம் பலரும் உருக்கமாய்ப் பேசி முடிந்ததும் ஷாப்ட்ஸ்பரி பிரபு தமக்குச் செய்யப்பட்ட உபசாரத்திற்கு விடையளிக்க ஆசனம் விட்டு எழுந்தார். உடனே சபையோர் யாவருங் கரகோஷஞ் செய்து சுமார் ஐந்து நிமிஷகாலம் ஆரவாரித்தனர். இதைப் பார்த்த நம் பிரபுவுக்குக் கண்ணீர் தாரை தாரையாகப் பெருகியது, மனம் நெக்குருகிப், பேசநாவெழவில்லை; சற்றுநேரம் மௌனமாக விருந்து பிறகு சாவதானசித்தராய் வெகு அமரிக்கையுடன் கம்பீரத் தொனியில் பதில் அளித்தனர். தமக்குச் செய்யப்பட்ட கௌரவத்துக்குத் தாம் மிக நன்றி பாராட்டுவதாகவும், தாம் செய்துள்ள காரியங்களையெல்லாம் தமது கடமையாகவே நினைத்துத் தாம் செய்துவந்த தாகவும், அவைகளில் ஒன்றுந் தமக்கு அசாதாரணமாகத் தோன்றவில்லை யென்றும் மானிடஜன்மம் பெறுவது அரிதாதலின் அஜ் ஜன்மத்தை யடைந்தோர் யாவரும் மிருக

வாழ்வைவிட உயர்ந்த வாழ்வெய்தி ஈசன் தமக்கெனப் பிரத்தியேகமா யளித்துள்ள அறிவை நல்வழியில் உபயோகித்து, ஆன்மலாபத்தை அடைவதற்குத் தக்க ஸௌகரியங்களையேற்படுத்திக்கொள்ளுதல், ஒவ்வொருவருக்கும் முக்கிய கடமையாமெனவுஞ் சொல்லி முடித்தார்; பிறகு சபை கலைந்தது.

சிறப்பீனுஞ் செல்வமு மீனு மறத்தினூ உங்
காக்கமெ வனோ யுயிர்க்கு.

XVI ஷாப்ட்ஸ்பரி பிரபுவின் குணாதிசயங்கள்.

ஜனசமூக நன்மைக்காகவே என்றும் பாடுபடுபவர்களிற் சிலர் தத்தம் பெண்டிர், பிள்ளைகள் நெருங்கிய பந்துக்கள் முதலானவர்களது நன்மையைச் சிரத்தையாய்க் கருதுவதில்லையென ஓர் குறையை யுலகத்தார் கூறுவதுண்டு. ஆயினும் நம் பிரபுவிடத்து அத்தகைய குற்றம் இல்லை. எவ்வளவு வேலை தொந்தரவிருப்பினும், எவ்வளவு தான் அவகாசக் குறைவு ஏற்படினும் அப்போதைக்கப்போது தமது புத்திரர் புத்திரிகளது வித்யாவிஷயத்தைப் பற்றியும் அவர்கள் கிரமமான நடவடிக்கைகளைத் தெரிந்துகொண்டு அவைகளுக்கிணங்க வொழுகவேண்டிய விஷயத்திலும் நிரம்பவும் அக்கரை காட்டிவந்தார். அதனால் அவரது மக்கள் கல்வியில் விசேஷத் தேர்ச்சியடைந்ததுமன்றி ஈசுவரபக்தி மிகுந்து வெகு சீலர்கள் எனப் பெயரும் பொருந்தினர். நம் பிரபு உயிருடனிருக்குங் காலத்திலேயே அம்மக்களி லிருவர் பரகதியடையநேர்ந்தது. அதனால் உண்டான துக்கம் தாங்கவொண்ணா

திருப்பினும் அவர்கள் உயிர் நீங்குங் காலத்துச் சிறிதும் மனந் தளராது பரமனது அடிபோற்றி அவரது திருவுள்ளத் தியைந்ததாதலின் துக்கித்தல் சரியல்லவென்ற அவர்களது மனநிலையைநோக்கி நம் பிரபுவும் துயர்நீங்கி, மனவமைதியுடன் எல்லாம் வல்ல இறைவனைப் போற்றி 'தேவ! நினது சித்தப்படியே ஆகுக' என மொழிந்து சாந்தம் எய்தினர்.

'வலது கையாற் செய்யப்பட்ட வுபகாரம் இடது கைக்குத் தெரியவேண்டாம்' என்ற யேசுநாதர்செய்த உபதேசத்தை ஷாப்ட்ஸ்பரி பிரபு விடாதுகைக்கொண்டு ஒழுகினர். பரமதயாளுவானபடியால் அவரிடங் கஷ்டதசையிலுள்ளோர்யாவருங் கூசாமல் வந்து தங்களது குறைகளைச்சொல்லிக்கொண்டார்கள். நம்பிரபுவும்பரிவுடன் அவர் மொழிகளைக்கேட்டு அவரவர்களுக்குத் தகுந்த வண்ணம் திரவியத்தாலும் இதர வழிகளாலும் உபகாரஞ் செய்தார். இவ்விதம் ஆயிரக்கணக்கான ஜனங்கள் நன்மை யடைந்தார்கள். ஆதலின், விசேஷ ஸ்திதிவந்தராயினும் ஷாப்ட்ஸ்பரி பிரபு எப்போதுங் கடனாளியாகவே யிருந்தார். 'ஐயோ! எவ்வளவுக்கு நான் எளியவர்களுக்கு உதவிபுரிய விரும்புகிறேனோ, அவ்வளவுக்குத் திரவிய சௌகர்யம் என்னிடத்தில் இல்லையே! இல்லையே!' என்று மனம் நோவார். 'இலட்சம் பவுன் கடனைக் கொடுக்கவேண்டி யிராமல், லட்சம் பவுன் கையிலிருந்தால் எவ்வளவோ நன்மை செய்ய இயலுமே! ஆயினுங் கடவுளுக்கு அத்தகைய தயவு என்னிடத்தி லில்லையே' யெனத் தமது தினசரிப்புத் தகத்தில் ஒருசமயம் எழுதினர். 'ஏழைக்கிரங்குங் கருணைவள்ளல்' என நம் பிரபுவைக் கூறல் தகுமென்

பதை யுணர்த்தும் சில திருஷ்டாந்தங்களைப் பின் வரைவோம்.

ஒரு சமயம் இவருக்குச் சொந்தமான ஓர் கிராமத்தில் அரசாங்க ராணுவப்படையில் ஒரு பிரிவை, கபாத்து பழகுவதற்காக ராணுவ அதிகாரிகள் அழைத்து வந்து கொஞ்சகாலம் அங்கே தாமதித்தனர். அவ்வதிகாரிகளுள் பிரமுகரைப் பார்க்கவேண்டி நம் பிரபு ஒரு தினம் புறப்பட்டனர். தமது அழகான குதிரை வண்டியில் ஏறிச் சாலை மார்க்கமாய்ப்போகையில் வயது முதிர்ந்த ஒருகிழவி தள்ளாடித் தள்ளாடி நடந்துகொண்டுபோவதைப் பார்த்தார், உடனே அவர் வண்டியை நிறுத்திக் கீழே யிறங்கி அக்கிழவியை யழைத்துவந்து தாம் உட்கார்ந்திருந்த ஆசனத்தில் அவளை யிருக்கச் செய்து பிறகு வண்டியோட்டுகிற வேலைக்காரனுக்குப் பக்கத்தில் தாம் உட்கார்ந்து கொண்டனர்!

ஒருநாள் ஷாப்ட்ஸ்பரி பிரபு ஏழைச் சிறுவர்கள் படிக்கும் ஒரு பள்ளிக்குச் சென்றார். வழக்கப்படி பிரதி வகுப்புக்குஞ் சென்று அங்கங்கே சிற்சில மாணவர்களுடன் வேடிக்கையாய்ப் பேசிக்கொண்டு வந்தார். அவர்களுள் ஒருவனுக்கு ஏதோ முகம் வெளுத்திருந்ததாக அவருக்குத்தோன்றியது. 'ஏனப்பா, உனக்கு உடம்பு செம்மையில்லையா?' என அவனைக்கேட்டார். 'ஒன்றுமில்லை, கொஞ்சகாலமாய் ஆகாரமில்லாமையால் தவிக்கிறேன்' என்றான் சிறுவன். 'எவ்வளவு காலமாய் நீ உணவில்லாதிருந்து வருகிறாய்;' எனப் பிரபு கேட்க, 'இருபத்தாறு மணிகாலமாய் எனக்குத்தின்ன ஒன்றுங் கிடைக்கவில்லை, என மறுமொழி கூறினன். பிறகு ஷாப்ட்ஸ்பரி பிரபு ஓர் சிறுமியிடஞ் சென்று

"குழந்தாய்! உனக்கு என்ன உடம்பு?' எனக் கேட்டனர். 'நிரம்பவும் பசியாயும் குளிராயும் இருக்கிறது,' என அவள் மொழிந்தாள். ஏன்! எனப்பிரபு வினவ, அம்மாது தன் குடும்பத்தினர் மிக எளியவர்களென்றும், வயிறு நிறைய உண்ண ஆகாரம் ஒரு நாளுங் கிடைப்பதில்லை யென்றும், ரொட்டித்துண்டுகளும் தண்ணீருந் தவிர வேறு விதமான ஆகாரம் தனக்கு ஒருபோதுங் கிடைப்பதில்லை' யென்றும் மொழிந்தனள். இதைக்கேட்ட பிரபு மிகத் துக்கமுற்றுக் கண்களினின்றும் நீர் தாரையாய்ப்பெருகச் சீக்கிரம் தம் மாளிகைக்குச்சென்று நானூறு பிள்ளைகளுக்குப் போதுமான உணவை யுடனே சித்தஞ் செய்வித்து அதைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பினர். இவ்விதமாக அநேகதடவைகளில் அவர் தம் மாளிகையிலேயே ஆகாரத்தைச் சித்தப்படுத்திப் பள்ளிச் சிறுவர்களுக்கு அனுப்பியதுண்டு.

ஒருநாள் சாயங்காலம் ஷாப்ட்ஸ்பரிபிரபு தனியாய்த் தம் மாளிகையில் ஓர் அறையில் உட்கார்ந்திருந்தனர். அச்சமயம் அவரது கையில் புகைப்படங்கள் இரண்டு இருந்தன. அவைகளைப் பார்த்த வண்ணமாகவே அவர் இருந்ததுமன்றி அவர் உள்ளங் குளிர்ந்ததற்கு அறிகுறியாக அவர் முகத்தில் விசேஷ காந்தியும், புன்முறுவலுந் தோன்றின. இந்நிலையில் பிரபுவினது நண்பர் ஒருவர் உள்ளேவர அவர் அந்நண்பரை நோக்கி, பின்வரும் விருத்தாந்தத்தை யுரைத்தார் : "சிநேகிதரே! இப்படங்களைப் பாரும். இவைகளைப் பார்த்துப் பார்த்து நான் எவ்வளவோ ஆனந்தம் அடைந்துள்ளேன். இவ்விராஜ்யத்தில் பாதிக்குமேல்

எனக்குச் சொந்தமானாலும் எனக்கு அவ்வளவு சந்தோஷம் உண்டாகாது. இப்படங்கள் சம்பந்தமாய் ஓர்கதை யுளது. வெகு வருஷங்களுக்கு முன் ஒருநாள் நடு ராத்திரியில் இம்மாளிகையின் வாயிற் கதவை யாரோ ஒருவன் தட்டினான். நான அதைக் கவனியாமலே யிருந்தேன். சற்று நேரங்கழிந்தபின் என் வேலைக்காரன் ஒருவனுக்கும் வெளியிலிருந்து வந்தவனுக்கும் பலமாக விவாதம் நடந்தசத்தம் என்காதில் விழுந்தது. உடனே என் அறையினின்றும் வெளியில் வந்து விஷயம் என்னவென்றுபார்த்தேன். வந்தவன், ஒருசிறுகுழந்தையை வேலைக்காரனிடம் விட்டுவிட்டுப் போகயத்தனிக்க அவ்வேலைக்காரனே அக்குழவியையேற்றுக்கொள்ள மறுத்தான். இச்சந்தர்ப்பத்தில் நான் வெளிவந்தபோது அவன் என்னைப்பார்த்து 'பிரபுவே! இக்குழந்தை யென்னுடையது, நான் மிகஎளியவன், ஆதலின், இதைக்காப்பாற்றுஞ் சக்தி எனக்கில்லை. ஆயினும் அதனிடத்துள்ள வாஞ்சையால் அதற்குத்தக்க வுணவு அளியாது அலட்சியஞ் செய்வதற்கும் மனந் துணியவில்லை. 'காப்பதற்கும் வழியறியேன், கைவிடவு மாட்டேன்,' எனும் ஸ்திதியில் இப்போதுள்ளேன். தாங்களே யிக்குழந்தையை ரட்சிக்கவேண்டும்" என்றான். உடனே அவனை யுள்ளே யழைத்துச்சென்று அவன் பேர் ஊர் முதலிய விஷயங்களைக் குறித்துக்கொண்டு குழந்தையையும் ஏற்றுக்கொண்டு அவனை யனுப்பிவிட்டேன். இப்படத்தைப்பாரும். அக்காலத்தில் அக்குழந்தை யிவ்வுருவம் அமைந்திருந்தது. தேகம் மிக இளைத்தும் உடை கந்தையாயு மிருப்பதைக் கவனியும்.

குழந்தையை எவரைக்கொண்டு எவ்விதங் காப்

பாற்றுவதென்று ஆலோசித்து வருங் காலத்து மிஸ்ஸை என்னும் மாது சீக்கிரத்தில் அக்குழந்தையைத் தன்னுடையது போலப் பாவித்துப் போஷிக்குந் தாய் ஒருத்தியைக் கொணர்வதாகச் சொல்லிப் போனாள். சில நாளைக்கெல்லாம் அவள் சொல்லிய வண்ணமே குழந்தை யில்லாத ஓர் உயர்குலத்து ஸ்திரீ, அச்சிறுமியை ஸ்வீகாரஞ் செய்து கொள்வதாக வாக்களித்துக் குழந்தையைத் தருகவென வேண்டினள். உடனே நானும் அதற்கிணங்கினேன். ஈசுவர கிருபையால் அப்பெண்மணி அழகுடன் வளர்ந்து புத்தி மிகுந்து கல்வியிற்றேறி நல்ல பதவியில் இருந்து வாழ்ந்து வருகிறாள். இந்த இரண்டாம் புகைப் படத்தமைந்த உருவம் அவளதே. இதை நினைக்கும் போதெல்லாம் எனக்கு அளவில்லா ஆனந்தம் உண்டாகிறது."

பிறருக் கொருவித வுபதேசஞ் செய்து தாம் பிறிதொருவிதம் நடப்பது நம்பிரபுவின் முறையல்ல. பிறர் எவ்வாறு ஒழுக வேண்டுமெனத் தாம் வற்புறுத்தி வந்தனரோ, அவ்வாறே தாமும் நெறிதவறாது நடந்து கொண்டனர். தேகத்தால் உழைத்துக் கஷ்ட ஜீவனஞ் செய்துவரும் எளியவர்களுக்குப் பலவிதமான நன்மைகளையும் ஸௌகர்யங்களையுஞ் சம்பாதித்துத் தந்தஷாப்ட்ஸ்பரிபிரபு தமக்குச் சொந்தமான கிராமங்களில் புலன்களில் வேலை செய்துவரும் பண்ணையாட்களும் வேறு கூலிவேலை யாட்களும் சுகமாக ஜீவனம் செய்ய வேண்டி, அவர்களுக்கு அவசியமான வசதிகளை யேற்படுத்த வேண்டுமென முயற்சித்தார். ஆயினும் இவரது தந்தை அதற்கு இணங்கவில்லை. அவர் தம் குமாரருக்கு அனுபவ ஞானம் குறைவென்றும் அவர்

விரும்பிய வண்ணங் கூலியாட்களுக்கு எல்லாவித சுகங்களையும் உண்டாக்கி விட்டால் அவர்கள் வேலையே செய்ய மாட்டார்களென்றும் அபிப்பிராயப் பட்டனர். இதனால் தந்தைக்குந் தனயனுக்கும் மனஸ்தாபம் நேர, இருவருந் தனித்தனியே வெவ்வேறு இடங்களில் வசித்துவந்தனர். பக்தியும் அன்பும் குடிகொண்ட மனத்தவரான ஷாப்ட்ஸ்பரி பிரபுவுக்குத் தம் பிதாவிடமிருந்து விலகி யிருப்பது எவ்வளவோ துக்கத்தைத் தந்தது. ஆயினும் 'அறத்தை நிலைநிறுத்துங்கால் தம் அருமைச் சுற்றத்தை நிராகரிக்க வேண்டிவரினும் அது நியாயமாமே' என்ற உண்மையை யுன்னித் தம் துக்கத்தை யடக்கிக்கொண்டு, ஈசனார் தமக்கிட்ட கட்டளைப்படியே யொழுகலாயினர்.

1851-ஆம் வருஷத்தில் அவரது பிதா காலமானார். குடும்பச் சொத்துக்கள் யாவும் அவர் வசமாயின. உடனே, நம்பிரபு நமது கிராமத்தில் தொழிலாளர்களுக்கு வேண்டிய வசதிகள் யாவற்றையும் ஏற்படுத்தித் தர முயற்சி செய்தனர். குடியிருப்பு வீடுகளெல்லாம் மிக நெருக்கமாயும் வெளிச்சமுங் காற்றோட்டமு மில்லாது அசுத்தமாயு மிருந்ததால் அவைகளை யெல்லாங் கொஞ்சங் கொஞ்சமாய் இடித்துவிட்டு வேறு வீடுகளைக் கட்டினர். அவ்வீடுகள் சுகாதார வசதிகள் யாவும் நிறைந்து விசாலமா யவசியமான அறைகளும் அடங்கப்பெற்று, அழகா யமைக்கப் பட்டிருந்தன. ஒவ்வொரு வீட்டுக்குச் சுற்றிலுங் கொஞ்சம் காலியிடம் விடப்பட்டிருந்தது. குடியிருக்கும் வேலையாட்கள் ஓய்வு நேரங்களில் அந்தஸ்தலத்தைப் பண்படுத்தித்தோட்டம் ஆக்க வேண்டுமென்பது பிரபுவின்

கருத்து. அது விஷயத்தில் அவர்களுக்கு உற்சாகம் பிறக்குமாறு பிரதி வருஷமும் எந்த வீட்டைச் சுற்றிலுமுள்ள தோட்டம் மிக நேர்த்தியா யிருந்ததோ அவ் வீட்டுக் காரனுக்கு உயர்ந்த ஓர் பரிசளித்து வந்தனர்.

கிராமத்திலுள்ள கள்ளுக்கடை வழக்கம்போல் எப்போதும் திறந்திருக்கப் படாதென்றும், இரவில் ஒன்பது மணிக்கு அது மூடப்பட வேண்டுமென்றும், உத்தரவு செய்தார். சிறுவர்களின் கல்விப் பயிற்சியை யுத்தேசித்து ஓர் பள்ளிக்கூடத்தை யேற்படுத்தினர். கிராமத்திலுள்ள கோயிலைப் பழுது பார்ப்பித்து ஜனங்களுக்கு மதபோதனை தவறாது பிரதிதினஞ் செய்யுமாறு ஒரு ஆசாரியரை நியமித்தார். வருஷத்துக் கொரு முறை கிராமத்தி லுள்ளார் யாவரையுந் தம்மாளிகைக்கு அழைத்து அவர்களுக்கும் பெரியதோர் விருந்தளித்து வந்தார்.

இன்னும் எவ்வளவோ சீர்திருத்தங்களைச் செய்ய நினைத்தார். ஆயினும் தாராளமாய்ச் செலவு செய்யக் கையில் பணமில்லை யாதலின் தம் இஷ்டப்படி நடக்க இயலவில்லை. ஆயினும் அக்காலத்தில் நம் பிரபுவின் கிராமம் இருந்ததுபோல வேறொரு கிராமமும் இல்லை யென நிச்சயமாய்க் கூறலாம்.

நம்பிரபு மனச் சோர் வில்லாமலும், தேகசிரமத்தைப் பாராமலும் என்றும் ஜனசமூக நன்மைக்காகப் பாடுபடுவதை யுத்தேசித்து பிரதான மந்திரி, அவருக்கு ஓர் உயர்ந்த பிருதையளிக்க வேண்டுமெனக் கருதி அதை அவர் அங்கீகரிக்க வேண்டுமென்று, பிரார்த்திப்பதாக ஒரு கடிதம் எழுதினார். ஷாப்ட்ஸ்பரி பிரபுவுக்கு அக்கடிதத்திற்கு யாது

பதில் எழுதுவதென்று முதலில் தோன்றவில்லை. ஆதலின் பின் வருமாறு யோசிக்கலாயினர்: “இது விஷயத்தில் முக்கியமாய்க் கவனிக்க வேண்டியது யாதெனில் இந்தப் பிருதைப் பெற்றுக் கொண்டால் அது காரணமாகப் பிறருக்கு நன்மை செய்யுஞ் சக்தி எனக்கு அதிகமாகுமா! குறையுமா! என்பதே. என்பத்தினியோ நான் இதுகாறுஞ் செய்துள்ள நற்காரியங்களுக்கு ஓர் அத்தாட்சியாக இந்தப் பிருது அளிக்கப்படுவதாதலின் அதை ஒப்புக் கொள்ள லாமென்று சொல்லுகின்றனள். ஆனால் எனக்கு அவ்வித அபிப்பிராயமில்லை. அவ்வாறு ஏற்றுக் கொள்ளல் என்னால் இயற்றப்பட்ட நற்காரியங்களுக்குப் பிரதி பிரயோஜனத்தைப் பெற்றுக் கொள்ளுவதாகக் கருதப்படுமன்றோ! “வறியார்க்கொன் றீவதே யீகை மற்’றெல்லாங் குறியெதிர்ப்பை நீரதுடைத்து’ என்றே பெரியாரும் பணித்துள்ளார். விஷயந் தெரியாதவர்களும், என்னிடத்து மதிப்புக்குறைந்தவர்களும், ‘ஆம்! ஆம்! இவ்வுலகில் சுயநன்மை பாராட்டுவதுதான் ஜனங்களுக்கு சகஜம்; பிறருக்கு உதவி செய்யப் பாடு படுபவர்களும் தங்களுக்கு ஏதாவது கௌரவம் கிடைக்கமாட்டாதாவென்றே எப்பொழுதுஞ் சிந்திக்கிறார்கள். மனத்தூய்மையுடனுந் தருமத்துக்குக் கைம்மாறு தருமஞ் செய்தலே யென்ற உயர்ந்த நோக்கத்துடனும் அறஞ்செயல் இல்லை யென்றே சொல்லவேண்டுமென்று நிந்தியார்களோ! வேறொரு சாரார் பரிகாசஞ் செய்யாமலிருப்பரோ! , அன்றியும் இக்கௌரவத்தை யளித்த கவர்ன்மெண்டார், ஏதேனுந் தவறான காரியங்களை யியற்ற நேர்ந்தால், அப்போது அவர்களைக்கண்டித்துப்

பேச ஒருவாறு என் மனங் கூசுமன்றோ!'' இவ்வாறு மீண்டும் மீண்டும் ஆலோசித்துக் கடைசியாய்ப் பிருதை அங்கீகரிக்கா திருத்தலே யுக்தம் என மனந்தெளிந்து பிரதான மந்திரிக்குத் தம் அபிப்பிராயத்தைத் தெரிவித்துத் தம்மை மன்னிக்குமாறு அவரை வேண்டிக் கொண்டனர்.

இது நடந்த சிலவருஷங்க ளாயினபின் மீண்டு மொருமுறை மிக உயர்ந்த ஒரு உத்தியோகத்தை யேற்றுக் கொள்ளுமாறு பிரதானமந்திரி, பிரபுவை வேண்டினர். அப்பொழுதும் அவர் அதை மறுத்தனர். தாம் பல வருஷங்களாகச் செய்துவந்த நற்காரியங்களுக்கு இடையூறு வருமே யென்ற பயம்தான், அவர் மேற் சொன்ன அதிகாரத்தை யொப்புக் கொள்ளாத தற்குக் காரணம்.

நாடெங்கும் பிரபுவினது பேர் பரவவே தருமசிந்தனைகொண்டு தருமகாரியங்களில் பொருட் செலவு செய்ய எண்ணிப் பலரும், தாங்கள் செலவிட விருந்த திரவியத்தைப் பிரபுவிடம் அனுப்பி அவருக்கு யுக்தமாகத் தோன்றிய வண்ணமே அதை விநியோகஞ் செய்யலா மெனச் சொல்லி வந்தார்கள். பிரபுவும் இன்ன இன்ன துறைகளிற் செலவு செய்தல் அவசியமென்று தெரிந்துள்ளா ராதலின் கிடைத்த திரவியம் யாவற்றையும் வெகு உபயோகமான வழிகளிலேயே செலவு செய்தனர். 1885-ஆம் வருஷத்தில், ஓர் சீமாட்டி, அறுபதினாயிரம் பவுனைப் பிரபுவிடம் அனுப்பி, அதை அவர் தம்மிஷ்டப்படி ஏழைகளின் நன்மையின் பொருட்டு உபயோகிக்கலாம் எனச் சொல்லிப் போயினள். அக்காலத்தில் பிரபுவுக்கு வயது எண்பத்

தைந்து. தேகபலமும் மனோபலமும் வெகுவாய்க் குறைந்த தசை. ஆயினும் சில சிநேகிதர்களுடைய உதவியைப் பெற்று மிகவும் சிரத்தையுடன் யாரும் ஒருவித குற்றங்குறை சொல்லா வண்ணம் அந்தப்பணம் முழுவதையும அவர்விநியோகஞ் செய்தார்.

XVII ஷாப்ட்ஸ்பரி பிரபுவின் அந்தியதசையும் மரணமும்

எண்பது பிராயத்துக்கு மேலாகியும் நம் ஷாப்ட்ஸ்பரிபிரபுவுக்கு ஊக்கமுஞ் சுறுசுறுப்புங் குறையவேயில்லை. பிரதி தினமும் ஏதேதோ தொழின் முயற்சிகள் ஏற்பட்டிருந்ததனால் ஒரு நிமிஷமேனும் வீணுக்குக் காலங்கழிய வில்லை. சந்தோஷத்துடனும் உற்சாகத்துடனும் வேலைசெய்தலே மனிதருக்கு ஆயுளைவிருத்தி செய்யும் ஒப்பற்ற மருந்தெனலாம். அதனுண்மையும் பிரபுவிடத்தில் பிரதியட்சமாய்க் காணப்பட்டது. அவரது எண்பத்து மூன்று, எண்பத்து நான்காவது வருஷங்களில் வரையப்பட்டுள்ள தினசரிப் புத்தகங்களைப் பார்க்கின் அவர் அந்த வருஷங்களில் இயற்றிய காரியங்கள் இன்னவெனத் தெரியும். அவைகள் அளவிறந்தன என்றால் மிகையாகாது. ஆயிரப்பவுன் கணக்காய்த் திரவியம் ஏழைகளுக்குக் கொடுத்து உதவப்பட்டது. நூற்றுக் கணக்கான சபைகளில் அவர் அக்கிராசனம் வகித்தார். தந்தேசத்திலும் பிறதேசத்திலும் ஆயிரக் கணக்கானவர்களோடு பொது ஜனநன்மை விஷயமாக அவர் கடிதப் போக்குவரவு செய்

தனர். ஏழை ஜனங்களின் நன்மைக்காக வேற்பட்ட சங்கங்களையும் ஸமாஜங்களையும் நேரிலேயே போய்ப் பார்த்து அவைகளைப் போஷித்து வருபவர்களுக்குச் சிரத்தையையும் உற்சாகத்தையும் ஊட்டுவித்தனர். அருள்சேர்ந்தநெஞ்சினராதலின் அவர், சாதாரணஜனங்களை வாட்டுங் காமம், வெகுளி, மயக்கம் என்ற துர்குணங்களுக்குத்தினையளவும் ஈடுபடாதவராய், சாந்தராய், நிதான சித்தராய்,

மன் னுயி ரோம்பி யருளாள் வார்க் கில்லென்ப
தன்னுயி ரஞ்சும் வினை.

என்ற மூதுரைக்கு ஓர் அத்தாட்சியாக விளங்கினர்.

ஆயினுந் தேகவலி வரவரச் சற்றுக்குறைய வாரம்பித்தது. அது குறையக்குறைய அவரது தூய்மையான ஆத்துமாவின் பிரகாசமும், மனவொளியும் மிகுந்து கொண்டே வந்தன. களங்கமற்ற ஆகாயத்தில் மாலைச் சூரியன் பிரகாசிக்குங்கால் அவனது கிரணங்கள்பட்டு எல்லாப்பதார்த்தங்களும் பொன்மயமாய் விளங்கி எவ்விதம் மனதை ஆனந்தப் படுத்துமோ அவ்விதமே நம்பிரபுவும் தம் அந்திய தசையில் தம்மைப் பார்க்கவந்தவர்களது இருதயத்தைப் பிரகாசிக்கச் செய்து அன்பு, அருள், பொறை, அடக்கம் முதலிய நற்குணங்கள் அவர்களிடம் விளங்கச் செய்தனர்.

1885 ஆம் வருஷம் ஜூலை மாதத்தில் பிரபுவுக்கு அதிக பலஹீனம் ஏற்பட்டது. இனி அதிக காலம் ஜீவித்திருக்கமாட்டோம் என்ற எண்ணம் மனத்தில் உதித்தது. லண்டன் நகரத்தை விட்டு நீங்கிப் போக்ஸ்டோன் பட்டணத்துக்குப் போகவேண்டுமென

வைத்தியர்கள் வற்புறுத்தினார்கள். இறந்து விடுவோமே என்ற பயங் கொஞ்சமேனும் பிரபுவுக்கில்லை. ஆயினும், எவ்வளவோ நற்காரியங்கள் செய்து முடிக்கப்படாமல் மிகுந்துள்ளனவே யென்று மாத்திரம் அடிக்கடி சொல்லுவர். கடைசியாய்ப் போக்ஸ்டோனுக்குப் போவது என்று தீர்மானமான பிறகு தேக சிரமத்தைக் கொஞ்சமும் பாராது லண்டனில் தமது சம்பந்தமுள்ள ஒவ்வொரு சங்கத்தையும், ஸமாஜத்தையும் போய்ப்பார்வையிட்டு வந்தார். அவைகளின் தொகை இருநூறுக்கு மேற்பட்டது. ஒவ்வோரிடத்திலுஞ் சற்றுத் தாமதித்து ஏழைச்சிறுவர்களிடத்தும் வயது வந்தவர்களிடத்தும் பிரியமாய் வார்த்தையாடி, நான் இனி உங்களை மறுபடியும் பார்ப்பேன் எனத்தோன்றவில்லை. ஆயினும் என்மனம் உங்களிடத்தேயே இருக்கும். நீங்களெல்லோரும் ஈசுவரபக்தி மிகுந்து சன்மார்க்கத்தில் நடந்து சுகஜீவிகளாயிருந்து, ஆன்ம லாபத்தை யடைவீர்களாக எனச் சொல்லி யாசீர்வதித்தார். அதைக்கேட்டவர் யாவரும் நெஞ்சமுருகிக் கண்ணீர் பெருகப் பிரபுவை வணங்கி, 'ஐய! உமது முயற்சியால் நாங்கள் புதிய உயிர் பெற்றவர்களானோம், அஞ்ஞானம் என்னும் அந்தகாரத்தில் மூழ்கிக் குடி, களவு, கொலைமுதலிய தீச்செயல்களுக்கு ஈடுபட்ட எம்மை ஞானமுடையவர்களாகச் செய்து,தீச்செயல்களில் வெறுப்புண்டாகும் வண்ணஞ் செய்த உமது கருணைக்கு எங்ஙனம் நாங்கள் கைம்மாறு புரிவோம்?' என மீண்டும் மீண்டும் புகழ்ந்தனர்.

ஜுலை மாதம் 25-ஆம் தேதி பிரபு, போக்ஸ்டோன் பட்டணத்துக்குப் போய்ச்சேர்ந்தார். வந்து

கொஞ்சநாளைக்குள் ஒருவாறு தேகங் குணப்பட்டுச் சற்று வெளியிற்போய் உலாவிவருமாறு சிறிது சக்தியுமுண்டாயிற்று. ஆயினுங் கொஞ்சம் அஜாக்கிரதையாயிருந்ததனால் மறுபடியும் அசௌக்கிய மடைந்து வீட்டைவிட்டு வெளியே போகச் சாத்தியமற்றவராயினர். வீட்டுக்குள்ளே சஞ்சரிப்பதற்குப் போதுமான பலம் மாத்திரம் இல்லாமற்போகவில்லை. என்றாலும், படுக்கையிலிருந்த வண்ணமேதான் பகற்காலத்தின் மிகுதியையும் போக்கினார்.

அவர் படுத்திருந்த அறையினின்று பலகணி வழியாய் நோக்கின், பசும் புல்லடர்ந்த தரையும், பச்சிலைமிகுந்த மரங்களும், அப்பால் நீல நீர் பரந்தகடலும் காணப்படும். அவைகளைப் பார்த்துப் பார்த்து ஈசனது சிருஷ்டியின் விந்தையை யாரே அறிவர்! யாரேஅறிவர்! என அடிக்கடிசொல்லுவர். பிரதிதினமுங்காலையில்தமது செல்வப்புதல்வியை யழைத்துப் பைபில் புஸ்தகத்தை வாசிக்கச் சொல்லிக்கேட்பர். அதனுள்ளடங்கிய கீதங்களுள் இருபத்து மூன்றாங் கீதத்தைத் தவறாது பாடச் சொல்வர். அக்கீதத்தின் பொருள் பின் வரும் செய்யுளால் அறியலாகும்.

ஈசனா ருளிருக்க வினிப்பய முறுவ தேனோ!
பாசமாங் தீங்கைப் போக்கிப் படுகட லாசை தாண்டித்
தாசராம் புதல்வர் யாரும் தவறிலா மனத்தராகி
யாசில வீட்டில் வைக வருளுவ னீசா னன்றோ!

இவ்வாறு மூன்று மாதகாலம் வரையிலும் நம் பிரபு ஜீவித்திருந்தார். தாங்கப்படாத தேகவலி சிறிதும் இல்லாதவராய், மனநிலை கொஞ்சமேனும் கலங்கா

தவராய், அன்பு மிகுந்த தம் புதல்வர் புதல்விகளாற் சூழப்பட்டவராய், நீங்கள் எல்லோருஞ் சுகஜீவிகளாய், அரோகத்ருட காத்திரர்களாய், வாழையடி வாழையாய் வாழி வாழி என ஆசிமொழிகளை யடிக்கடி கூறினவராய், இறைவனது அடிசேரவிருக்கும் எனக்கு இன்பமேயென்னாளுந் துன்பமில்லையென மனோதைரியமுற்றவராய்ச், சாந்தம் நிரம்பிய சித்தத்தினராயிருந்து அக்டோபர் மாதம் முதல் தேதியன்று, பூமியும் ஆகாயமுங் களங்கமற்றிருந்து சூரியன் பிரகாசித்துக்கொண்டிருக்குஞ் சமயத்தில் உயிர்நீத்தார்.

அவரது சவமடங்கிய பெட்டியைப் போக்ஸ்டோனிலிருந்து லண்டனுக்கு அவரது குடும்பத்தினர் கொண்டுவந்தார்கள். தெருக்கள் வழியாய்ப் பெட்டியைத் தூக்கிச் செல்லும்போது பதினாயிரக் கணக்கான ஆடவரும், பெண்டிரும், குழந்தைகளும் துக்க வுடையுடுத்து, அதைப்பின் தொடர்ந்து சென்றனர். 'அநாதர்களுக்கன்பரே! எம்மை விட்ட கலலாமோ?' எனக்கதறினர் சிலர். 'ஏழைகளுக்கடைக்கலமே! இனி யாம் எங்குறைவோம்?' எனப்புலம்பினர் வேறுசிலர், 'கருணையாங் கதிரவன் மறையவே துக்கமாங்காரிருள் மூண்டதே, இனி என் செய்வோம்?' என ஓலமிட்டனர் ஒரு சாரார். துன்புற்றுத் தத்தளித்ததுர்ப்பாக்கியருக்கே தாயுமாய்த் தந்தையுமாய்த்தஞ்ச மீந்த பெருமானே!' எனப் போற்றினர் பிறிதொரு சாரார். இவ்வாறு குழுமினவர் யாவரும் துக்க முற்றுக் கண்ணீர் பெருக 'வெஸ்ட்மின்ஸ்டர் அப்பி' என்ற கோயிலுக்குச்சென்று சேர்ந்தனர். சவப்பெட்டியும் அதனுள் வைக்கப்பட்டது. உடனே லண்டன் நகரத்

துப் பிரதான மதகுரு அவ்விடம் வரவே யாவரும் மண்டிபோட்டு, 'காலஞ்சென்ற பேரியோரது ஆத்துமாவுக்குச் சாந்தியும் பொறையும் அளித்தருள்க' என 125
ஈசனைப் பிரார்த்தித்தனர். பிறகு அப்பெட்டியைப்பிரபுவினது சொந்தக் கிராமத்துக்கு எடுத்துப்போய் அங்குள்ள சிறு கோயிலுக்கருகே அதை அடக்கஞ் செய்தார்கள்.

தனக்கென யாதும் வேண்டாத் தன்மையோர்பெரியோ ராவர்
மனத்தினிற் கவலை கொள்வார் மானிடர் நன்மை யுன்னிக்
கனத்தமாண் புடைய வன்னார் கருணையை யுவந்து போற்றி
யினித்திடு மவர்தந் தொண்டை யெழிலுறப் பற்றி வாழ்வாம்

BRITISH PRESS, MADRAS.

ERRATA

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
12	48	சிந்திக்கலயினர்	சிந்திக்கலாயினர்
14	29	கோட்கைக்குள்	கோட்டைக்குள்
23	18	முதிகல்லு ரெயிச்சூர்	முதிகல்லு, ரெயிச்சூர்
39	5	சேளையுடன்	சேனையுடன்
39	9	ஸாம்ராயத்துக்கும்	ஸாம்ராஜ்யத்துக்கும்
41	20	காளாஸ்தி	காளத்தி
86	30	போர்ட்டிங்	போர்டிங்
86	33	கற்பிக்கப்பட் டவை-கள்	கற்பிக்கப்பட்டவைகள்
93	114	நற்காரியங்க [ளிளெல்லாம்	நற்காரியங்களிலெல் [லாம்
94	20	சுற்றுப்பக்க [ளிலெல்லாம்	சுற்றுப் பக்கங் [களிலெல்லாம்
102	172	செய்யம்	செய்யும்
126	26	ஓய்வோ	ஓய்வோ
130	20	சொந்தக்கார்	சொந்தக்காரர்
134	11	வேலையைக் [செய்தாவது	வேலையைச் செய்தாவது
135	33	பின்பற்றுவீர் [களாக?	பின்பற்றுவீர்களா?
142	11	(செய்யுள்வரி) மெனமே	மெனவே
155	24	துர்குணங்களுக்கு	துர்க்குணங்களுக்கு
157	2	(செய்யுள்வரி) பாசமாங்	பாசமாந்

11·4·59